Digitization by eGangotri-South Center

# முண்டக உபநிஷதம்

## நிழலும் நிஜமும்



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

**முன்பக்கப் படம்**

ஒருமுறை சுவாமி விவேகானந்தர் வேதகால முனிவர் ஒருவரைத் தெய்வீகக் காட்சியில் கண்டார். அந்த முனிவர் சிந்துநதிக் கரையில் நின்றபடி காயத்ரீ ஆவாஹன மந்திரத்தை உணர்ச்சிப் பெருக்குடன் ஓதியது சுவாமிஜியின் காதுகளில் தெளிவாக விழுந்தது:

ஆயாஹி வரதே தேவி த்ர்யக்ஷரே ப்ரஹ்மவாதினி।
காயத்ரி சந்தஸாம் மாதர் ப்ரஹ்மயோனி நமோஸ்துதே ॥

['காயத்ரீதேவி! வரங்களை அளிப்பவளே! ஓம் என்னும் பிரணவ மந்திரத்தால் பரம்பொருளைக் காட்டுபவளே! வேதங்களின் தாயே! சக்தியின் வடிவே! உன்னை வணங்குகிறேன். கருணை கூர்ந்து இங்கே எழுந்தருள்வாய்!']

வேத உபநிஷத மந்திரங்கள் எல்லாம் இத்தகைய முனிவர்களின் அனுபூதிச் செல்வம் என்பது சுவாமிஜிக்குப் புரிந்தது.


CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

# முண்டக உபநிஷதம்

## நிழலும் நிஜமும்



விளக்கியவர்
சுவாமி ஆசுதோஷானந்தர்

ஸ்ரீராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர், சென்னை-600 004

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வெளியிடுபவர்:
தலைவர்
ஸ்ரீராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர், சென்னை-4

© ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை
உரிமைப் பதிவு பெற்றது

I-5M 3C-11-2002
ISBN 81-7823-015-1

அச்சிட்டோர்:
ஸ்ரீராமகிருஷ்ண மடம் அச்சகம்
மயிலாப்பூர், சென்னை-4

அட்டைப்படம், உள்படங்கள் : மணியம் செல்வன்
வடிவமைப்பு : ரவி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



# பதிப்புரை

ஒரு கணம்கூட இடையீடின்றி வாழ்க்கை நமக்கு அனுபவங்களைக் கொண்டு வந்த வண்ணம் இருக்கிறது. அவற்றுள் சில இன்ப அனுபவங்கள், சில துன்ப அனுபவங்கள். இன்பம் வரும்போது மகிழ்கிறோம், துன்பம் வரும்போது துவள்கிறோம். இவ்வாறு நமது வாழ்க்கை மகிழ்ச்சிக்கும் துயரத் திற்கும் இடையில் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. ஓயாத இந்த ஓட்டத் திற்கு முடிவே கிடையாதா, விடிவே கிடையாதா என்று மனம் சிலவேளை களில் அங்கலாய்க்கிறது. உண்டு, விடிவு உண்டு என்கிறது முண்டக உபநிஷதம். 'நீ நிழலைப் பற்றிக்கொண்டு அதனுடன் யுத்தம் செய்கிறாய். அதை விட்டுவிட்டு நிஜத்தைப் பற்று' என்று கூறுகிறது இந்த உபநிஷதம்.

முதன்முதலாக உபநிஷதங்களைப் படிப்பவர்களும் எளிதாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த மொழிபெயர்ப்பு வெளியிடப்படு கிறது. இதனை மொழிபெயர்த்தவர் எமது மடத்தின் துறவியாகிய சுவாமி ஆசுதோஷானந்தர்.



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



அச்சுப்பிரதியைத் திருத்துவதில் மடத்து பிரம்மச்சாரிகளும் பக்தர்களும் உதவினர். அழகிய அட்டைப் படத்தையும் உள்படங்களையும் வரைந்தவர் ஓவியர் திரு. மணியம் செல்வன். புத்தகத்தை வடிவமைத்தவர் ஓவியர் திரு. ரவி. இந்தப் பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் எம்பெருமான் திருவருள் பொழிவாராக!

ராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷனின் பொதுச் செயலரும் பேரறிஞருமான ஸ்ரீமத் ஸ்மரணானந்த சுவாமிகள் முழு நூலைப் படித்து, வேண்டிய திருத்தங்களைச் செய்தார்; ஆலோசனைகள் வழங்கினார். இது இந்த மொழி பெயர்ப்பில் பேருதவியாக அமைந்தது.

இத்தகைய ஒரு மொழிபெயர்ப்பு நூல் தமிழில் முதன்முதலாக வெளிவருகிறது. தமிழன்பர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வார்களாக. உயர் வாழ்வை நாடுகின்ற அனைவருக்கும் இந்த உபநிஷத மந்திரங்கள் வழிகாட்ட இறைவனின் பேரருளை நாடுகிறோம்.

ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை
நவம்பர் 2002

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

# பொருளடக்கம்

பதிப்புரை v
முண்டக உபநிஷதம் : ஒரு கண்ணோட்டம் ix
சாந்தி மந்திரம் 1

1:1 சாதாரண அறிவும் உயர் அறிவும் 5

1. ஆன்மீக அறிவே அனைத்து அறிவுகளின் அடிப்படை : 1*
2. பரம்பரையாக வருவது ஆன்மீக அறிவு: 2
3. அடிப்படை அறிவு ஒன்று உண்டா?: 3
4. இரண்டு வகை அறிவுகள்: 4–5
5. உயர் அறிவு: 6–9

1:2 போகமும் துறவும் 23

1. சிறப்பாக வாழ வழி: 1
2. யாகம்: ஒரு காட்சி: 2
3. அக்னி ஹோத்ரம்: 3
4. அக்கினியின் ஏழு பண்புகள்: 4
5. யாகங்களின்மூலம் போகங்கள்: 5–6
6. சுகபோகங்கள் பலவீனமான படகுகள்: 7–10
7. துறவு: 11–13

* உபநிஷத மந்திர எண்கள்.



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



2:1 ஜோதியும் சுடரும் 45

1. நாம் தெய்வீகமானவர்கள்: 1
2. இறைவன்: 2–10

2:2 உன்னை அறி! 59

1. ஆன்மாவை அறி: 1–2
2. இறைவனை அறி: 3–4
3. ஆன்ம அனுபூதி: 5–7
4. இறையனுபூதி: 11

3:1 நிழலும் நிஜமும் 81

1. நம்முள் இருவர்: 1–2
2. ஆன்ம தரிசனம்: 3–9

3:2 இறையனுபூதி 101

1. முதற்படி: ஆன்ம ஞானம்: 1
2. ஆன்ம ஞானம் ஏன் அவசியம்?: 2
3. ஆன்ம ஞானத்திற்கான நிபந்தனைகள்: 3–4
4. ஆன்ம ஞானி இறைவனை அடைகிறான்: 5–6
5. ஆன்ம ஞானியின் உடல் வீழும்போது என்ன நடக்கிறது?: 7–8
6. இறையனுபூதியின் விளைவு: 9
7. உயர் உண்மைகளை யாருக்குச் சொல்வது?: 10
8. மாமுனிவர்களுக்கு வணக்கம்: 11

அகராதி 120

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

# முண்டக உபநிஷதம்

## ஒரு கண்ணோட்டம்

### வேதங்கள்

உலகின் பெரும் பகுதி அறியாமை இருளில் மூழ்கி ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த போது, பாரதத் திருநாடு ஆன்ம ஒளியில் விழித் தெழுந்தது. அதன் தவப்புதல் வர்களாகிய ரிஷிகள், 'இரு ளுக்கு அப்பால் பொன்னிறத் தில் ஒளிர்கின்ற மகிமை வாய்ந்த பரம்பொருளை அறிந்துகொண்டேன். அவரை அறிவதால் மட்டுமே மரணத்தை வெல்ல முடியும். வேறு எந்த வழியும் இல்லை'[1], 'அழியாத அமரத் துவத்தின் குழந்தைகளே, கேளுங்கள்'[2] என்று பூமியில் வாழ்பவர்களை மட்டுமல்ல, பிற உலகங்களில் வாழ் வோரையும் அறைகூவி அழைத்தனர். 'குறித்து வைக்கப்பட்ட சரித்திரமோ,

---

1. வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம் ஆதித்ய வர்ணம் தமஸ: பரஸ்தாத் । தமேவ விதித்வா ऽதிம்ருத்யுமேதி நான்ய: பந்தா வித்யதே ऽயனாய ॥ —சுவேதாஸ்வதர உபநிஷதம், 3.8.

2. ச்ருண்வந்து விச்வே அம்ருதஸ்ய புத்ரா: । —சுவேதாஸ்வதர உபநிஷதம், 2.5.



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



பாரம்பரியத்தின் மங்கிய வெளிச்சமோகூட ஊடுருவ முடியாத, காலத்தின் அந்த நீண்ட நெடுந்தொலைவில்'[1] இந்த உலகைப் புனிதமாக்கியபடி வாழ்ந்த அந்த ரிஷிகள் அனுபூதியில் கண்ட உண்மைகளின் தொகுப்பே வேதங்கள்.

உலகிலேயே மிகப்பழைய நூல் இந்தச் சிந்தனைக் கருவூலம்தான். 'இது எப்போது தோன்றியது என்பது ஒரு வருக்கும் தெரியாது. இக்கால ஆராய்ச்சியாளர்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும். இது எட்டாயிரம் அல்லது ஒன்பதாயிரம் வருடங்களுக்கு முன்பு தோன்றியதாக இருக்கலாம். ... ஆனால் அன்று போலவே இன்றும் அவை புதுமை மாறாமல் இருக்கின்றன; ஏன், முன்னைவிட புதுப் பொலிவுடன் திகழ்வதாகவே கூறலாம்.'[2]

வேதங்கள் யாராலும் எழுதப்பட்டவை அல்ல. என்றென்றும் நின்றுநிலவுகின்ற உண்மைகளின் தொகுப்பே வேதங்கள். 'புவியீர்ப்பு விதி, அது கண்டறியப்படும் முன்னரே இருந்தது, மனித இனம் முழுவதும் அதை மறந்து விட்டாலும் இருக்கும். அவ்வாறுதான் ஆன்மீக உலகின் விதிகளும். ... அவை கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னரும் இருந்தன, நாம் அவற்றை மறந்தாலும் இருக்கும்'[3] என்று எழுதுகிறார் சுவாமி விவேகானந்தர். ரிஷிகள் அவற்றை வெளிப்படுத்தினார்கள், அவ்வளவுதான்.

அவ்வாறு ரிஷிகள் வெளிப்படுத்திய அந்த உண்மைகள் பின்னாளில் வியாச முனிவரால் நான்காகத் தொகுக்கப் பட்டன. அவை ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்கள். ஒவ்வொரு வேதமும் மூன்று முக்கியப் பிரிவாக பிரிக்கப் படுகின்றன. அவை சம்ஹிதை (தேவர்களிடம் பிரார்த்தனைகள்), பிராம்மணம் (யாக விவரங்கள்), ஆரண்யகம் (உபநிஷதங்கள்; அறுதி உண்மையைப்பற்றிய ஆராய்ச்சி).

---

1. சுவாமி விவேகானந்தரின் ஞான தீபம், 5.260; (11 பகுதிகள், சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்து வெளியீடு; இனி 'ஞானதீபம்' என்று குறிக்கப்படும்).
2. ஞானதீபம், 3.219.
3. ஞானதீபம், 1.35.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



## உபநிஷதங்கள்

உபநிஷதங்கள், பிரம்ம சூத்திரம், ஸ்ரீமத் பகவத்கீதை மூன்றும் 'ப்ரஸ்தான த்ரயம்' என்று வழங்கப்படுகின்றன. அறுதிப் பிரமாணமாக அமைந்த மூன்று நூல்கள் என்பது இதன் பொருள்.

வேதகாலச் சிந்தனையின் மணிமகுடமாகத் திகழ்பவை உபநிஷதங்கள். அறுதி உண்மையைப் பற்றிய ஆராய்ச்சியில் மனித மனத்தால் தொடக்கூடிய எல்லையை உபநிஷதங்கள் தொட்டுவிட்டன என்றே உலகின் சிந்தனையாளர்கள் கருதுகின்றனர்.

உபநிஷதங்கள் பல. அவற்றுள் 108 பொதுவாகக் கணக்கில் கொள்ளப்படுகின்றன. அவற்றில் 14 உபநிஷதங்கள் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. அவை ஈச, கேன, கட, ப்ரச்ன, முண்டக, மாண்டூக்ய, ஐதரேய, தைத்திரீய, சாந்தோக்ய, பிருஹதாரண்யக, சுவேதாஸ்வதர, கௌசீதகி, மஹா நாராயண, மைத்ராயணி உபநிஷதங்கள் ஆகும். இவற்றுள் முதல் பத்து உபநிஷதங்களுக்கு ஸ்ரீசங்கரர் விளக்கவுரை எழுதியுள்ளார். 14 உபநிஷதங்களும் கீழ்க் கண்ட பட்டியலின்படி நான்கு வேதங்களில் அமைந்துள்ளன.

| உபநிஷதம் | வேதம் |
|---|---|
| ஐதரேய, கௌசீதகி | ரிக் |
| ஈச, கட, தைத்திரீய, பிருஹதாரண்யக, சுவேதாஸ்வதர, மைத்ராயணீ, மஹாநாராயண | யஜுர் |
| கேன, சாந்தோக்ய | சாம |
| பிரச்ன, முண்டக, மாண்டூக்ய | அதர்வண |

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



## முண்டக உபநிஷதம்

அதர்வண வேதத்திலுள்ள 28 உபநிஷதங்களுள் ஒன்று இது. 'முண்ட' என்ற மூலச்சொல்லிலிருந்து வந்தது 'முண்டகம்'. 'முண்ட' என்றால் 'நீக்குதல்'. 'நிழலைப் பற்றிக் கொண்டிருக்கிறாய்' என்று நமது அறியாமையைச் சுட்டிக்காட்டி, நிஜம் எது என்பதை எடுத்துக் கூறி, நமது அறியாமையை நீக்க இந்த உபநிஷதம் முயற்சி செய்கிறது. எனவே முண்டக உபநிஷதம் என்று வழங்கப்படுகிறது.

'முண்ட' என்றால் 'மழித்தல்'; தலையை மழித்த வர்களான துறவியருக்கு உரிய உபநிஷதம் இது என்றும் பொருள் கொள்ளப்படுகிறது.

இந்த உபநிஷதத்தில் மூன்று முண்டகங்கள் (பகுதிகள்) உள்ளன. ஒவ்வொரு முண்டகத்திலும் இரண்டு உட் பிரிவுகள் உள்ளன. இந்த ஆறு உட்பிரிவுகளிலுமாக மொத்தம் 64 மந்திரங்கள் உள்ளன.

## உபநிஷதக் கரு

நிழலை உண்மை என்று நம்பி, அதன் பின்னால் ஓடு கிறோம் நாம். தவறான திசையில் நாம் செய்கின்ற இந்தப் பயணம்தான் நமது ஏமாற்றங்கள், துன்ப துயரங்கள் அனைத் திற்கும் காரணம். எனவே, 'நிழலைவிட்டு நிஜத்தைப் பற்று' என்று வற்புறுத்துகிறது இந்த உபநிஷதம்.

உடம்பு, மனம், ஆன்மா என்று பல பகுதிகளால் ஆனவன் மனிதன். இதில் உடம்பும் மனமும் மாறக்கூடியவை, நிழல். ஆன்மா மாறாதது, நிஜம். நிழலுடன் நம்மை ஒன்றுபடுத்துவதை விட்டுவிட்டு நிஜத்துடன் ஒன்றுபடுத்திக் காண வேண்டும்; அதனை அனுபூதியில் உணர வேண்டும் என்பது இந்த உபநிஷதத்தின் தனிக்கருத்தாக உள்ளது. அதற்கான சில சாதனை முறைகளையும் இங்கே நாம் காண்கிறோம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



## வித்யைகள்

மனிதன், உலகம், இறைவன் என்பவை மூன்று அடிப்படை உண்மைகள். உபநிஷதங்கள் இந்த மூன்றையும், இவற்றிற்கு இடையே நிலவுகின்ற தொடர்பையும் ஆராய்கின்றன. அறுதி உண்மையாகிய இறைவனை ஒவ்வொரு மனிதனும், ஒவ்வோர் உயிரும் சென்று அடைவதே வாழ்க்கையின் லட்சியம், அதற்கான களமே உலகம். உலகம் தருகின்ற அனுபவங்களைப் பாடமாகக் கொண்டு, உலகில் வாழ்ந்தபடியே அந்த லட்சியத்தை அடையுமாறு உபநிஷதங்கள் வலியுறுத்துகின்றன. இதற்கு ஒவ்வோர் உபநிஷதமும் தனக்கென்று சில குறிப்பிட்ட பாதைகளைக் காட்டுகிறது. இந்தப் பாதை வித்யை எனப்படுகிறது. வித்யைகள் எண்ணற்றவை. 14 முக்கிய உபநிஷதங்களிலுமாக சுமார் 35 வித்யைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.[1] காலங்கள் பல கடந்துவிட்டதாலும் வேறு பல காரணங்களாலும் இந்த வித்யைகளின் செயல்முறைகளோ சரியான பொருளோ நமக்குத் தெரியவில்லை.

முண்டக உபநிஷதத்தில் நாம் காண்பது அக்ஷர–பரா வித்யை. இது அக்ஷராக்ஷர வித்யை என்றும் வழங்கப்படுகிறது. 1.1.4–6 & 1.1.9 மந்திரங்கள் இதனைக் கூறுகின்றன.

## மொழிபெயர்ப்பு

ஸ்ரீசங்கரரைத் தவிர முண்டக உபநிஷதத்திற்குப் பலர் விளக்கவுரைகள் எழுதியுள்ளனர். அவற்றுள் ஸ்ரீமத்வரும் ஸ்ரீரங்க ராமானுஜாச்சாரியரும் எழுதிய உரைகள் முக்கியமானவை.

---

1. விரிவாக அறிவதற்கு பார்க்க: 1.Klaus D. Witz, ***The Supreme Wisdom of the Upanishads,*** Motilal Banarsidass Publishers, 1998. 2. K. Narayanaswami Aiyar, ***The Thirty-two Vidyas,*** The Adyar Library and Research Centre, Adyar, Chennai 600020, 1989.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



தற்போதைய மொழிபெயர்ப்பு, இந்த உபநிஷதத்தை முதன்முதலாகப் படிப்பவர்களை நோக்கமாகக் கொண்டு செய்யப்பட்டுள்ளது. எனவே இரண்டு முக்கியமான விஷயங்கள் இந்த மொழிபெயர்ப்புக்கு அடிப்படையாக வைக்கப்பட்டுள்ளன:

1. தத்துவப் பின்னல்களைக் கருத்தில் கொள்ளாமல் இறைவன் என்ற மாபெரும் சக்தியிடம் நாம் தொடர்பு கொள்கிறோம் என்ற உணர்வுக்கு முதலிடம் கொடுத்து மொழிபெயர்த்துள்ளோம்.

2. இலக்கண நியதிகளுக்கும் மொழிபெயர்ப்பில் முக்கிய இடம் அளிக்கவில்லை.

பொருள் விளக்கத்திற்கு எமது மடத்தின் தவமிகு துறவியர் மூவரின் நூல்கள் பேரளவு துணை செய்தன—

1. ஸ்ரீசங்கரரின் உரையைத் தழுவி சென்னை ஸ்ரீராம கிருஷ்ண மடத்தின் முந்தைய தலைவர்களுள் ஒருவரும் பேரறிஞருமான சுவாமி சர்வானந்தர் எழுதிய ஆங்கில உரை. (சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்து வெளியீடு)

2. ராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷனின் 12-ஆம் தலைவரான சுவாமி பூதேஷானந்தரின் வங்க மொழி விளக்கவுரை. ஆன்ம ஞானியும் பேரறிஞருமாகத் திகழ்ந்தவர் அவர்.

3. சுவாமி பஜனானந்தர் எமது ஆங்கிலப் பத்திரிகை யான Prabuddha Bharata வில் (1979 –1986) எழுதிய The Integral Vision of the Vedic Seers என்ற பகுதியும் அவரது தலையங்கக் கட்டுரைகளும்.

## அமைப்பு

சம்ஸ்கிருத மூலம், தமிழ் வடிவம், பதவுரை, பொழிப்புரை, திரண்ட பொருள் விளக்கம் என்ற ரீதியில் நூல் அமைக்கப்பட்டுள்ளது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



## ஒரு வார்த்தை

உபநிஷதங்களை நமக்கு அளித்த முனிவர்கள் தங்களை முன்னிலைப்படுத்தி எதையும் கூறாமல், 'எங்களுக்கு அதனை விளக்கிய மகான்கள் இவ்வாறு கூறினார்கள்'[1] என்றே குறிப்பிடுகிறார்கள். அதாவது, இந்த உண்மைகள் ஏதோ தங்கள் திறமையால் பெறப்பட்டவை அல்ல, மகான்களின் அருளால் கிடைத்தவை என்று அவர்கள் கூறுவது போல் உள்ளது இது.

நாம் எத்தகைய மனப்பாங்குடன் உபநிஷதங்களை அணுக வேண்டும் என்பதை இது சுட்டிக் காட்டுகிறது. வெறும் நூலறிவு கொண்டோ, சம்ஸ்கிருதப் புலமை கொண்டோ வேத மந்திரங்களின்[2] உண்மையான பொருளை அறிந்துகொள்வது சாத்தியம் அல்ல. பிரார்த்தனைபூர்வமாக, உண்மையான சாதனை வாழ்வில் ஈடுபட்டு, மனம் தூய்மை பெற்று இறைவனை நோக்கி நாம் முன்னேறமுன்னேற இவற்றின் உட்பொருள் மேன்மேலும் ஆழமாக நமக்குப் புரியும். மீண்டும்மீண்டும் படித்து, மந்திரங்களின் பொருளை ஆழமாகச் சிந்தித்து, சாதனைகளிலும் ஈடுபட்டால்தான் உபநிஷதங்களை உண்மையாகப் புரிந்துகொள்ள முடியும்; அவற்றின் அற்புதத்தில் ஆழ்ந்து மனம் மகிழ முடியும்.

---

1. இதி சுச்ரும தீராணாம் யே நஸ்தத் விசசக்ஷிரே।
ஈசாவாஸ்ய உபநிஷதம், 10,13.

2. இன்றைய வழக்கில், 'மீண்டும்மீண்டும் சொல்லி, அதாவது ஜபித்து உய்வு பெறுவதற்கான ஒன்றே மந்திரம்' (மனனாத் த்ராயதே இதி மந்த்ர:) என்று கொள்ளப்படுகிறது. ஆனால் வேதப் பாடல்கள் அனைத்துமே மந்திரங்கள் என்றுதான் வழங்கப்படுகின்றன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

# சாந்தி மந்திரம்

எந்த ஒன்றையும் செய்யும்போது அதற்குரிய மனநிலை இருக்கப் பெறுவது இன்றியமையாதது. எந்தக் காரியத்தைச் செய்கிறோமோ அதற்குரிய மனநிலையை வரவழைத்துக் கொண்டு, அதன்பிறகு அந்தச் செயலில் ஈடுபடுவது சிறப்பான பலனை அளிக்கும். நமது கோயில்களில் பல பிராகாரங்கள் அமைத்திருப்பதன் காரணம் இதுவே. ஒவ்வொரு பிராகாரத்தில் சுற்றி வரும்போதும் மற்ற எண்ணங்களை எல்லாம் விட்டு, கடைசியாக கருவறையில் சென்று தெய்வத்தைத் தரிசிக்கும்போது, நம்மால் முழுமனத்துடன் தெய்வ சிந்தனையில் ஈடுபட முடிகிறது. அதுபோல் அனுபூதிக் கருவூலமான உபநிஷதங்களைப் படிக்கப் புகுமுன் நமது சிந்தனையை அவற்றுடன் இயைபுபடுத்த சாந்தி மந்திரங்கள் உதவுகின்றன.

முண்டக உபநிஷதத்திற்கான சாந்தி மந்திரம் இது:

ॐ भद्रं कर्णेभिः शृणुयाम देवाः। भद्रं पश्येमाक्षभिर्यजत्राः। स्थिरैरङ्गैस्तुष्टुवाग्ं सस्तनूभिः। व्यशेम देवहितं यदायुः॥

स्वस्ति न इन्द्रो वृद्धश्रवाः। स्वस्ति नः पूषा विश्ववेदाः। स्वस्ति नस्तार्क्ष्यो अरिष्टनेमिः। स्वस्ति नो बृहस्पतिर्दधातु॥

ॐ शान्तिः शान्तिः शान्तिः॥



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



ஓம் பத்ரம் கர்ணேபி: ச்ருணுயாம தேவா: । பத்ரம் பச்யேமாக்ஷபிர் யஜத்ரா: । ஸ்திரைரங்கைஸ் துஷ்டுவாக்ம்ஸஸ்தனூபி:[1] । வ்யசேம தேவஹிதம் யதாயு: ॥

ஸ்வஸ்தி ந இந்த்ரோ வ்ருத்த ச்ரவா: । ஸ்வஸ்தி ந: பூஷா விச்ववேதா: । ஸ்வஸ்தி நஸ்தார்க்ஷ்யோ அரிஷ்ட்டநேமி: । ஸ்வஸ்தி நோ ப்ருஹஸ்பதிர் ததாது ॥ ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ॥

*தேவா: – தேவர்களே!; கர்ணேபி: – காதுகளால்; பத்ரம் – நல்ல விஷயங்களை; ச்ருணுயாம – கேட்க வேண்டும்; யஜத்ரா: – பூஜிக்கத் தகுந்தவர்களே; அக்ஷபி: – கண்களால்; பச்யேம – காண வேண்டும்; ஸ்திரரங்கை: – உறுதியான அங்கங்களுடன் கூடிய; தனூபி: – உடலுடன்; யதாயு: – ஆயுள் முழுவதும்; துஷ்டுவாம்ஸ:[1] – துதிக்க வேண்டும்; தேவ ஹிதம் – தேவர்களுக்கு நன்மை செய்த வண்ணம்; வ்யசேம – வாழ வேண்டும்; வ்ருத்த ச்ரவா: – பழம்புகழ்பெற்ற; இந்த்ர: – இந்திரன்; ந: – நமக்கு; ஸ்வஸ்தி – நன்மை செய்யட்டும்; விச்வ வேதா: – எல்லாம் அறிகின்ற; பூஷா – சூரியன்; ஸ்வஸ்தி – மங்கலம் செய்யட்டும்; அரிஷ்ட்டநேமி: – தீமையை அழிக்கின்ற; தார்க்ஷ்ய: – கருடன்; ஸ்வஸ்தி – நன்மை செய்யட்டும்; ப்ருஹஸ்பதி: – பிருகஸ்பதி; ஸ்வஸ்தி – நன்மை; ததாது – தரட்டும்.*

**ஓம். தேவர்களே! காதுகளால் நாங்கள் நல்ல விஷயங்களைக் கேட்க வேண்டும். பூஜிக்கத் தகுந்தவர்களே! கண்களால் நாங்கள் நல்ல விஷயங்களைக் காண வேண்டும். உறுதியான அங்கங்களுடன் கூடிய உடலுடன் ஆயுள் முழுவதும் நாங்கள் உங்களைத் துதிக்க வேண்டும். உங்களுக்கு நன்மை செய்த வண்ணம் நாங்கள் வாழ வேண்டும்!**

---

*1. 'துஷ்ட்டுவாம்ஸ' என்பதுதான் வார்த்தை. 'துஷ்ட்டுவாக்ம்ஸ' என்பதிலுள்ள 'க்' பாராயண முறைக்காக சேர்க்கப்பட்டது.*

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



**பழம்புகழ் பெற்ற இந்திரன் நமக்கு நன்மை செய்யட்டும். எல்லாம் அறிகின்ற சூரியன் நமக்கு மங்கலம் செய்யட்டும். தீமையை அழிக்கின்ற கருடன் நமக்கு நன்மை செய்யட்டும். பிருகஸ்பதி நமக்கு நன்மை தரட்டும்!**

உலகியலில் மூழ்கடிப்பதற்கான விஷயங்கள், உயர் வாழ்க்கையில் தூண்டுகின்ற விஷயங்கள் ஆகிய இரண்டுமே மனிதனின் முன்னால் வருகின்றன; அறிவாளி இரண்டாம் வகையைத் தேர்ந்தெடுக்கிறான் என்று கட உபநிஷதம் (#1.2.2) கூறுகிறது. அவ்வாறு நல்லவற்றையும் உயர்ந்த வற்றையும் தேர்ந்தெடுப்பதற்கு நமது உடம்பிற்கும் புலன் களுக்கும் பயிற்சி அளிப்பதற்கும், அந்த முயற்சியில் தேவர் களின் துணையை நாடுவதற்குமான மந்திரம் இது.

தேவர்கள் யார்? அவர்களுக்கு நன்மை செய்வது என்பது என்ன?

சூரியன் உதிப்பது, கடலில் அலைகள் எழுவது, நட்சத்திர மண்டலங்கள் வானவெளியில் வலம் வருவது என்று இயற்கை யின் ஒவ்வொரு செயல்பாட்டிலும் சக்தியின் வெளிப்பாட்டைக் காண்கிறோம். இந்தச் சக்திகள் ஒவ்வொன்றையும் ஒரு தேவனாக உருவகப்படுத்தினர் நமது முன்னோர். இந்திரன், வருணன், வாயு என்றெல்லாம் நமது வேதங்கள் கூறுகின்ற தேவர்கள் இத்தகைய இயற்கை ஆற்றலின் உருவகங்களே.

உலகில் எத்தனை கோடி உயிரினங்கள் இருந்தாலும் அத்தனைக்கும் உணவும் வாழ வசதியும் வழங்குவதற்கு இயற்கை அன்னை தயாராகவே இருக்கிறாள். ஆனால் அதற்கு அவளுடன், அதாவது இந்த இயற்கை ஆற்றல் களுடன் இயைந்து வாழ்வது இன்றியமையாதது. இயற்கையை நாம் அழித்தால் நாமும் அழிவோம். மாறாக, நாமும் இயற்கையும் பரஸ்பரம் பேணி வாழ்ந்தால் இயற்கை யும் வாழும், நாமும் வாழ்வோம்.

உயர் வாழ்க்கை வாழ வேண்டுமானால் உடம்பையும் புலன்களையும் அதற்குத் தகுதியானவையாக வைத்திருக்க வேண்டும், இயற்கையுடன் இயைந்து வாழ வேண்டும் என்ற பரந்த கருத்துடன் உபநிஷதம் ஆரம்பிக்கிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எவ்வாறு சிலந்தி தன்னிடமிருந்து வலைநூலை
வெளிப்படுத்துகிறதோ அவ்வாறே இறைவனிடமிருந்து
பிரபஞ்சம் தோன்றுகிறது. ... -7

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

# 1:1 சாதாரண அறிவும் உயர் அறிவும்

உலகம் நம் கண் முன்னால் தன் அனைத்துப் பரிமாணங்களுடனும் பரந்து கிடக்கிறது. அழகு, அறிவு, ஆற்றல் என்று அதன் எந்தப் பரிமாணத்தை எடுத்துக் கொண்டாலும் மனிதன் அறிந்துள்ளது மிகக் குறைவே. அவன் புலன்களால் அறிகின்ற கலை, கல்வி, விஞ்ஞானம், மதம் போன்றவை, அதிமன ஆற்றலால் அறிகின்ற ஜோதிடம் போன்றவை, ஏன் வேதங்கள்கூட சாதாரண அறிவே என்று பாகுபடுத்துகிறது இந்த அத்தியாயம்.

மனிதன் தன் அறிவையெல்லாம் செலுத்தியும் ஓர் அம்சத்தைக் கூடப் புரிந்துகொள்ள இயலாத இந்த உலகைப் படைத்த கடவுள் ஒருவர் இருக்கிறார். அவரை அறிகின்ற அறிவே உயர் அறிவு. அது அனைத்து அறிவிற்கும் அடிப் படை. இந்த உயர் அறிவு, அதற்கு ஆதாரமான கடவுளின் மகிமை போன்றவற்றை இந்த அத்தியாயத்தில் காண் கிறோம்.

இந்த உபநிஷதம் கூறுகின்ற அக்ஷர-பரா வித்தையையும் இந்த அத்தியாயத்திலேயே வருகிறது.

## ஆன்மீக அறிவே அனைத்து அறிவுகளின் அடிப்படை

'எதை அறிந்தால் அனைத்தும் அறிந்ததாகும்?' என்று 3-ஆம் மந்திரம் ஒரு கேள்வியை எழுப்புகிறது. அந்த விளக்கத்திற்கு ஒரு முன்னுரைபோல் அமைகிறது இந்த மந்திரம்.



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



ॐ ब्रह्मा देवानां प्रथमः संबभूव
विश्वस्य कर्ता भुवनस्य गोप्ता ।
स ब्रह्मविद्यां सर्वविद्याप्रतिष्ठाम्
अथर्वाय ज्येष्ठपुत्राय प्राह ॥ १ ॥

ஓம் ப்ரஹ்மா தேவானாம் ப்ரதம: ஸம்பபூவ
விச்வஸ்ய கர்த்தா புவனஸ்ய கோப்தா ।
ஸ ப்ரஹ்மவித்யாம் ஸர்வவித்யா ப்ரதிஷ்ட்டாம்
அதர்வாய ஜ்யேஷ்ட்டபுத்ராய ப்ராஹ ॥ 1 ॥

*ப்ரஹ்மா – பிரம்ம தேவர்; தேவானாம் – தேவர்களில்; ப்ரதம: – முதலில்; ஸம்பபூவ – தோன்றினார்; விச்வஸ்ய – உலகின்; கர்த்தா – படைத்தவர்; புவனஸ்ய – உலகின்; கோப்தா – காப்பவர்; ஸ: – அவர்; ஸர்வ வித்யா – எல்லா அறிவுகளின்; ப்ரதிஷ்ட்டாம் – அடிப்படையான; ப்ரஹ்ம வித்யாம் – ஆன்மீக அறிவை; ஜ்யேஷ்ட்ட புத்ராய – மூத்த மகனான; அதர்வாய – அதர்வனுக்கு; ப்ராஹ – உபதேசித்தார்.*

**1. ஓம். பிரம்ம தேவர் தேவர்களில் முதலில் தோன்றியவர். உலகைப் படைத்தவரும் காப்பவரும் அவரே. அனைத்து அறிவுகளின் அடிப்படையான ஆன்மீக அறிவை அவர் தமது மூத்த மகனான அதர்வனுக்கு உபதேசித்தார்.**

*ஓர் அறையில் நாற்காலி, மேஜை, புத்தகங்கள் என்று பல்வேறு பொருட்கள் உள்ளன. இவற்றைக் காண வேண்டுமானால் ஒளி வேண்டும். எனவே இந்த அத்தனைப் பொருட்களின் அடிப்படையாக இருப்பது ஒளியேயாகும். ஒளியில்லா விட்டால் அறையிலுள்ள எதனையும் காண இயலாது.*

*அதுபோல், ஆன்மீக அறிவு அனைத்து அறிவுகளின் அடிப்படையாக உள்ளது. ஆன்மா பற்றிய அறிவு ஆன்மீக*

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



அறிவு. உடம்பையும் மனத்தையும் தவிர நம்மில் ஆன்மா என்ற ஒன்று உள்ளது. உண்மையில் நாம் உடம்போ மனமோ அல்ல; இவை இரண்டையும் கருவிகளாகக் கொண்ட ஆன்மா என்ற உண்மையை அனுபவபூர்வமாக அனுபூதியில் உணர்வதே வாழ்க்கையின் லட்சியம். உபநிஷதங்களின் அடிப்படைக் கருத்து இது.

ஆன்மா என்ற ஒன்று இருப்பதால்தான் நாம் பார்க்க முடிகிறது, கேட்க முடிகிறது, அனுபவிக்க முடிகிறது; சுருக்கமாகச் சொல்வதானால் வாழ்க்கையை வாழ முடிகிறது. 'ஆன்மா இருப்பதால்தான் கேட்க முடியாதவற்றைக் கேட்க முடிகிறது; சிந்திக்க முடியாதவற்றைச் சிந்திக்க முடிகிறது; அறிய முடியாதவற்றை அறிய முடிகிறது'[1] என்கிறது சாந்தோக்ய உபநிஷதம். அதனால்தான் ஆன்மீக அறிவு அனைத்து அறிவுகளின் அடிப்படை என்று கூறப்பட்டது.

## பரம்பரையாக வருவது ஆன்மீக அறிவு

अथर्वणे यां प्रवदेत ब्रह्मा-
ऽथर्वा तां पुरोवाचाङ्गिरे ब्रह्मविद्याम् ।
स भारद्वाजाय सत्यवहाय प्राह
भारद्वाजोऽङ्गिरसे परावराम् ॥ २॥

அதர்வணே யாம் ப்ரவதேத ப்ரஹ்மா-
ऽதர்வா தாம் புரோவாசாங்கிரே ப்ரஹ்மவித்யாம் ।
ஸ பாரத்வாஜாய ஸத்யவஹாய ப்ராஹ
பாரத்வாஜோऽங்கிரஸே பராவராம் ॥ 2 ॥

ப்ரஹ்மா – பிரம்ம தேவர்; யாம் – எதை; அதர்வணே – அதர்வனுக்கு; ப்ரவதேத – சொன்னாரோ; தாம் – அந்த;

---

1. யேன அச்ருதம் ச்ருதம் பவதி அமதம் மதம் அவிஜ்ஞாதம் விஜ்ஞாதம் ।

—சாந்தோக்ய உபநிஷதம், 6.1.3.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



*ப்ரஹ்ம வித்யாம் – ஆன்மீக அறிவை; அதர்வா – அதர்வன்; புரா – முன்பு; அங்கிரே – அங்கிரருக்கு; உவாச – சொன்னார்; ஸ: – அவர்; பாரத்வாஜாய – பரத்வாஜரின் வழிவந்த; ஸத்யவஹாய – ஸத்யவஹனுக்கு; ப்ராஹ – சொன்னார்; பாரத்வாஜ: – பரத்வாஜரின் வழிவந்த அவர்; அங்கிரஸே – அங்கிரசுக்கு; பரா அவராம் – குருவிடமிருந்து சீடருக்கு.*

**2. பிரம்ம தேவரிடமிருந்து பெற்ற ஆன்மீக அறிவை அதர்வன் அங்கிரருக்குச் சொன்னார். அங்கிரர் பரத்வாஜரின் வழிவந்தவராகிய ஸத்யவஹனுக்குச் சொன்னார். அவர் அங்கிரஸுக்குச் சொன்னார். இவ்வாறு அந்த அறிவு குருவிடமிருந்து சீடருக்கு வழிவழியாக வந்தது.**

அடிப்படை அறிவு ஒன்று உண்டா?

**शौनको ह वै महाशालोऽङ्गिरसं विधिवदुपसन्नः पप्रच्छ ।**
**कस्मिन्नु भगवो विज्ञाते सर्वमिदं विज्ञातं भवतीति ॥ ३॥**

சௌனகோ ஹ வை மஹாசாலோऽங்கிரஸம் விதிவதுபஸன்ன: பப்ரச்ச । கஸ்மின்னு பகவோ விஜ்ஞாதே ஸர்வமிதம் விஜ்ஞாதம் பவதீதி ॥ 3 ॥

*ஹ வை மஹாசால: – சிறந்த இல்லறத்தாராகிய; சௌனக: – சௌனகர்; அங்கிரஸம் – அங்கிரஸை விதிவத் – முறைப்படி; உபஸன்ன: – அணுகி; பப்ரச்ச – கேட்டார்; கஸ்மின் நு – எதை; விஜ்ஞாதே – அறிந்தால்; பகவ: – தெய்வத்திற்கு நிகரானவரே; இதம் – இந்த; ஸர்வம் – அனைத்தும்; விஜ்ஞாதம் பவதி – அறிந்ததாகும்; இதி – என்று.*

**3. சிறந்த இல்லறத்தாராகிய சௌனகர் அங்கிரஸை முறைப்படி அணுகி, 'தெய்வத்திற்கு நிகரானவரே! எதை அறிந்தால் இந்த அனைத்தும் அறிந்ததாகும்?' என்று கேட்டார்.**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



பாரதம் மற்றும் பிற நாடுகளின் கலாச்சாரம், விஞ்ஞானம், மதம், ஆன்மீகம் என்று எந்தத் துறையையும் ஆழ்ந்து படிப்பவர்கள் ஓர் அற்புதமான உண்மையைக் காண முடியும். எதிலும் அறுதி ஒருமையைக் காண விழைந்தது இந்திய மனம். 'பொருட்களின் ஓர் அறுதி ஒருமையைக் (Ultimate Unity) காண்பதே உபநிஷதங்களின் நோக்கம். ''எதை அறிந்தால் இந்த அனைத்தும் அறிந்த தாகும்?'—இந்த ஆராய்ச்சியையே உபநிஷதங்கள் தங்கள் ஒரே கருத்தாகக் கொண்டிருக்கின்றன'[1] என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

இதனை விளக்குகிறார் அவர்: 'ஒருமைநிலையைக் கண்டுபிடிப்பதுதான் விஞ்ஞானம். முழுமையான ஒருமை நிலை கிட்டியதும் விஞ்ஞானம் மேலே செல்லாமல் நின்றுவிடும். ஏனெனில் அது தன் குறிக்கோளை எட்டி விட்டது. அதுபோலவே, எந்த மூலப்பொருளிலிருந்து எல்லா பொருட்களும் படைக்கப்படுகின்றனவோ, அதைக் கண்டுபிடித்த பின்னர் வேதியியல் முன்னேற முடியாது. எந்த மூலசக்தியிலிருந்து எல்லா சக்திகளும் வெளிப்படுகின்றனவோ, அதைக் கண்டறிந்ததும் இயற் பியல் நின்றுவிடும். மரணம் நிறைந்த இந்தப் பிரபஞ்சத்தில், மரணத்தைக் கடந்து நிற்கும் ஒரே உயிரைக் கண்டுபிடித்ததும், மாறிக் கொண்டேயிருக்கும் உலகில் மாறாத ஒரே அடிப்படையான ஒன்றைக் கண்டுபிடித்ததும், எந்த ஓர் ஆன்மாவிலிருந்து பிற ஆன்மாக்கள் வெளிப் படுவது போன்று மாயையால் தோன்றுகிறதோ அந்த ஆன்மாவைக் கண்டுபிடித்ததும், மத விஞ்ஞானம் பூரணமாகிவிடும்.'[2]

அத்தகைய அறிவு ஒன்று உண்டா என்று சௌனகர் அங்கிரஸைக் கேட்கிறார்.

---

1. ஞான தீபம், 5.352.
2. ஞான தீபம், 1.45.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



இரண்டு வகை அறிவுகள்: 4-5

அனைத்திற்கும் அடிப்படையான அறிவு ஒன்று உண்டா என்பது கேள்வி. உண்டு என்று கூறி, அந்த அடிப்படை அறிவு மட்டுமே மிக உயர்ந்தது, மற்ற அனைத்து அறிவுகளும் இரண்டாம் பட்சமானவை, சாதாரணமானவை என்று அங்கிரஸ் சௌனகருக்கு உபதேசிக்கிறார்.

**तस्मै स होवाच । द्वे विद्ये वेदितव्ये इति ह स्म यद्ब्रह्मविदो वदन्ति परा चैवापरा च ॥ ४॥**

தஸ்மை ஸ ஹோவாச । த்வே வித்யே வேதிதவ்யே இதி ஹ ஸ்ம யத் ப்ரஹ்மவிதோ வதந்தி பரா சைவாபரா ச ॥ 4 ॥

தஸ்மை – அவரிடம்; ஸ: – அவர்; ஹ உவாச – கூறினார்; த்வே – இரண்டு; வித்யே – அறிவுகள்; வேதிதவ்யே – அறியப்பட வேண்டியவை; இதி – என்று; ஹ யத் – எவை; பரா ச – உயர்ந்தது; ஏவ – மேலும்; அபரா ச – சாதாரணமானது; ப்ரஹ்ம வித: – மகான்கள்; வதந்தி ஸ்ம – கூறுகிறார்கள்.

**4. அங்கிரஸ் சௌனகரிடம் கூறினார்: 'உயர்ந்தது மற்றும் சாதாரணமானது என்று இரண்டுவகை அறிவுகள் உள்ளன. இவற்றை அறிய வேண்டும் என்று இறையனுபூதி பெற்ற மகான்கள் கூறுகிறார்கள்'.**

**तत्रापरा ऋग्वेदो यजुर्वेदः सामवेदोऽथर्ववेदः शिक्षा कल्पो व्याकरणं निरुक्तं छन्दो ज्योतिषमिति । अथ परा यया तदक्षरमधिगम्यते ॥ ५ ॥**

தத்ராபரா ரிக்வேதோ யஜுர்வேத: ஸாமவேதோ Sதர்வவேத: சிக்ஷா கல்போ வ்யாகரணம் நிருக்தம் சந்தோ ஜ்யோதிஷமிதி । அத பரா யயா ததக்ஷரமதிகம்யதே ॥ 5 ॥

தத்ர – அவற்றுள்; அபரா – சாதாரணமானது; ரிக்வேத: – ரிக்வேதம்; யஜுர்வேத: – யஜுர்வேதம்; ஸாமவேத: – சாம வேதம்; அதர்வ வேத: – அதர்வண வேதம்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



சிக்ஷா – உச்சரிப்பு; கல்பம் – சடங்குகள்; வியாகரணம் – இலக்கணம்; நிருக்தம் – அகராதி; சந்தஸ் – யாப்பு; ஜ்யோதிஷம் – வானவியல், ஜோதிடம்; இதி – ஆகியவை; அத – இனி; பரா – உயர்ந்தது; யயா – எதனால்; தத் – அந்த; அக்ஷரம் – அழிவற்ற இறைவன்; அதிகம்யதே – அடையப்படுகிறாரோ.

**5. ரிக்வேதம், யஜுர்வேதம், சாம வேதம், அதர்வண வேதம், உச்சரிப்பு, சடங்குகள், இலக்கணம், அகராதி, யாப்பு, வானவியல், ஜோதிடம் போன்றவை சாதாரண அறிவைச் சேர்ந்தவை. அழிவற்றவராகிய இறைவன் எந்த அறிவால் அடையப்படுகிறாரோ அது உயர்ந்த அறிவு.**

இந்து மதத்தின் ஓர் ஒப்பற்ற தனித்தன்மையை இங்கே நாம் காண்கிறோம். வேதங்களைக் கடவுளின் மூச்சாகக்[1] கொள்கின்ற அதேவேளையில் வேதங்களும் சாதாரண அறிவே என்று கூறுவதை இந்து மதத்தில் மட்டுமே நாம் காண முடியும். 'வேதங்களின் சிறப்பு என்ன?' என்று கேட்ட போது சுவாமி விவேகானந்தர், 'தங்கள் போதனையையும் கடந்து செல்ல வேண்டும் என்று திரும்பத்திரும்ப வற்புறுத்துகின்ற சாஸ்திரம் அது ஒன்றே. தாங்கள் போதிப்பவை எல்லாம் வெறும் குழந்தை உள்ளத்திற்கே, நீ வளர்ந்ததும் அவற்றைத் தாண்டிச் செல்ல வேண்டும் என்கின்றன வேதங்கள்'[2] என்கிறார். வேதங்கள் இறை வாக்காக இருக்கலாம், இறைவனின் மூச்சாக இருக்கலாம். ஆனாலும் அவை இறைவன் அல்ல. இறைவனை அடைவது மட்டுமே உயர்ந்தது, மேலானது.

---

1. அரேऽஸ்ய மஹதோ பூதஸ்ய நி:ச்வஸிதமேதத் ரிக்வேதோ யஜுர்வேத: ஸாமவேதோ ऽதர்வாங்கிரஸ: ॥

—பிருஹதாரண்யக உபநிஷதம், 2.4.10.

பொருள்: ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்கள் எல்லாம் எல்லையற்ற இறைவனின் மூச்சாகும்.

2. ஞான தீபம், 4.34.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



### ◈ உயர் அறிவு (6–9) ◈

*'எந்த அறிவால் இறைவன் அடையப்படுகிறாரோ அது உயர் அறிவு.'(#5) அந்த இறைவன் எப்படிப்பட்டவர், அந்த அனுபூதி எப்படிப்பட்டது, அவர் எப்படி இந்த உலகைப் படைத்தார் போன்றவைபற்றி, தொடரும் 4 மந்திரங்கள் கூறுகின்றன.*

*இறைவனைப் பற்றிய அறிவு*

**यत्तदद्रेश्यम् अग्राह्यम् अगोत्रम् अवर्णम्**
**अचक्षुःश्रोत्रं तदपाणिपादम् ।**
**नित्यं विभुं सर्वगतं सुसूक्ष्मं**
**तदव्ययं यद्भूतयोनिं परिपश्यन्ति धीराः ॥ ६ ॥**

यत्ततद्रेश्यं अக்ராஹ்யம் அகோத்ரம் அவர்ணம்
அசக்ஷுः ச்ரோத்ரம் ததபாணிபாதம் ।
நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம்
ததவ்யயம் யத் பூதயோனிம் பரிபச்யந்தி தீராः ॥ 6 ॥

*யத் – யார்; தத் – அவர்; அத்ரேச்யம் – பார்க்க முடியாதவர்; அக்ராஹ்யம் – புரிந்துகொள்ள முடியாதவர்; அகோத்ரம் – ஆரம்பம் இல்லாதவர்; அவர்ணம் – நிறங்களற்றவர்; அசக்ஷுः ச்ரோத்ரம் – கண்களோ காதுகளோ இல்லாதவர்; அபாணிபாதம் – கைகளோ கால்களோ இல்லாதவர்; நித்யம் – என்றென்றும் இருப்பவர்; விபும் – எண்ணற்ற வடிவங்கள் உடையவர்; ஸர்வகதம் – எங்கும் நிறைந்தவர்; ஸுஸூக்ஷ்மம் – மிகவும் நுண்ணியவர்; அவ்யயம் – அழிவற்றவர்; பூதயோனிம் – படைப்பிற்கு மூலகாரணமானவர்; தீராः – விழிப்புற்றவர்கள்; பரிபச்யந்தி – எங்கும் காண்கிறார்கள்.*

**6. அந்த இறைவனைப் பார்க்க முடியாது, புரிந்து கொள்ள முடியாது. அவருக்கு ஆரம்பம் கிடையாது. அவர் நிறங்கள் அற்றவர். அவருக்குக் கண்களோ**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



**காதுகளோ கைகளோ கால்களோ கிடையாது. அவர் என்றென்றும் இருப்பவர், எண்ணற்ற வடிவங்கள் உடையவர், எங்கும் நிறைந்தவர், மிகவும் நுண்ணிய வர், அழிவற்றவர், படைப்பிற்கு மூலகாரணமானவர். விழிப்புற்றவர்கள் அவரை எங்கும் காண்கிறார்கள்.**

*'அந்த இறைவனைப் பார்க்க முடியாது' என்று முதல் வரியும், 'விழிப்புற்றவர்கள் அவரை எங்கும் காண் கிறார்கள்' என்று கடைசி வரியும் முன்னுக்குப் பின் முரண்போல் ஒலிக்கின்றன.*

*நமது அறிவு புலன்களுக்கு உட்பட்டது. புலன்களின் மூலமே நாம் எதையும் அறிந்துகொள்கிறோம். ஆனால் இறைவன் புலன்களுக்கு அப்பாற்பட்டவர். புலன்களால் அவரைக் கிரகிக்க முடியாது. அதனால்தான் ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனிடம், 'உனது இந்தக் கண்ணினால் என்னைப் பார்க்க இயலாது. எனவே உனக்கு தெய்வீகக் கண்ணைத் தருகிறேன். எனது யோக சக்தி மகிமையைப் பார்'[1] என்கிறார். அவ்வாறு தெய்வீகக் கண்ணைப் பெற்ற அர்ஜுனன் கடவுளை எங்கும் கண்டான்.[2]*

*அவ்வாறு தெய்வீகக் கண்ணைப் பெற்றவர்களையே இந்த மந்திரம் 'விழிப்புற்றவர்கள்' என்று கூறுகிறது. விழிப்புற்றவர்கள் தெய்வீகக் கண்ணைப் பெற்று, அதன் மூலம், எங்கும் இறைவனைக் காண்கின்ற அனுபவத்தைப் பெறுகிறார்கள்.*

---

1. *ந து மாம் சக்யஸே த்ரஷ்டும் அனேனைவ ஸ்வசக்ஷுஷா।*
*திவ்யம் ததாமி தே சக்ஷுஃ பச்ய மே யோகமைச்வரம் ॥*
—கீதை, 11.8.

*#2.2.1 விளக்கவுரையும் காண்க.*

2. *பச்யாமி த்வாம் துர்நிரீக்ஷ்யம் ஸமந்தாத்।* —கீதை, 11.17.
*பொருள்: கண்ணால் காண முடியாத உன்னை எங்கும் காண்கிறேன்.*

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



## இறைவனும் படைப்பும்

**यथोर्णनाभिः सृजते गृह्णते च**
**यथा पृथिव्याम् ओषधयः संभवन्ति ।**
**यथा सतः पुरुषात् केशलोमानि**
**तथाऽक्षरात् संभवतीह विश्वम् ॥ ७ ॥**

யதோர்ணநாபி: ஸ்ருஜதே க்ருஹ்ணதே ச
யதா ப்ருதிவ்யாம் ஓஷதய: ஸம்பவந்தி ।
யதா ஸத: புருஷாத் கேச லோமானி
ததாऽக்ஷராத் ஸம்பவதீஹ விச்வம் ॥ 7 ॥

*யதா – எவ்வாறு; ஊர்ணநாபி: – சிலந்தி; ஸ்ருஜதே – வெளிப்படுத்துகிறது; க்ருஹ்ணதே ச – கிரகித்துக் கொள்கிறது; ப்ருதிவ்யாம் – பூமியிலிருந்து; ஓஷதய: – செடி கொடிகள்; ஸம்பவந்தி – தோன்றுகின்றன; ஸத: புருஷாத் – வாழ்கின்ற மனிதனிடமிருந்து; கேச லோமானி – முடி; ததா – அவ்வாறு; அக்ஷராத் – அழிவற்ற இறைவனிடமிருந்து; இஹ – இங்கே; விச்வம் – பிரபஞ்சம்; ஸம்பவதி – தோன்றுகிறது.*

**7. எவ்வாறு சிலந்தி தன்னிடமிருந்து வலைநூலை வெளிப்படுத்தவும் தன்னிடமே அடக்கிக்கொள்ளவும் செய்கிறதோ, எவ்வாறு பூமியிலிருந்து செடி கொடிகள் தோன்றுகின்றனவோ, வாழ்கின்ற மனிதனில் எவ்வாறு முடி வளர்கிறதோ அவ்வாறே அழிவற்ற இறைவனிடமிருந்து இந்தப் பிரபஞ்சம் தோன்றுகிறது.**

இறைவனுக்கும் படைப்புக்கும் உள்ள தொடர்பை விளக்குவதற்கு இங்கே மூன்று உவமைகள் கூறப்பட்டுள்ளன. மூன்றும் மூன்று படிகளாக அமைந்துள்ளன.

சிலந்தியும் வலைநூலும். சிலந்தி வலைநூலை வெளியே கொண்டுவருவது இரண்டு காரணங்களுக்காக— 1. தான் தங்குவதற்கான வலைபின்னுவதற்காக;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



2. இரை பிடிப்பதற்காக. நூலை வெளியே கொண்டு வருவதற்குச் சிலந்தியின் முயற்சியும் தேவைப்படுகிறது. அதுபோல் இறைவனும் உலகைப் படைத்ததில் ஏதேனும் நோக்கமோ முயற்சியோ உண்டா?

இல்லை. இதனை அடுத்த உவமை விளக்குகிறது.

பூமியிலிருந்து செடிகொடிகள் இயல்பாக வளர்கின்றன. பூமிக்கென்று ஒரு நோக்கமோ முயற்சியோ இல்லை. ஆனால் பூமி ஒரு ஜடப் பொருள், அது உணர்வற்றது. இறைவனும் அப்படிப்பட்டவரா?

இல்லை. இதனை அடுத்த உவமை விளக்குகிறது.

மனிதன் உணர்வு உடையவன். அவனது உடம்பிலிருந்து முடி வளர்கிறது. அதற்கென்று அவன் எந்த முயற்சியும் செய்வதில்லை.

இதிலிருந்து மூன்று விஷயங்கள் தெளிவாகின்றன:

1. இறைவனிலிருந்தே படைப்பு தோன்றியுள்ளது. அவரிலேயே ஒடுங்கவும் செய்கிறது.

2. இறைவன் உலகைப் படைப்பதற்கென்று சொந்த நோக்கமோ முயற்சியோ இல்லை; அவரிடமிருந்து இயல்பாகவே பிரபஞ்சம் தோன்றி ஒடுங்குகிறது.

3. இறைவன் ஒரு ஜடப்பொருள் அல்ல; உணர்வுப் பொருள்.

## இறைவனின் தவத்தால் தோன்றிய உலகம்

**तपसा चीयते ब्रह्म ततोऽन्नमभिजायते ।**
**अन्नात्प्राणो मनः सत्यं लोकाः कर्मसु चामृतम् ॥ ८॥**

தபஸா சீயதே ப்ரஹ்ம ததோऽன்னமபிஜாயதே ।
அன்னாத் ப்ராணோ மன: ஸத்யம் லோகா: கர்மஸு
சாம்ருதம் ॥ 8 ॥

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



*ப்ரஹ்ம – இறைவன்; தபஸா – தவத்தால்; சீயதே –வளர்கிறார்; தத: – அவரிலிருந்து; அன்னம் – தோன்றா நிலை; அன்னாத் – தோன்றா நிலையிலிருந்து; ப்ராண: –பிராணன்; மன: – மனம்; ஸத்யம் – அடிப்படை மூலங்கள்; லோகா: – உலகங்கள்; கர்மஸு – கர்மங்கள்; அம்ருதம் ச –வினைப்பயன்கள்; அபிஜாயதே – தோன்றின.*

**8. இறைவன் தவத்தால் வளர்கிறார். முதலில் அவரிலிருந்து தோன்றாநிலை வெளிப்பட்டது. அதிலிருந்து பிராணன், பிறகு மனம், அடிப்படை மூலங்கள், உலகங்கள், கர்மங்கள், வினைப் பயன்கள் எல்லாம் தோன்றின.**

இந்தப் பிரபஞ்சம் படைக்கப்படுவதற்கு முந்தைய நிலையே தோன்றாநிலை. எல்லாம் விதையாக ஒடுங்கி இருக்கின்ற நிலை அது. அதிலிருந்தே படைப்பு தோன்றியது.

இறைவன் உலகை எப்படிப் படைத்தார்? தவத்தின் மூலம்.

தவத்தைப்பற்றிய அடிப்படைக் கோட்பாடு ஒன்றை இங்கே காண்கிறோம். செய்கின்ற தவம் எதுவானாலும் அது ஒருவனை வளரச் செய்வதாக இருக்க வேண்டும். அதாவது ஒருவன் வளர்வதற்கான ஆற்றலைத் தர வேண்டும். இது முதல் நிபந்தனை.

அடுத்தது, தவம் மகிழ்ச்சியைத் தருவதாக இருக்க வேண்டும். இதனை ஸ்ரீசங்கரர், 'எவ்வாறு ஒரு விதை முளையை வெளிப்படுத்துகிறதோ, எவ்வாறு ஒரு தந்தை மகிழ்ச்சியுடன் மகனை உருவாக்குகிறானோ அவ்வாறு இறைவன் (தம்மிலிருந்து பிரபஞ்சத்தை வெளிப்படுத்துவதற்காக) வளர்ந்தார்'[1] என்று எழுதுகிறார். எனவே ஆற்றல், மகிழ்ச்சி ஆகிய இரண்டையும் தருவதாக தவம் அமைய வேண்டும்.

---

1. *ஜகதங்குரமிவ பீஜமுச்சூனதாம் கச்சதி புத்ரமிவ பிதா ஹர்ஷேண ॥*

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



பாரதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுள் ஒன்று இங்கே கூறப்படுகிறது. சிவபெருமானைக் கணவனாக அடைய எண்ணிய பார்வதி தவம் செய்தாள், அவரைப் பெற்றாள். மந்திரபூர்வமான ஆயுதங்களைப் பெற விரும்பிய அர்ஜுனன் தவத்தின்மூலமே அவற்றைப் பெற்றான். எந்த உயரிய முயற்சிக்கும் தவம் அடிப்படையாகிறது. தவத்தின் மூலம் செய்யப்படுகின்ற முயற்சிகளே அரியனவற்றைச் சாதிக்கிறது. தவம் பற்றி கீதை விரிவாக ஆராய்கிறது.[1]

இறைவனின் தவம் எத்தகையது?

இறைவன் தவத்தால் உலகைப் படைத்தார். அது எத்தகைய தவம்?

**यः सर्वज्ञः सर्वविद्यस्य ज्ञानमयं तपः ।**
**तस्मादेतद्ब्रह्म नाम रूपमन्नं च जायते ॥ ९॥**

யः ஸர்வஜ்ஞः ஸர்வவித் யஸ்ய ஜ்ஞானமயம் தபः ।
தஸ்மாதேதத் ப்ரஹ்ம நாம ரூபமன்னம் ச ஜாயதே ॥ 9 ॥

*யः – யார்; ஸர்வஜ்ஞः – அனைத்தும் அறிந்தவர்; ஸர்வவித் – அனைவரையும் அறிந்தவர்; யஸ்ய – யாருடைய; தபः – தவம்; ஜ்ஞானமயம் – ஞானமயமானது; தஸ்மாத் – அவரிலிருந்து; ஏதத் – இந்த; ப்ரஹ்ம – பிரம்ம தேவர்; நாம – பெயர்கள்; ரூபம் – உருவங்கள்; அன்னம் ச – உணவு; ஜாயதே – தோன்றின.*

**9. இறைவன் அனைத்தும் அறிந்தவர், அனைவரையும் தெரிந்தவர். அவரது தவம் ஞானமயமானது. அவரிலிருந்தே பிரம்ம தேவரும் பெயர்களும் உருவங்களும் உணவும் தோன்றின.**

பொதுவாக தவம் என்றால் முயற்சியும் நோக்கமும் உடையது. அதாவது ஒரு லட்சியத்தை அடைவதற்காக

1. கீதை, 17.5–6, 14–19 பார்க்க.



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



குறிப்பிட்ட பயிற்சிகளைச் செய்கிறோம். ஆனால் இறைவன் உலகைப் படைத்ததற்கு எந்த முயற்சியோ நோக்கமோ இல்லை என்பதை 6-ஆம் மந்திர விளக்கவுரையில் கண்டோம். எனவே இறைவனின் தவம் வேறுபட்டது. அதனை 'ஞானமயமானது' என்கிறது இந்த மந்திரம். இறைவன் உலகைப் படைக்கிறார், காக்கிறார், ஒடுக்குகிறார். ஆனால் இவை எவற்றையும் சொந்த நோக்கத்திற்காக, சுய லாபத்திற்காக அவர் செய்யவில்லை. தெளிவாகச் சொல்வ தானால், இறைவன் பற்றின்றி செயல்படுகிறார். இதனையே ஸ்ரீகிருஷ்ணர், 'செயல்கள் என் மீது ஆதிக்கம் செலுத்துவ தில்லை. வினைப்பயனிலும் எனக்கு ஆசையில்லை'[1] என் கிறார். இவ்வாறு இறைவன் பற்றின்றி உலகைப் படைத்து இயக்குவதாலேயே இந்த உலகம் இவ்வளவு அழகாக இருக் கிறது என்று வியக்கிறார் சுவாமி விவேகானந்தர். 'இறைவன் தன்னை நன்றாக மறைத்துக் கொண்டிருக்கிறார்; அவரது செயல் மகோன்னதமானதாக இருக்கிறது'[2] என்கிறார் அவர்.

இவ்வாறு பற்றின்றி செய்யப்படும் தவம் ஞான மயமான தவம் ஆகிறது. இத்தகைய தவத்திலிருந்து உலகம் தோன்றியது.

### ◈ அக்ஷர-பரா வித்யை ◈

முண்டக உபநிஷதத்தில் #1:1.4,5,9 மந்திரங்களில் அக்ஷர-பரா வித்யை கூறப்படுகிறது.

வித்யைகள் இறைநெறிச் சாதனைகள்; மிகவும் தகுதி வாய்ந்தவர்களுக்கே வழங்கப்பட வேண்டியவை. எனவே அவை ரகசியமாகப்[3] பாதுகாக்கப்பட்டன. குருவின் நேரடிப் பார்வையிலேயே சீடர்கள் இதனைப் பழகினர். காலப் போக்கில் தகுதி வாய்ந்தவர்கள் குறையக்குறைய வித்யைகள்

---

1. ந மாம் கர்மாணி லிம்பந்தி ந மே கர்மஃபலே ஸ்ப்ருஹா: ।
—கீதை, 4.14.

2. ஞான தீபம், 2.380.

3. குஹ்யா ஏவ ஆதேசா: ॥ —சாந்தோக்ய உபநிஷதம், 3.5.1

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



பற்றிய அறிவும் அரிதாகி, இன்று ஏறக்குறைய மறைந்தே விட்டன.

அக்ஷர-பரா வித்யையின் முதற்பகுதி (#4,5) அறிவுபற்றி பேசுகின்றன. இதில் சாதாரண அறிவும் ஆன்மீக அறிவும் அடங்கும். சாதாரண அறிவில் வானவியல், ஜோதிடம் போன்ற உலகியல் அறிவும் அடங்குகிறது என்பது கருத்தில் கொள்ள வேண்டியதாகும். அதாவது உலகியல் அறிவு சம்பந்தப்பட்டவையும் ஒரு வித்யையாகச் செய்யப்பட்டன. 'இந்த வித்யைகளில் சில செல்வத்திற்காகவும், சில முக்திக் காகவும், சில செயல்திறனுக்காகவும் செய்யப்படுகின்றன'[1] என்று எழுதுகிறார் ஸ்ரீசங்கரர்.

இந்திய மனத்தின் ஓர் அடிப்படைப் பண்பை இங்கு நாம் காண்கிறோம். உலகியல் தேவைகளுக்கும் அகத்தையே நாடியது இந்திய மனம். அன்னியர்கள் பேராசை கொண்டு, படையுடன் வரும் அளவிற்கு நமது நாட்டில் செல்வ வளம் கொழித்ததற்கு மூலகாரணமாக இருந்தது இத்தகைய அக நாட்டம்தான். இத்தகைய வித்யைகளின் மூலம்தான் விஞ்ஞானம், மருத்துவம், வானவியல், ஜோதிடம் என்று உலகியல் துறைகளிலும் அரிய சாதனைகளை நிகழ்த்தியது நம் நாடு.

நம்மில் உறங்கிக் கிடக்கின்ற ஆன்மா, அக நாட்டத் தின்மூலம் விழித்தெழும்போது ஆன்மீகத்தில் உச்சங்களை அடையலாம் என்பது போலவே உலகியலிலும் அரிய வற்றைச் சாதிக்கலாம். இதையே சுவாமி விவேகானந்தர், 'வலிமையானவர் - வலிமையற்றவர், உயர்ந்தவர் - தாழ்ந் தவர் என்று ஒவ்வொருவரின் உள்ளேயும் அந்த ஆன்மா உள்ளது; மகத்தானவர்களாக, மேலோர்களாக ஒவ்வொரு வரும் மாறுவதற்கான எல்லையற்ற வாய்ப்பும் எல்லையற்ற ஆற்றலும் அந்த ஆன்மாவில் உள்ளது.... உறங்கும்

1. தத்ர கானிசித் ப்ரஹ்மண உபாஸனானி அப்யுதயார்த்தானி, கானிசித் க்ரமமுக்த்யர்த்தானி, கானிசித் கர்ம ஸம்ருத்த்யர்த்தானி ||
—பிரம்ம சூத்திரம், 1.1.12 முன்னுரையில்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



ஆன்மாவை எழுப்புங்கள், அது எவ்வாறு விழித்தெழு கிறது என்பதைப் பாருங்கள். உறங்குகின்ற ஆன்மா மட்டும் விழித்தெழுந்து தன்னுணர்வில் (self-conscious) செயலில் ஈடுபடுமானால் சக்தி வரும், எவையெல்லாம் மேலானதோ அவை அத்தனையும் வரும்[1] என்று கூறுகிறார்.

அக்ஷர-பரா வித்யை என்பது செல்வத்தையும் செயல் திறனையும் ஆன்ம சக்தியின் வாயிலாக, இறையருளின் வாயிலாகப் பெறுவதற்கான வித்யையாக இருந்திருக்க வேண்டும். அதனால்தான் உலகியல் அறிவு பற்றியும் (#4,5), கடவுள் பற்றியும் (#9) இதில் சொல்லப்பட்டுள்ளது.

**इति मुण्डकोपनिषदि प्रथममुण्डके प्रथमः खण्डः ॥**

இதி முண்டகோபநிஷதி ப்ரதம முண்டகே ப்ரதம: கண்ட: ॥

இவ்வாறு முண்டக உபநிஷதத்தின்
முதற்பகுதியில் முதல் அத்தியாயம் நிறைவுறுகிறது.



1. ஞான தீபம், 5.102, 103.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



# 1:1
# சாதாரண அறிவும் உயர் அறிவும்

## சுருக்கம்

1. ஆன்மீக அறிவே அனைத்து அறிவுகளின் அடிப்படை : 1
2. பரம்பரையாக வருவது ஆன்மீக அறிவு: 2
3. அடிப்படை அறிவு ஒன்று உண்டா?: 3
4. இரண்டு வகை அறிவுகள்: 4–5
5. உயர் அறிவு: 6–9

   இறைவனைப்பற்றிய அறிவு: 6

   இறைவனும் படைப்பும்: 7

   இறைவனின் தவத்தால் தோன்றிய உலகம்: 8

   இறைவனின் தவம் எத்தகையது?: 9

   அக்ஷர-பரா வித்யை : பக். 18–20

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அக்கினி ஏழு நாக்குகளுடன் பிரகாசமாக எரிகிறது. ... -4

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

# 1:2 போகமும் துறவும்

உலகம் சம்பந்தமானது சாதாரண அறிவு, கடவுளைப் பற்றியது உயர் அறிவு என்று முந்தின அத்தியாயத்தில் கண்டோம்.

சாதாரண அறிவின் துறைகள் எண்ணற்றவை. அவற்றை வளர்ப்பதற்கு இன்று எத்தனையோ எந்திரங்களும் பிறவும் உள்ளன. ஆனால் அன்று இருந்தவை கர்மங்கள், யாகங்கள், பல்வேறு சடங்குகள், வித்யைகள் போன்றவை. 'செல்வ வளத்திற்கும் செயல்திறனுக்கும்' வித்யைகள் பயன்பட்டது பற்றி ஏற்கனவே (பக்.18–20) கண்டோம். 'இந்த உலகில் சிறப்பாக வாழ வழி இதுவே' என்று இந்த அத்தியாயம் தொடங்குகிறது. இந்த வித்யைகள், கர்மங்கள் போன்றவற்றின்மூலம் வாழ்க்கைவளத்தைப் பெருக்கி நன்றாக வாழலாம் என்பதை 1–6 வரையுள்ள மந்திரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வது மட்டும் மனிதனின் நோக்கமாக இருக்க முடியாது. ஏனெனில் எந்த வாழ்க்கையானாலும் ஒரு முடிவுக்கு வந்தே தீரும். மரணத்தை யாரும் தடுக்க முடியாது. எனவே அதற்குமுன் 'மரணமற்ற அமர வாழ்க்கை அடையுங்கள்' என்று உபநிஷதங்கள் அழைக்கின்றன. அமர வாழ்வு வேண்டுமானால் உலகின் சுகபோகங்களை விட வேண்டும். இதுவே துறவு. இந்தத் துறவு, அதன் அடிப்படை நியதிகள்பற்றி 7–13 மந்திரங்கள் தெரிவிக்கின்றன.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



## சிறப்பாக வாழ வழி

तदेतत् सत्यम्
मन्त्रेषु कर्माणि कवयो यान्यपश्यं-
स्तानि त्रेतायां बहुधा सन्ततानि ।
तान्याचरथ नियतं सत्यकामा
एष वः पन्थाः सुकृतस्य लोके ॥ १ ॥

ததேதத் ஸத்யம்
மந்த்ரேஷு கர்மாணி கவயோ யான்யபச்யம்-
ஸ்தானி த்ரேதாயாம் பஹுதா ஸந்ததானி ।
தான்யாசரத நியதம் ஸத்யகாமா
ஏஷ வ: பந்தா: ஸுக்ருதஸ்ய லோகே ॥ 1 ॥

தத் – அது; ஏதத் – இது; ஸத்யம் – உண்மை; மந்த்ரேஷு – மந்திரங்களில்; கர்மாணி – கர்மங்கள்; கவய: – முனிவர்கள்; யானி – எவை; அபச்யன் – கண்ட; தானி – அவை; த்ரேதாயாம் – மூன்று வேதங்களிலும்; பஹுதா – மிகவும்; ஸந்ததானி – பின்பற்றப்பட்டன; தானி – அவை; ஆசரத – செய்யுங்கள்; நியதம் – எப்போதும்; ஸத்யகாமா: – உண்மையை நாடுபவர்கள்; ஏஷ: – இது; வ: – உங்கள்; பந்தா: – வழி; ஸுக்ருதஸ்ய – சிறப்பாக வாழ; லோகே – உலகில்.

**1. மந்திரங்களில் முனிவர்கள் கண்டறிந்த பல்வேறு கர்மங்கள் உண்மையானவை. அவை மூன்று வேதங்களில் மிகவும் புகழப்பட்டுள்ளன. உண்மையை நாடுபவர்கள் அவற்றை எப்போதும் செய்ய வேண்டும். இந்த உலகில் சிறப்பாக வாழ வழி இதுவே.**

வேதங்களில் கூறப்பட்டுள்ள மந்திரங்களும் யாகங்களும் மற்ற கர்மங்களும் உண்மையானவை. அக உலகுடன் கொண்ட தொடர்பால் முனிவர்கள் அனுபூதியில் பெற்ற உண்மைகள் அவை. எனவே அவற்றைப் பின்பற்றுவது இன்றியமையாதது. வேதங்களில் கூறப்பட்டுள்ள சில

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



சடங்குகள் இந்தக் காலத்தில் சுலபமாகச் செய்யத் தக்கவை யாக இல்லாமல் போகலாம். ஆனால் அதற்காக நாம் அவற்றைச் செய்யாமல் விடக் கூடாது. அவற்றைக் காலத் திற்கு ஏற்ப எப்படிச் செய்வது என்பதை நமக்குக் காட்டவே அவதார புருஷர்கள் தோன்றுகின்றனர். அவர்கள் காலத்தை யும் சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு அந்தச் சடங்கு களில் தேவையான மாற்றங்களைச் செய்து நமக்குத் தரு கின்றனர். அவற்றை நாம் பின்பற்ற வேண்டும். மந்திரங்கள், கர்மங்கள், யாக யஜ்ஞங்கள் போன்றவற்றின் துணையால் உலகில் ஒரு வளமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்பதே இங்கு நாம் கருத்தில் கொள்ள வேண்டியது.

ரிக், யஜுர், சாம வேதங்கள் இங்கே மூன்று வேதங் களாகக் கூறப்பட்டுள்ளன. அதர்வண வேதம் காலத்தால் பிந்தியது என்று கருதப்படுகிறது.

யாகம்: ஒரு காட்சி

**यदा लेलायते ह्यर्चिः समिद्धे हव्यवाहने ।**
**तदाऽऽज्यभागौ अन्तरेणाऽऽहुतीः प्रतिपादयेत् ॥ २॥**

யதா லேலாயதே ஹ்யர்ச்சி: ஸமித்தே ஹவ்யவாஹனே।
ததாऽऽஜ்யபாகௌ அந்தரேணாऽऽஹுதீ: ப்ரதிபாதயேத் ॥ 2 ॥

யதா – எப்போது; ஸமித்தே – ஜொலித்துக்கொண் டிருக்கின்ற; ஹவ்யவாஹனே – அக்கினியில்; அர்ச்சி: – சுவாலைகள்; லேலாயதே ஹி – ஓங்கி எழுகின்றனவோ; ததா – அப்போது; ஆஜ்யபாகௌ அந்தரேண – இரண்டு பக்கங்களுக்கு நடுவில்; ஆஹுதீ: – ஆஹுதிகளை; ப்ரதிபாதயேத் – சமர்ப்பிக்க வேண்டும்.

**2. ஜொலித்துக்கொண்டிருக்கின்ற அக்கினியில் தீச் சுவாலைகள் ஓங்கி எழும்போது இரண்டு பக்கங் களுக்கு நடுவில் ஆஹுதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



யாகங்கள் வேதகாலத்தில் முக்கிய வழிபாட்டு முறையாக இருந்தன. மந்திரபூர்வமாக வளர்க்கப்பட்ட அக்கினியில் மந்திரபூர்வமாக அளிக்கப்படுகின்ற பொருட்கள் உரிய தேவர்களை அடையும் என்று நம்பப்பட்டது. சுவாலைகளுடன் நெருப்பு ஓங்கி எரியும்போது அதில் நெய், நைவேத்தியம் போன்ற ஆஹுதிப் பொருட்களை இட வேண்டும். சுவாலைகள் அடங்கிய பிறகு எதையும் சமர்ப்பிக்கக் கூடாது.

ஆஹுதிகளை எங்கே சமர்ப்பிப்பது? ஓங்கி எரியும் அக்கினியின் இடது மற்றும் வலது பாகங்களுக்கு நடுவில் சமர்ப்பிக்க வேண்டும். இது ஆவாப ஸ்தானம் எனப்படும்.

அக்னி ஹோத்ரம்

**यस्याग्निहोत्रम् अदर्शम् अपौर्णमासं**
**अचातुर्मास्यम् अनाग्रयणम् अतिथिवर्जितं च ।**
**अहुतम् अवैश्वदेवम् अविधिना हुतं**
**आसप्तमांस्तस्य लोकान् हिनस्ति ॥ ३॥**

யஸ்யாக்னிஹோத்ரம் அதர்சம் அபௌர்ணமாஸம்
அசாதுர்மாஸ்யம் அனாக்ரயணம் அதிதிவர்ஜிதம் ச ।
அஹுதம் அவைச்வதேவம் அவிதினா ஹுதம்
ஆஸப்தமாம்ஸ்தஸ்ய லோகான் ஹினஸ்தி ॥ 3 ॥

யஸ்ய – யாருடைய; அக்னிஹோத்ரம் – அக்கினி ஹோத்ரம்; அதர்சம் – தர்சம் இல்லாமல்; அபௌர்ணமாஸம் – பூர்ணமாசம் இல்லாமல்; அசாதுர்மாஸ்யம் – சாதுர்மாஸ்யம் இல்லாமல்; அனாக்ரயணம் – ஆக்கிரயணம் இல்லாமல்; அதிதிவர்ஜிதம் – விருந்தினர் இல்லாமல்; அஹுதம் – உரிய காலத்தில் அல்லாமல்; அவைச்வதேவம் – வைசுவ தேவ கர்மம் இல்லாமல்; அவிதினா ஹுதம் – உரிய முறையில் அல்லாமல்; தஸ்ய – அவனுடைய; ஆஸப்தமாம் – ஏழு; லோகான் – உலகங்களை; ஹினஸ்தி – அழிக்கிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



**3. தர்சம், பூர்ணமாசம், சாதுர்மாஸ்யம், ஆக்கிர யணம், வைசுவ தேவ கர்மம் ஆகிய கர்மங்கள் இல்லாமலும், விருந்தினரை அழைக்காமலும், உரிய முறையில் அல்லாமலும் ஒருவன் அக்னி ஹோத்ரம் செய்தால் அவனுக்கு ஏழு உலகங்களிலும் அழிவே மிஞ்சுகிறது.**

வைதீக கர்மங்களுள் முக்கியமானது அக்னி ஹோத்ரம். இல்லறத்தானின் தினசரிக் கடமைகளுள் இது ஒன்று. இந்த யாகம் காலையிலும் மாலையிலும் செய்யப்படுகிறது. அக்னி ஹோத்ர யாகத்துடன், இங்கே கூறப்பட்டுள்ள யாகங்களையும் சேர்த்து செய்வதால்தான் கடமை பூர்த்தி யாகும் என்று இந்த மந்திரம் தெரிவிக்கிறது.

**தர்சம்:** அமாவாசையின் மறுநாள் செய்ய வேண்டிய யாகம்.

**பூர்ணமாசம்:** பௌர்ணமியின் மறுநாள் செய்ய வேண்டிய யாகம்.

**சாதுர்மாஸ்யம்:** ஒவ்வொரு பருவ காலம் தொடங்கும் போதும், அதாவது நான்கு மாதங்களுக்கு ஒருமுறை செய்யப் படுகின்ற யாகம். ஆனி, ஐப்பசி, மாசி மாத ஆரம்பங்களில் இந்த யாகம் செய்யப்படுகிறது.

**ஆக்கிரயணம்:** அறுவடைக் காலத்தில் செய்ய வேண்டிய யாகம்.

**வைசுவ தேவம்:** பறவை, மிருகம் முதலான உயிரினங் களுக்கு உணவளித்தல் இந்த யாகத்தின் ஓர் அங்கமாகும்.

அக்னி ஹோத்ரத்தை மேற்கண்ட யாகங்களுடனும் நியதிகளுடனும் செய்யாதவனுடைய ஏழு உலகங்கள் அழிகின்றன. பூலோகம், புவர் லோகம், சொர்க்க லோகம், மஹர் லோகம், ஜன லோகம், தப லோகம், சத்திய லோகம் என்பவை ஏழு உலகங்கள். கர்மங்களை உரிய முறைப்படி செய்யும்போது, அந்தந்தக் கர்மங்களின் பலனாக இந்த

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



உலகங்களில் வாழ்வதற்கான வாய்ப்பு கிடைக்கிறது. கர்மங்களை உரிய முறைப்படி செய்யாதபோது அவற்றில் வாழும் பேற்றை ஒருவன் இழக்கிறான்.

### அக்கினியின் ஏழு பண்புகள்

யாக குண்டத்தில் அக்கினியின் செந்நாக்குகள் கனன்றெழுந்து ஓங்கி எரியும் காட்சியை #1.2.2-இல் கண்டோம். இங்கே அந்த அக்கினியின் அழகு கூறப்படுகிறது.

**काली कराली च मनोजवा च सुलोहिता या च सुधूम्रवर्णा ।**
**स्फुलिङ्गिनी विश्वरुची च देवी लेलायमाना इति सप्तजिह्वाः ॥**

காளீ கராளீ ச மனோஜவா ச
ஸுலோஹிதா யா ச ஸுதூம்ரவர்ணா ।
ஸ்ஃபுலிங்கினீ விச்வருசீ ச தேவீ
லேலாயமானா இதி ஸப்தஜிஹ்வாः ॥ 4 ॥

யா – யார்; காளீ – காளீ; கராளீ – கராளீ; மனோஜவா – மனோஜவா; ஸுலோஹிதா – சுலோஹிதா; ஸுதூம்ரவர்ணா – சுதூம்ரவர்ணா; ஸ்ஃபுலிங்கினீ –ஸ்ஃபுலிங்கிளீ; விச்வருசீ – விச்வருசீ; லேலாயமானா – ஓங்கி எழுகின்ற; தேவீ – பிரகாசத்துடன் கூடிய; ஸப்தஜிஹ்வாः – ஏழு நாக்குகள்; இதி – ஆகும்.

**4. காளீ, கராளீ, மனோஜவா, சுலோஹிதா, சுதூம்ரவர்ணா, ஸ்ஃபுலிங்கினீ, விச்வருசீ ஆகிய ஏழும் ஓங்கி எழுந்து பிரகாசத்துடன் எரிகின்ற அக்கினியின் ஏழு நாக்குகள் ஆகும்.**

அக்கினிக்கு ஏழு நாக்குகள். இவை உண்மையில் அக்கினியின் ஏழு பண்புகள். காளீ = கறுப்பு; கராளீ = பயங்கரம்; மனோஜவா = மனத்தைப்போல் வேகமானது; சுலோஹிதா = சிவப்பு; சுதூம்ரவர்ணா = புகையுடன் கூடியது; ஸ்ஃபுலிங்கினீ = நெருப்புப் பொறிகளுடன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



கூடியது; விச்வருசீ தேவீ = அழகுடன் எங்கும் பரவுகின்ற ஒளி.

கறுப்பும் சிவப்புமாகிய நிறத்தில், புகையுடனும் நெருப்புப் பொறிகளுடனும் பயங்கரமாக எழுந்து, அழகுடன் ஓங்கி வளர்ந்து, மனத்தைப்போல் வேகமாக எங்கும் பரவக்கூடிய அக்கினியின் அழகு இங்கே கூறப்படுகிறது.

யாகங்களின்மூலம் போகங்கள்: 5–6

**एतेषु यश्चरते भ्राजमानेषु यथाकालं चाहुतयो ह्याददायन् ।**
**तं नयन्त्येताः सूर्यस्य रश्मयो यत्र देवानां पतिरेकोऽधिवासः ॥**

ஏதேஷு யச்சரதே ப்ராஜமானேஷு
யதாகாலம் சாஹுதயோ ஹ்யாததாயன் ।
தம் நயந்த்யேதாः ஸூர்யஸ்ய ரச்மயோ
யத்ர தேவானாம் பதிரேகோऽதிவாஸः ॥ 5 ॥

ப்ராஜமானேஷு – ஒளிர்கின்ற; ஏதேஷு – இவற்றில்; யதா காலம் – உரியவேளையில்; யः – யார்; சரதே – செய்கிறானோ; தம் – அவனை; ஆததாயன் – கொடுக்கப்பட்ட; ஏதாः – இந்த; ஆஹுதயः – ஆஹுதிகள்; ஸூர்யஸ்ய – சூரியனின்; ரச்மயः – கிரணங்கள்; யத்ர – எங்கே; தேவானாம் – தேவர்களின்; பதிः – தலைவன்; ஏகः – ஒன்றேயானவன்; அதிவாஸः – வசிக்கிறானோ; நயந்தி – கொண்டு செல்கின்றன.

**5. ஒளிர்கின்ற இந்த அக்கினி நாக்குகளில் உரிய வேளையில் ஆஹுதிகளை அளித்து யார் கர்மங்கள் செய்கிறானோ, அவனை அந்த ஆஹுதிகள், சூரியனின் கிரணங்கள்போல், ஒன்றேயான தேவர்களின் தலைவன் வசிக்கின்ற இடத்திற்குக் கொண்டு செல்கின்றன.**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



தேவர்களின் தலைவன் இந்திரன். பல்வேறு உலகங்களுக்குச் செல்வதற்கான யாகங்கள் இந்திரனையும், வருணன் போன்ற மற்ற தேவர்களையும் உத்தேசித்துச் செய்யப்படுகின்றன. குறிப்பிட்ட தேவர்களுக்கு குறிப்பிட்ட அக்கினி நாக்குகளில் ஆஹுதிப் பொருட்களை அளிக்க வேண்டும் என்ற நியதி உள்ளது. யாகங்களில் சமர்ப்பிக்கப் படுபவற்றை அக்கினி தேவன் அந்தந்த தேவர்களிடம் கொண்டு சேர்க்கிறான். இதனாலேயே அக்கினி தேவன் புரோகிதன் எனப்படுகிறான்.[1]

அக்கினி தேவன் அவற்றைத் தேவர்களிடம் எப்படிச் சேர்க்கிறான்?

'சூரியனின் கிரணங்கள்போல்' என்கிறது மந்திரம்.

மழை பொழிவதற்குக் காரணமாக இருக்கிறான் சூரியன். சூட்டினால் கடல்நீர் ஆவியாகி, மேலே சென்று மேகமாகி மழை பொழிகிறது. கடல்நீரை அப்படியே அவன் மேலே கொண்டு செல்வதில்லை. தனது கிரணங்கள்மூலம் நீரை ஆவியாக்கி மேலே கொண்டு செல்கிறான். அதுபோல், அக்கினி தேவனும் ஆஹுதிப் பொருட்களை அப்படியே கொண்டு செல்லாமல் சாராம்சத்தைத் தேவர்களிடம் சேர்க்கிறான்.

ஆஹுதிப் பொருட்களை மட்டுமல்ல, ஆஹுதிப் பொருட்களை அளித்து யாகம் செய்பவனையும், உரிய காலத்தில் இந்திர லோகத்தில் சேர்க்கிறான் அக்கினி தேவன். ஆஹுதிப் பொருட்களின் சாராம்சத்தைச் சுமந்து செல்வதுபோல், யாகம் செய்தவன் மரணமடைந்தபிறகு, அவனது நுண்ணுடலைத் தாங்கிச் சென்று இந்திர லோகத்தில் சேர்க்கிறான் அவன்.

இந்திர லோகம் என்பது சுகபோகங்களின் எல்லை நிலமாகும். யாகங்களின் மூலம் அளவற்ற போகங்கள் அனுபவிக்கப்படுகின்றன என்பது கருத்து.

---

1. அக்னிம் ஈளே புரோஹிதம் । —ரிக் வேதம், 1.1.1.
பொருள்: புரோகிதனாகிய அக்கினியை வணங்குகிறேன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



एह्येहीति तमाहुतयः सुवर्चसः
सूर्यस्य रश्मिभिर्यजमानं वहन्ति ।
प्रियां वाचम् अभिवदन्त्यो ऽर्चयन्त्य
एष वः पुण्यः सुकृतो ब्रह्मलोकः ॥ ६ ॥

ஏஹ்யேஹீதி தமாஹுதய: ஸுவர்ச்சஸ:
ஸூர்யஸ்ய ரச்மிபிர்யஜமானம் வஹந்தி ।
ப்ரியாம் வாசம் அபிவதந்த்யோ ऽர்ச்சயந்த்ய
ஏஷ வ: புண்ய: ஸுக்ருதோ ப்ரஹ்மலோக: ॥ 6 ॥

*ஸுவர்ச்சஸ: – ஒளிர்கின்ற; ஆஹுதய: – ஆஹுதிகள்; தம் யஜமானம் – அவனை; ஏஹி ஏஹி இதி – வாருங்கள் வாருங்கள் என்று; அர்ச்சயந்த: – வழிபட்டு; ஏஷ: – இந்த; ப்ரஹ்ம லோக: – சொர்க்கம்; வ: – உங்கள்; புண்ய: ஸுக்ருத: – நற்செயல்களின் பலன்; ப்ரியாம் – இனிமையான; வாசம் – வார்த்தைகளை; அபிவதந்த்ய: – பேசி; ஸூர்யஸ்ய – சூரியனின்; ரச்மிபி: – கிரணங்களால்; வஹந்தி – தாங்கிச் செல்கின்றன.*

**6. ஒளிர்கின்ற அந்த ஆஹுதிகள், 'வாருங்கள், வாருங்கள்' என்று அவனை அழைத்து, வழிபட்டு, 'இந்தச் சொர்க்கம் நீங்கள் செய்த நற்செயல்களின் பலனாக உங்களுக்குக் கிடைத்தது' என்று இனிமையாகப் பேசி சூரியனின் கிரணங்களால் அவனைத் தாங்கிச் செல்கின்றன.**

இன்ன இன்ன யாகங்களுக்கு இன்ன இன்ன உலகங்கள், இன்ன இன்ன சுகபோகங்கள் என்றெல்லாம் வரையறுக்கப் பட்டுள்ளன. அந்த யாகங்களைச் செய்பவனுக்கு அவை வாய்க்கின்றன. உரிமையுடன் அவன் அந்த இன்பங்களையும் சுகபோகங்களையும் அனுபவிக்கலாம். அவன் அளித்த ஆஹுதிகளே ஒளி வடிவில் அவனை வரவேற்று, இனிய மொழிகள் கூறி, உபசரித்து அவனுக்கு அந்த இன்ப

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



உலகங்களை அறிமுகம் செய்து வைப்பதாக கவிதை நயத்துடன் கூறுகிறது உபநிஷதம்.

### சுகபோகங்கள் பலவீனமான படகுகள்: 7–10

இவ்வுலக, மறுவுலக சுகங்களுக்கென்று பல்வேறு யாகங்களைக் கூறிய உபநிஷதம், அதே மூச்சில் சுகபோகங்களின் மறுபக்கத்தைத் தெரிவிக்கிறது. 'இன்பங்கள் அனைத்தும் நிலையற்றவை. அவை மனிதனுடைய புலன்கள் அனைத்தின் ஆற்றலையும் வீணாக்குகின்றன. வாழ்க்கையோ குறுகியது'[1] என்று எச்சரிக்கிறது கட உபநிஷதம். குறுகிய இந்த வாழ்நாளில் நாம் செய்து முடிக்க வேண்டியவை ஏராளம் உள்ளன; உடல்சுகமும் உள்ளீடற்ற போகங்களுமே எல்லாம் என்று கொண்டு, அவற்றைப் பெறுவதற்காகக் கர்மங்களையும் யாகங்களையும் நாடி வாழ்க்கையை வீணாக்கக் கூடாதென்று தொடரும் 4 மந்திரங்கள் கூறுகின்றன.

**प्लवा ह्येते अदृढा यज्ञरूपा अष्टादशोक्तम् अवरं येषु कर्म ।**
**एतच्छ्रेयो येऽभिनन्दन्ति मूढा जरामृत्युं ते पुनरेवापि यन्ति ॥ ७॥**

ப்லவா ஹ்யேதே அத்ருடா யஜ்ஞரூபா
அஷ்ட்டாதசோக்தம் அவரம் யேஷு கர்ம ।
ஏதச்ச்ரேயோ யேऽபினந்தந்தி மூடா
ஜரா ம்ருத்யும் தே புனரேவாபி யந்தி ॥ 7 ॥

அஷ்ட்டாதச உக்தம் – 18 பேரால் சொல்லப்பட்ட; ஏதே – இந்த; யஜ்ஞரூபாः – யாகங்கள்; அத்ருடாः ஹி – பலவீனமான; ப்லவாः – படகுகள்; யேஷு – எவற்றில்; அவரம் – சாதாரண; கர்ம – கர்மங்கள்; ஏதத் – இது; ச்ரேயः – மேலானது; யே – இந்த; அபிநந்தந்தி – மகிழ்கிறார்களோ; மூடாः – மூடர்கள்; ஜரா – மூப்பு; ம்ருத்யும் – மரணம்;

---

1. ச்வோபாவோ மர்த்யஸ்ய யதந்தகைதத் ஸர்வேந்த்ரியாணாம் ஜரயந்தி தேஜः । அபி ஸர்வம் ஜீவிதம் அல்பமேவ । —கட உபநிஷதம், 1:1.26

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



தே – அவர்கள்; புனः ஏவ அபி – மீண்டும் மீண்டும்; யந்தி – செல்கிறார்கள்.

**7. பதினெட்டு பேரால் செய்யப்படுகின்ற இந்த யாகங்கள் பலவீனமான படகுகளைப் போன்றவை. ஏனெனில் இவை சாதாரண கர்மங்களை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றை மேலானதாகக் கொண்டு மகிழ்கின்ற மூடர்கள் மீண்டும்மீண்டும் மூப்பிற்கும் மரணத்திற்கும் உள்ளாகிறார்கள்.**

அக்னி ஹோத்ரத்தைச் செய்வதற்கு 18 பேர் வேண்டும்— இல்லறத்தான், அவனது மனைவி, 16 புரோகிதர்கள். இத்தகைய கர்மங்கள் பலவீனமான படகுகள். வாழ்க்கைக் கடலைக் கடக்க இவை உதவாது. இந்தக் கர்மங்கள் மேலும்மேலும் புலனின்பத்தை நாடச் செய்பவை. புலனின்பங்கள் மேலும்மேலும் நம்மை வாழ்க்கைக் கடலில் மூழ்கடிப்பவை; வாழ்க்கைக் கடலைக் கடக்கச் செய்பவை அல்ல.

**अविद्यायामन्तरे वर्तमानाः स्वयं धीराः पण्डितं मन्यमानाः ।**
**जङ्घन्यमानाः परियन्ति मूढा अन्धेनैव नीयमाना यथान्धाः ॥**

அவித்யாயாமந்தரே வர்த்தமானாः
ஸ்வயம் தீராः பண்டிதம் மன்யமானாः ।
ஜங்கன்யமானாः பரியந்தி மூடாः
அந்தேனைவ நீயமானா யதாந்தாः ॥ 8 ॥

அவித்யாயாம் – உலகியலின்; அந்தரே – நடுவில்; வர்த்தமானாः – வாழ்பவர்கள்; ஸ்வயம் – தங்களை; தீராः – அறிவாளிகள்; பண்டிதம் – பண்டிதர்கள்; மன்யமானாः – கருதுபவர்கள்; மூடாः – மூடர்கள்; ஜங்கன்யமானாः – மூப்பிலும் மரணத்திலும் உழல்பவர்கள்; அந்தேன – குருடனால்; நீயமானாः – வழிகாட்டப்படுகின்ற; அந்தாः யதா இவ – குருடர்களைப்போல்; பரியந்தி – உழல்கிறார்கள்.


CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



8. உலகியலின் நடுவில் வாழ்கின்ற மூடர்கள் தங்களை அறிவாளிகள் என்றும் பண்டிதர்கள் என்றும் கருதி மூப்பு, மரணம் ஆகியவற்றின் வசப்பட்டு உழல்கிறார்கள். குருடனால் வழிகாட்டப்பட்ட குருடர்களைப்போல் இவர்கள் மீண்டும்மீண்டும் பிறவிச் சுழலில் உழல்கிறார்கள்.

अविद्यायां बहुधा वर्तमाना
वयं कृतार्था इत्यभिमन्यन्ति बालाः ।
यत् कर्मिणो न प्रवेदयन्ति रागात्
तेनातुराः क्षीणलोकात् च्यवन्ते ॥ ९ ॥

அவித்யாயாம் பஹுதா வர்த்தமானா
வயம் க்ருதார்த்தா இத்யபிமன்யந்தி பாலாஃ ।
யத் கர்மிணோ ந ப்ரவேதயந்தி ராகாத்
தேனாதுராஃ க்ஷீணலோகாத் ச்யவந்தே ॥ 9 ॥

அவித்யாயாம் – உலகியலில்; பஹுதா – பலவிதமாக; வர்த்தமானாஃ – உழல்கின்ற; பாலாஃ – பக்குவமற்றவர்கள்; வயம் – தாங்கள்; க்ருதார்த்தாஃ – லட்சியத்தை அடைந்தவர்கள்; இதி – என்று; அபிமன்யந்தி – நினைக்கிறார்கள்; யத் – எதனால்; ந ப்ரவேதயந்தி – அறிவதில்லை; கர்மிணஃ – கர்மம் செய்பவர்கள்; ராகாத் – பற்றினால்; தேன – அதனால்; ஆதுராஃ – துயருற்றவர்கள்; க்ஷீணலோகாஃ – புண்ணியம் தீர்ந்தவர்கள்; ச்யவந்தே – வீழ்கிறார்கள்.

9. பக்குவமற்ற அவர்கள் உலகியலில் பலவிதமாக உழல்கிறார்கள். தாங்கள் லட்சியத்தை அடைந்துவிட்டதாக நினைக்கின்ற அவர்கள் உண்மையை அறிவதில்லை. அவர்கள் பற்றுடன் கர்மம் செய்பவர்கள். எனவே துயருற்று, புண்ணியம் தீர்ந்ததும் சொர்க்கத்திலிருந்து கீழே வீழ்கிறார்கள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



इष्टापूर्तं मन्यमाना वरिष्ठं नान्यच्छ्रेयो वेदयन्ते प्रमूढाः ।
नाकस्य पृष्ठे ते सुकृतेऽनुभूत्वा इमं लोकं हीनतरं वा विशन्ति ॥

இஷ்ட்டாபூர்த்தம் மன்யமானா வரிஷ்ட்டம்
நான்யச்ச்ரேயோ வேதயந்தே ப்ரமூடா: ।
நாகஸ்ய ப்ருஷ்ட்டே தே ஸுக்ருதேऽனுபூத்வா
இமம் லோகம் ஹீனதரம் வா விசந்தி ॥ 10 ॥

இஷ்ட்டம் – யாகங்கள்; பூர்த்தம் – நற்பணிகள்; வரிஷ்ட்டம் – மேலானவை; மன்யமானா: – கருதி; அன்யத் – வேறு; ச்ரேய: – மேலானது; ந வேதயந்தே – அறிவதில்லை; ப்ரமூடா: – வடிகட்டின முட்டாள்கள்; தே – அவர்கள்; நாகஸ்ய – சொர்க்கத்தின்; ப்ருஷ்ட்டே – மேல்; ஸுக்ருதே – புண்ணிய பலனை; அனுபூத்வா – அனுபவித்த பிறகு; இமம் – இந்த; லோகம் – பூமியையோ; ஹீனதரம் வா – இதைவிட இழிந்ததையோ; விசந்தி – அடைகிறார்கள்.

**10. இந்த வடிகட்டின முட்டாள்கள் யாகங்களும் நற்பணிகளுமே எல்லாம் என்று நினைக்கிறார்கள். அதற்கு மேலான எதையும் அவர்கள் அறிவதில்லை. சொர்க்க லோகங்களில் புண்ணிய பலனை அனுபவித்த பிறகு அவர்கள் இந்தப் பூமியையோ இதைவிட இழிந்த உலகங்களையோ அடை கிறார்கள்.**

'இங்கே இரண்டு வார்த்தைகள் உள்ளன— இஷ்டம், பூர்த்தம். யாகங்கள் போன்ற சடங்குகள் இஷ்டம். சாலைகள் அமைப்பது, மருத்துவமனைகள் கட்டுவது போன்றவை பூர்த்தம். ''மதச் சடங்குகளும் நற்பணிகள் செய்வதும்தான் மிக உயர்ந்தவை, அதற்குமேல் உயர்ந்தவை எதுவும் இல்லை என்று நினைப்பவர்கள் முட்டாள்களே.'' அவர்கள் விரும்பு வதை அடைகிறார்கள். சொர்க்கங்களுக்குச் செல்கிறார்கள், சுகபோகங்கள் ஒவ்வொன்றையும் அனுபவிக்கிறார்கள். கூடவே துக்கத்தையும் அனுபவிக்கிறார்கள். ஆனால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



எதற்கும் முடிவு இருக்கத்தானே வேண்டும்! அவை முடிந்ததும் கீழே வருகிறார்கள், மனிதர்களாகப் பிறக்கிறார்கள், இன்னும் கீழான பிறவியை அடைகிறார்கள்[1] என்று விளக்குகிறார் சுவாமி விவேகானந்தர்.

## துறவு (11–13)

யாகங்கள் மற்றும் நற்செயல்களின் வழியாக நல்ல வாழ்க்கை வாழலாம் என்பதில் ஐயமில்லை. ஆனால் தீமை கலவாத நன்மை என்ற ஒன்று இல்லை. 'தீமையே சிறிதும் கலவாத நற்செயல் எதுவும் இல்லை. தீயைச் சுற்றிப் புகையிருப்பதுபோல் செயலைச் சுற்றித் தீமையும் இருந்தே தீரும்[2] என்கிறார் சுவாமி விவேகானந்தர். நன்மை வேண்டுமானால் தீமையை, இன்பம் வேண்டுமானால் துன்பத்தை, சுகம் வேண்டுமானால் துக்கத்தை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். சுகபோகங்களை நாடுபவனின் வாழ்க்கை சுகத்திற்கும் துக்கத்திற்குமாக ஊசலாடுகிறது. இவை இரண்டும் கொண்டு வருகின்ற அனுபவங்கள் மீண்டும் மீண்டும் பிறவிக்கான காரணம் ஆகின்றன.

எனவேதான் சான்றோர் துறவை நாடினர். துன்பம் வேண்டாம் என்றால் அதன் இரட்டையான இன்பத்திலிருந்தும் ஒதுங்க வேண்டும். அதனால்தான் அவர்கள் சுகபோகங்களிலிருந்து ஒதுங்கி தவ வாழ்வை நாடினர்.

'நமது உண்மையான வாழ்க்கையின் அடிப்படையே துறவுதான்'[3] என்கிறார் சுவாமி விவேகானந்தர். ஆனால் இந்தத் துறவு உண்மையானதாக, இயல்பானதாக, வாழ்க்கையின் நிறைவாக இருக்க வேண்டும்; போலித்தனமானதாக, வாழ்க்கையிலிருந்து விலகி ஓடும் முயற்சியாக இருக்கக் கூடாது. சுகபோகங்களையும் இன்பங்களையும் முழுமையாக அனுபவித்து, அதன் நிறைவிலிருந்து வருகின்ற

1. ஞான தீபம், 3.61.
2. ஞான தீபம், 1.231.
3. ஞான தீபம், 3.322.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



தியாகமோ துறவோதான் உண்மையானதாக இருக்கும். 'போகமில்லாமல் தியாகம் இல்லை. முதலில் அனுபவி, பிறகு தியாகம் வரும்'[1] என்கிறார் சுவாமி விவேகானந்தர். 'இல்லாமல், திடீரென்று ஒருநாள் நாடு முழுவதும் சேர்ந்து துறவிகள் ஆகிவிட்டால் இங்கும் இல்லை, அங்கும் இல்லை என்றாகிவிடும்'[1] என்று எச்சரிக்கிறார் அவர்.

இந்தக் கருத்தை வலியுறுத்துவதற்காகவே உபநிஷதங்களில் சுகபோகங்களை அனுபவிப்பதற்கான பல்வேறு வழிமுறைகளைக் கூறுகின்ற பகுதிகளும் அதுபோலவே தியாகத்தை வலியுறுத்துகின்ற பகுதிகளும் காணப்படுகின்றன என்று கூறுகிறார் சுவாமி பூதேஷானந்தர். அதனால் தான் பல்வேறு சடங்குகளும் யாகங்களும் கர்மங்களும் தேவை என்று கூறப்படுகின்ற அதே வேளையில் அவை 'பலவீனமான படகு'(#7) என்று எச்சரிப்பதையும், தவ வாழ்க்கையே உயர்ந்தது(#11) என்று கூறுவதையும் இங்கே காண்கிறோம்.

## தவமே பலமான படகு

**तपः श्रद्धे ये ह्युपवसन्त्यरण्ये शान्ता विद्वांसो भैक्ष्यचर्यां चरन्तः ।**
**सूर्यद्वारेण ते विरजाः प्रयान्ति यत्रामृतः स पुरुषो हि अव्ययात्मा ॥**

தபः ச்ரத்தே யே ஹ்யுபவஸந்த்யரண்யே
சாந்தா வித்வாம்ஸோ பைக்ஷ்யசர்யாம் சரந்தः ।
ஸூர்யத்வாரேண தே விரஜாः ப்ரயாந்தி
யத்ராம்ருதः ஸ புருஷோ ஹி அவ்யயாத்மா ॥ 11 ॥

சாந்தாः – புலக்கட்டுப்பாடு உடையவர்கள்; வித்வாம்ஸः – அறிவொளி பெற்ற; பைக்ஷ்யசர்யாம் – பிச்சையேற்கும் வாழ்க்கை; சரந்தः – வாழ்பவர்கள்; அரண்யே – காட்டில்; யே – யார்; தபः ச்ரத்தே – சிரத்தையுடன் கூடிய தவ வாழ்வில்; உபவஸந்தே – வாழ்கிறார்களோ; தே – அவர்கள்;

1. ஞான தீபம், 8.209.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



*விரஜாः – வினைப்பயன்கள் நீங்கி; யத்ர – எங்கே; அம்ருதः – மரணமற்ற; ஸः – அந்த; அவ்யயாத்மா – அழிவற்ற; புருஷः – இறைவன்; ஸ ஏர்ய த்வாரேண – உத்தராயண பாதையில்; ப்ரயாந்தி – அடைகிறார்கள்.*

**11. புலக்கட்டுப்பாடு உடைய, அறிவொளி பெற்ற சான்றோர் பிச்சையேற்கும் வாழ்விலோ, காட்டில் சிரத்தையுடன் கூடிய தவ வாழ்க்கை வாழ்வதிலோ ஈடுபடுகிறார்கள். அவர்களின் வினைப்பயன்கள் அகல்கின்றன. அவர்கள் உத்தராயண பாதை வழியாக மரணமற்ற, அழிவற்ற இறைவனை அடைகிறார்கள்.**

முதல் அத்தியாயத்தில் கண்ட சாதாரண அறிவைப் பற்றியபடி உலகியல் வாழ்க்கைக்கான கர்மங்களில் ஈடுபடுபவர்கள் உலக இன்பங்களில் உழல்கிறார்கள். சாதாரண அறிவை விட்டு, உயர் அறிவை நாடுபவர்கள் இறைவனை அடைகிறார்கள்.

*உத்தராயண பாதை எது?*

*சூரியக் கிரணங்கள்.*

இந்த மந்திரத்தை விளக்கும்போது, 'உலகைத் துறந்து, புலன்களை அடக்கக் கற்றுக் கொண்டவர்கள் காடுகளில் வாழ்கிறார்கள். அவர்கள் இறந்ததும் சூரியக் கிரணங்களின் வழியாகச் சென்று பரம்பொருள் வாழும் உலகை அடைகிறார்கள்'[1] என்கிறார் சுவாமி விவேகானந்தர்.[2]

*முதற்படிகள்: 12–13*

தவ வாழ்க்கை அல்லது துறவு வாழ்க்கையின் அடிப்படைகள் பற்றி இந்த இரண்டு மந்திரங்கள் பேசுகின்றன.

---

1. ஞான தீபம், 3.61.
2. #1:2.5 விளக்கவுரையும் காண்க.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



**परीक्ष्य लोकान् कर्मचितान् ब्राह्मणो**
**निर्वेदमायात् नास्त्यकृतः कृतेन ।**
**तद्विज्ञानार्थं स गुरुमेवाभिगच्छेत्**
**समित्पाणिः श्रोत्रियं ब्रह्मनिष्ठम् ॥ १२॥**

பரீக்ஷ்ய லோகான் கர்மசிதான் ப்ராஹ்மணோ
நிர்வேதமாயாத் நாஸ்த்யக்ருத: க்ருதேன ।
தத்விஜ்ஞானார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத்
ஸமித்பாணி: ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்ட்டம் ॥ 12 ॥

*ப்ராஹ்மண: – சான்றோன்; கர்மசிதான் – செயல்களின் பலனாகப் பெற்ற; லோகான் – உலக அனுபவங்களை; பரீக்ஷ்ய – ஆராய்ந்து; க்ருதேன – கர்மங்களால்; அக்ருத: – இறைவன்; ந அஸ்தி – கிடைக்க மாட்டார்; நிர்வேதம் – பற்றின்மை; ஆயாத் – பெற்று; தத் – அவரை; விஜ்ஞானார்த்தம் – அறிவதற்காக; ஸ: – அவன்; ஸமித் பாணி: – கையில் சமித்துடன்; ச்ரோத்ரியம் – வேதங்களை உணர்ந்த; ப்ரஹ்மநிஷ்ட்டம் – இறைவனில் நிலைபெற்ற; குரும் ஏவ – குருவையே; அபிகச்சேத் – நாட வேண்டும்.*

**12. சான்றோன் ஒருவன், தான் செயல்களின் பலனாகப் பெற்ற உலக அனுபவங்களை முதலில் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதன் விளைவாக, 'கர்மங்களால் இறைவனை அடைய முடியாது, பற்றின்மையால்தான் முடியும்' என்பதை உணர்ந்து பற்றின்மை பெற வேண்டும். பிறகு, இறைவனை அறிவதற்காக, வேதங்களை உணர்ந்த இறைவனில் நிலைபெற்ற குருவையே கையில் சமித்துடன் நாட வேண்டும்.**

தவ வாழ்க்கை அல்லது துறவு வாழ்க்கைக்கான ஐந்து முக்கியப் படிகளை இந்த மந்திரம் கூறுகிறது. அவை நல்லொழுக்கம், ஆராய்ச்சி, பற்றின்மை, தெளிவான நோக்கம், குருவை நாடுதல்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



**நல்லொழுக்கம்:** தவ வாழ்க்கையை ஏற்பதற்கு முதலில் வேண்டியது நல்லொழுக்கத்தில் நிலைபெற்ற வாழ்வு. ஆன்மீகத்திற்கு அடைப்படை நல்லொழுக்கம். 'முதல் தேவை ஒழுக்கமான வாழ்க்கை. தெய்வங்கள் கீழே இறங்கி வர வேண்டும் என்று அத்தகையவன் விரும்பினால் அவர்கள் கீழே இறங்கி வந்து அவனுக்குக் காட்சி கொடுப்பார்கள். நமது மன நூல்கள் மற்றும் தத்துவ நூல்களின் சாரம் இதுவே: பூரணமான நல்லொழுக்க வாழ்க்கை'[1] என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

இத்தகைய வாழ்க்கையில் நிலைபெற்றவனாக இருக்க வேண்டும் என்பதைக் குறிக்க சான்றோன் (ப்ராஹ்மண:) என்ற வார்த்தை குறிக்கப்பட்டுள்ளது.

**ஆராய்ச்சி:** இன்னொருவர் துறவியாக வாழ்கிறார் என்பதற்காகவோ, நூல்களில் எழுதப்பட்டுள்ளதற்காகவோ துறவு வாழ்க்கையை நாடக் கூடாது. 'உலக இன்பங்களில் நாட்டம் எனக்குத் துளிகூட இல்லையா?' என்பதைத் தனக்குத் தானே ஆராய வேண்டும். 'இல்லை' என்பது முற்றமுடிந்த பதிலாக இருக்குமானால் உலக இன்பங்களுக்காக, சுகபோகங்களுக்காகச் செய்யப்படுகின்ற கர்மங்கள், செயல்கள் அனைத்தையும் விட்டுவிட வேண்டும். ஏனெனில் அவை நம்மை இறைநெறியில் செலுத்தாமல் மேலும் மேலும் பந்தங்களுக்கு உள்ளாக்குகின்றன.

**பற்றின்மை:** ஆனால் செயல் புரியாமலோ, கர்மங்களில் ஈடுபடாமலோ யாராலும் இருக்க முடியாது. எனவே தவிர்க்க முடியாத அவற்றைப் பற்றின்றிச் செய்ய வேண்டும்.

**தெளிவான நோக்கம்:** தவ வாழ்க்கை வாழ்வதும், துறவை நாடுவதும் 'இறைவனை அறிவதற்காக' என்ற நோக்கம் எப்போதும் மனத்தில் தெளிவாக இருக்க வேண்டும். இந்த நோக்கமின்றி தவங்களில் ஈடுபடுபவர்கள் அசுர இயல்பினர் என்று கீதை பாகுபடுத்துகிறது.[2] எந்தச்

1. ஞான தீபம், 2.282.
2. கீதை, 17.5-6 & 14-19

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



செயலில் ஈடுபடும்போதும், அது இறைவனுக்காக, இறைவனை அறிவதற்காக என்ற நோக்கம் மனத்தில் பின்னணியில் தெளிவாக இருக்க வேண்டும்.

**குருவை நாடுதல்:** 'ஆன்மீக வளர்ச்சிக்கு, நூல்களிலிருந்து அனேகமாக ஒன்றுமே பெற முடியாது. நூல்களைப் படிக்கும்போது, சிலவேளைகளில், நம் ஆன்மீக வளர்ச்சிக்கு ஏதோ உதவி கிடைப்பது போன்றதொரு மனமயக்கம் ஏற்படுகிறது. ஆராய்ந்து பார்த்தால் நம் அறிவுக்கு உதவி கிடைத்ததே தவிர ஆன்மாவிற்கு அல்ல என்பது தெரிய வரும். ... நமக்குத் தேவைப்படும் தூண்டுதலை நூல்கள் தர முடியாது. ... ஆன்ம வளர்ச்சிக்கான அந்தத் தூண்டுதல் இன்னொருவரிடமிருந்து தான் வர வேண்டும். யாரிடமிருந்து இந்தத் தூண்டுதல் வருகிறதோ அவரே குரு' என்கிறார் சுவாமி விவேகானந்தர்.[1]

குரு இறையனுபூதி பெற்றவராக, இறைவனில் நிலைபெற்றவராக இருக்க வேண்டும். அத்தகைய ஒருவரிடமிருந்து மட்டுமே இறைவனை அறிவதற்கான தூண்டுதலை மற்றவர்கள் பெற முடியும் என்று இந்த மந்திரம் சுட்டிக்காட்டுவதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இறைவனில் நிலைபெற்ற ஒருவரிடமிருந்து அந்தத் தூண்டுதலை எப்படிப் பெறுவது? அவருக்குச் சேவைகள் செய்வதன்மூலம். 'வணங்கியும், கேள்விகள் கேட்டும், பணிவிடை செய்தும்'[2] அவற்றைப் பெற வேண்டும் என்று கீதை கூறுகிறது.

வேத காலத்தில் யாகங்கள் முக்கியமான வழிபாட்டு முறையாக இருந்தன. எனவே அதற்குத் தேவையான விறகைத் (சமித்) தட்சிணையாக மாணவர்கள் கொண்டு சென்றனர். சமித்தைக் கொண்டு செல்வது மாணவனின் எளிமையையும் பணிவையும் காட்டுகிறது.

---

1. ஞான தீபம், 1.266–267; குரு பற்றி சுவாமிஜியின் கருத்துக்களுக்கு 'குரு' என்ற அத்தியாயம் (266–281) பார்க்க.
2. தத்வித்தி ப்ரணிபாதேன பரிப்ரச்னேன சேவயா। —கீதை, 4.34.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



**तस्मै स विद्वानुपसन्नाय सम्यक् प्रशान्तचित्ताय शमान्विताय ।**
**येनाक्षरं पुरुषं वेद सत्यं प्रोवाच तां तत्त्वतो ब्रह्मविद्याम् ॥ १३॥**

தஸ்மை ஸ வித்வானுபஸன்னாய ஸம்யக்
ப்ரசாந்த சித்தாய சமான்விதாய ।
யேனாக்ஷரம் புருஷம் வேத ஸத்யம்
ப்ரோவாச தாம் தத்வதோ ப்ரஹ்மவித்யாம் ॥ 13 ॥

ஸ: – அந்த; வித்வான் – குரு; ஸம்யக் – நன்றாக; உபஸன்னாய – அணுகிய; ப்ரசாந்த சித்தாய – அமைதியுற்ற மனம் கொண்ட; சம அன்விதாய – புலக் கட்டுப்பாடு உடைய; தஸ்மை – அவனுக்கு; யேன – எதனால்; அக்ஷரம் – அழிவற்ற; ஸத்யம் – உண்மை வடிவான; புருஷம் – இறைவனை; வேத – அறிய முடியுமோ; தாம் – அந்த; ப்ரஹ்மவித்யாம் – இறைநெறியை; தத்வத: – புரிந்து கொள்ளும் வகையில்; ப்ரோவாச – கூற வேண்டும்.

**13. நன்றாக அமைதியுற்ற மனமும், புலக்கட்டுப் பாடும் உடைய மாணவன் குருவை அணுகும்போது, அழிவற்ற, உண்மை வடிவான இறைவனை அறி வதற்கான இறைநெறியை அவன் புரிந்துகொள்ளும் வகையில் குரு உபதேசிக்க வேண்டும்.**

இதி முண்டகோபநிஷதி ப்ரதம முண்டகே த்விதீய: கண்ட: ॥



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



# 1:2
# போகமும் துறவும்

## சுருக்கம்

1. சிறப்பாக வாழ வழி: 1
2. யாகம்: ஒரு காட்சி: 2
3. அக்னி ஹோத்ரம்: 3
4. அக்கினியின் ஏழு பண்புகள்: 4
5. யாகங்களின்மூலம் போகங்கள்: 5–6
6. சுகபோகங்கள் பலவீனமான படகுகள்: 7–10
7. துறவு: 11–13
   தவமே பலமான படகு: 11
   முதற்படிகள்: 12–13

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அந்த இறைவனிடமிருந்தே கடல்கள், மலைகள்,
நதிகள் செடிகொடிகள் எல்லாம் தோன்றின். -9

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

# 2:1 ஜோதியும் சுடரும்

முண்டக உபநிஷதத்தின் இரண்டாம் பகுதி இங்கே ஆரம்பிக்கிறது. ஆழ்ந்த சிந்தனைக்குரிய பகுதி இது.

இந்த அத்தியாயத்தில் ஆழ்ந்த சிந்தனை பற்றி கூறப்படுகிறது. அடுத்த அத்தியாயத்தில் காணப்படுகின்ற தியான முறைகளுக்கு இந்த ஆழ்ந்த சிந்தனை ஒரு சிறந்த அடித்தளமாக அமைகிறது.

அது என்ன சிந்தனை?

நாம் தெய்வீகமானவர்கள் என்ற சிந்தனைதான் அது.

சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்:

'விதி என்று எதுவும் கிடையாது. நமது வாழ்க்கை நமது முன்வினைப் பயனின், நமது கர்மத்தின் விளைவு. இவ்வாறு நாமே நமது கர்மத்தை உருவாக்கி இருக்கிறோம் என்றால், அதை அழிக்கவும் நம்மால் முடியும் என்பது உண்மைதானே?

'வண்ணத்துப் புழு தன் உடலிலிருந்து சுரக்கின்ற பொருளால் தன்னைச் சுற்றித் தானே கூடமைத்துக் கொண்டு, அதில், தானே சிறைப்படுகிறது. அங்கே கிடந்தவாறு அது அழலாம், கதறலாம், ஓலமிடலாம். ஆனால் அதன் உதவிக்கு யாரும் வர மாட்டார்கள். இறுதியில் அதுவே ஞானம் பெறுகிறது, அழகிய வண்ணத்துப் பூச்சியாக வெளிவருகிறது. நமது தளைகளைப் பொறுத்தவரையிலும் இதே விஷயம்தான். யுக யுகங்களாக நாமும் பிறப்பு இறப்பு என்று சுழன்று வருகிறோம். இப்போது துன்பத்தை உணர்கிறோம், நாம் கட்டுண்டிருப்பதை எண்ணி அழுது புரள்கிறோம். ஆனால் அழுவதாலும்



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



புரள்வதாலும் எந்தப் பயனும் இல்லை. இந்தத் தளைகளை உடைப்பதில் நாம் முனைந்து ஈடுபட வேண்டும்.

'எல்லா தளைகளுக்கும் முக்கியக் காரணம் அறியாமை. மனிதன் இயல்பிலேயே கொடியவன் அல்ல, ஒருபோதும் அல்ல. அவன் இயல்பிலேயே தூயவன், முற்றிலும் புனித மானவன். ஒவ்வொரு மனிதனும் தெய்வீகமானவன். நீ காண் கின்ற ஒவ்வொரு மனிதனும் இயல்பிலேயே கடவுள்தான். இந்த இயல்பு அறியாமையால் மறைக்கப்பட்டிருக்கிறது. இந்த அறியாமையே நம்மைக் கட்டுண்டவர்களாக ஆக்கியிருக்கிறது. எல்லா துன்பங்களுக்கும் அறியாமையே காரணம். எல்லா கொடுமைகளுக்கும் அறியாமையே காரணம். அறிவு உலகை நல்லதாக்குகிறது. அறிவு எல்லா துன்பங்களையும் ஒழிக்கிறது, அறிவு நம்மைச் சுதந்திரர் களாக்குகிறது. எந்த அறிவு? வேதியியலா? இயற்பியலா? வானஇயலா? பூமியியலா? அவை எல்லாம் நமக்குச் சிறிது உதவுகின்றன, மிகச்சிறிது உதவுகின்றன. ஆனால் முக்கிய மான அறிவு என்பது உங்கள் இயல்பே. ''உன்னை அறிந்துகொள்.'' நீங்கள் உண்மையில் யார், உங்கள் உண்மை இயல்பு எது என்பதை அறிந்துகொள்ள வேண்டும். அந்த எல்லையற்ற இயல்பை உங்களுள் உணர வேண்டும். அப்போது தளைகளெல்லாம் நொறுங்கிவிடும்.'[1]

நாம் எப்படி தெய்வீகமானவர்கள்? ஏன் தெய்வீக மானவர்கள்?

நாம் தெய்வத்திடமிருந்து தோன்றியவர்கள், தெய்வத் தின் குழந்தைகள். தெய்வம் என்னும் மாபெரும் ஜோதி யிலிருந்து தோன்றிய சுடர்கள் நாம்(#1). பாலில் செய்த பண்டங்கள் அனைத்திலும் பாலின் தன்மை இருப்பது போல் தெய்வத்திலிருந்து தோன்றிய நம்மிடமும் தெய்வீகம் உள்ளது, நாம் தெய்வீகமானவர்கள்.

நாம் மட்டுமல்ல, உயிரினங்கள் மட்டுமல்ல; கடவுளிட மிருந்து தோன்றியதான இந்தப் படைப்பிலுள்ள ஒவ்

1. ஞான தீபம், 3.4–5

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



வொன்றும் —மரமும் செடியும், மண்ணும் விண்ணும், கடலும் மலையும்— எல்லாம் தெய்வீகம்.

நாம் தெய்வீகமானவர்கள்

**तदेतत् सत्यम् - यथा सुदीप्तात् पावकाद्**
**विस्फुलिङ्गाः सहस्रशः प्रभवन्ते सरूपाः ।**
**तथाऽक्षराद् विविधाः सोम्य भावाः**
**प्रजायन्ते तत्र चैवापि यन्ति ॥ १॥**

ததேதத் ஸத்யம் – யதா ஸுதீப்தாத் பாவகாத்
விஸ்ஃபுலிங்காः ஸஹஸ்ரசः ப்ரபவந்தே ஸரூபாः ।
ததாऽக்ஷராத் விவிதாः ஸோம்ய பாவாः
ப்ரஜாயந்தே தத்ர சைவாபி யந்தி ॥ 1 ॥

தத் ஏதத் – இந்த இது; ஸத்யம் – உண்மை; யதா – எப்படி; ஸுதீப்தாத் – கொழுந்துவிட்டு எரிகின்ற; பாவகாத் – நெருப்பிலிருந்து; ஸஹஸ்ரசः – ஆயிரக்கணக்கான; விஸ்ஃபுலிங்காः – நெருப்புப் பொறிகள்; ஸரூபாः – அதே இயல்புடைய; ப்ரபவந்தே – உண்டாகின்றனவோ; ததா – அவ்வாறு; ஸோம்ய – இனியவனே; அக்ஷராத் – அழிவற்ற இறைவனிலிருந்து; விவிதாः – பலவிதமான; பாவாः – உயிரினங்கள்; ப்ரஜாயந்தே – உண்டாகின்றன; தத்ர ச ஏவ – அங்கேயே; அபியந்தி – ஒடுங்குகின்றன.

**1. இனியவனே! இது உண்மை. கொழுந்துவிட்டு எரிகின்ற நெருப்பிலிருந்து அதே இயல்புடைய ஆயிரக்கணக்கான நெருப்புப் பொறிகள் எவ்வாறு உண்டாகின்றனவோ, அவ்வாறே அழிவற்ற இறைவனிலிருந்து பலவிதமான உயிரினங்கள் உண்டாகின்றன. அவரிலேயே ஒடுங்கவும் செய்கின்றன.**

இறைவன் என்னும் மாபெரும் ஜோதியிலிருந்து தோன்றிய சுடர்கள் நாம். அதாவது நாம் தெய்வீக அம்சம் உடையவர்கள், தெய்வத்தின் குழந்தைகள். இதன் பொருள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



என்ன? இது நமக்குத் தரும் செய்தி என்ன? சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்:

'தான் எதற்கும் உபயோகமற்றவன் என்று இரவு பகலாக எண்ணிக் கொண்டிருக்கும் ஒருவனிடமிருந்து எந்த நன்மையும் பிறக்காது. ''நான் வேதனைக்குரியவன், கீழானவன், எதற்கும் பயனற்றவன்'' என்று இரவும் பகலும் நினைத்துக் கொண்டிருந்தால், அவன் ஒன்றுக்கும் பிரயோஜனம் இல்லாதவனாகத்தான் ஆகிறான். ''ஆம், என்னால் எதுவும் முடியும்'' என்று நீங்கள் நினைத்தால் அத்தகைய ஒருவர் ஆவீர்கள். மாறாக ''நான் ஒன்றுக்கும் உதவாதவன்'' என்று கூறியவாறு அல்லும் பகலும் அதையே உருப்போட்டுக் கொண்டிருந்தால் அப்படியே எதற்கும் பயனற்றுப் போய் விடுவீர்கள். நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய தொரு பேருண்மை இது. நாம் எல்லாம் வல்ல இறைவனின் பிள்ளைகள். எல்லையற்றதான தெய்வீக நெருப்புப் பிழம்பின் பொறிகள் நாம், நாம் எப்படி பூஜ்யங்கள் ஆக முடியும்? நாமே எல்லாம். எதைச் செய்யவும் நாம் தயாராக இருக்கிறோம். நம்மால் எதையும் செய்ய முடியும்.'[1]

## இறைவன் (2–10)

இறைவன் என்ற மாபெரும் ஜோதியிலிருந்து தோன்றிய சுடர்கள் நாம். அந்த இறைவனைப் பற்றிய சிந்தனை தொடங்குகிறது.

### இறைவன் ஒளிமயமானவர்

**दिव्यो ह्यमूर्तः पुरुषः सबाह्याभ्यन्तरो ह्यजः ।**
**अप्राणो ह्यमनाः शुभ्रो ह्यक्षरात्परतः परः ॥ २॥**

தீவ்யோ ஹ்யமூர்த்தः புருஷः ஸபாஹ்யாப்யந்தரோ ஹ்யஜः ।
அப்ராணோ ஹ்யமனாः சுப்ரோ ஹ்யக்ஷராத் பரதः பரः ॥ 2 ॥

---

1. ஞான தீபம், 5.324.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



திவ்யः – ஒளிமயமானவர்; அமூர்த்தः – உருவமற்றவர்; புருஷः – இதயத்தில் உறைபவர்; ஸபாஹ்யாப்யந்தரः – அகமும் புறமும் நிறைந்தவர்; அஜः – பிறப்பற்றவர்; அப்ராணः – பிராணன் இல்லாதவர்; அமனாः – மனம் இல்லாதவர்; சுப்ரः – தூயவர்; பரதः – மேலானவர்; அக்ஷராத் – பிரகிருதியைவிட; பரः – உயர்ந்தவர்.

**2. இறைவன் ஒளிமயமானவர், உருவமற்றவர், இதயத்தில் உறைபவர், அகமும் புறமும் நிறைந்தவர், பிறப்பற்றவர், பிராணன் இல்லாதவர், மனம் இல்லாதவர், தூயவர், மேலானவர், பிரகிருதியைவிட உயர்ந்தவர்.**

பிராணன், மனம் போன்றவை படைப்பில் உள்ளவை. இறைவனோ படைப்புக்கு முந்தியவர். எனவே அவர் பிராணனோ மனமோ இல்லாதவர் என்று கூறப்படுகிறார்.

அக்ஷரம் அல்லது பிரகிருதி என்பது படைப்புக்கு முந்தைய நிலை. படைப்பின்போது தோற்றத்திற்கு வருகின்ற அனைத்தும் அதற்கு முன்பு தோன்றாநிலையில் அல்லது ஒடுக்கநிலையில் இறைவனில் உள்ளன. இந்தத் தோன்றா நிலையே பிரகிருதி. இறைவன் அதற்கும் மேலானவர்.

## இறைவனே அனைத்திற்கும் காரணம்

**एतस्माज्जायते प्राणो मनः सर्वेन्द्रियाणि च ।**
**खं वायुर्ज्योतिरापः पृथिवी विश्वस्य धारिणी ॥ ३॥**

ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராணோ மனः ஸர்வேந்த்ரியாணி ச ।
கம் வாயுர்ஜ்யோதிராபः ப்ருதிவீ விச்வஸ்ய தாரிணீ ॥ 3 ॥

ஏதஸ்மாத் – அவரிலிருந்து; ப்ராணः – பிராணன்; மனः – மனம்; ஸர்வேந்த்ரியாணி ச – எல்லா புலன்களும்; கம் – வெளி; வாயுः – காற்று; ஜ்யோதிः – நெருப்பு; ஆபः – நீர்; விச்வஸ்ய – அனைத்தையும்; தாரிணீ – தாங்குகின்ற; ப்ருதிவீ – பூமி; ஜாயதே – தோன்றின.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



**3. பிராணன், மனம், புலன்கள், வெளி, காற்று, நெருப்பு, நீர், அனைத்தையும் தாங்குகின்ற பூமி எல்லாம் அந்த இறைவனிலிருந்தே தோன்றின.**

## இறைவனே பிரபஞ்சமாக உள்ளார்

இறைவனிலிருந்து அனைத்தும் தோன்றின. தோன்றிய அனைத்திலும் அவர் நிறைந்துள்ளார்.

**अग्निर्मूर्धा चक्षुषी चन्द्रसूर्यौ**
**दिशः श्रोत्रे वाग्विवृताश्च वेदाः ।**
**वायुः प्राणो हृदयं विश्वमस्य**
**पद्भ्यां पृथिवी ह्येष सर्वभूतान्तरात्मा ॥ ४॥**

அக்னிர்மூர்தா சக்ஷுஷீ சந்த்ரஸூர்யௌ
திசः ச்ரோத்ரே வாக் விவ்ருதாச்ச வேதாः ।
வாயுः ப்ராணோ ஹ்ருதயம் விச்வமஸ்ய
பத்ப்யாம் ப்ருதிவீ ஹ்யேஷ ஸர்வபூதாந்தராத்மா ॥ 4 ॥

அஸ்ய – அவரது; மூர்தா – தலை; அக்னிः – சொர்க்கம்; சக்ஷுஷீ – கண்கள்; சந்த்ர ஸூர்யௌ – சந்திர சூரியர்கள்; ச்ரோத்ரே – காதுகள்; திசः – திசைகள்; விவ்ருதாः – வெளிப்பட்ட; வாக் – வாக்கு; வேதாः – வேதங்கள்; ப்ராணः – பிராணன்; வாயுः – காற்று; ஹ்ருதயம் – மனம்; விச்வம் – பிரபஞ்சம்; பத்ப்யாம் – கால்கள்; ப்ருதிவீ – பூமி; ஏஷः – அவர்; ஸர்வபூத அந்தராத்மா ஹி – எல்லா உயிர்களின் உள்ளும் உறைபவர்.

**4. அந்த இறைவனுக்கு சொர்க்கம் தலையாக அமைந்துள்ளது. சந்திர சூரியர்கள், கண்கள்; திசைகள், காதுகள்; வெளிப்பட்ட வாக்கு, வேதங்கள்; காற்று, பிராணன்; பிரபஞ்சம், மனம்; பூமி, கால்கள். அந்த இறைவனே எல்லா உயிர்களின் உள்ளும் உறைகிறார்.**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



## இறைவனிலிருந்து வந்தவர்கள் நாம்

நாம் தெய்வக் குழந்தைகள் என்று #2:1.1-இல் கண்டோம். நாம் தெய்வத்திடமிருந்தே வந்ததால்தான் தெய்வக் குழந்தைகள் என்று இந்த மந்திரம் காரணம் காட்டி விளக்குகிறது.

**तस्मादग्निः समिधो यस्य सूर्यः**
**सोमात्पर्जन्य ओषधयः पृथिव्याम् ।**
**पुमान् रेतः सिञ्चति योषितायां**
**बह्वीः प्रजाः पुरुषात्संप्रसूताः ॥ ५॥**

தஸ்மாதக்னி: ஸமிதோ யஸ்ய ஸூர்ய:
ஸோமாத் பர்ஜன்ய ஓஷதய: ப்ருதிவ்யாம் ।
புமான் ரேத: ஸிஞ்சதி யோஷிதாயாம்
பஹ்வீ: ப்ரஜா: புருஷாத் ஸம்ப்ரஸூதா: ॥ 5 ॥

தஸ்மாத் – அவரிடமிருந்து; அக்னி: – வானுலகம்; யஸ்ய - யாருடைய; ஸமித: – எரிபொருள்; ஸூர்ய: – சூரியன்; ஸோமாத் – சந்திரனிலிருந்து; பர்ஜன்ய: – மேகங்கள்; ப்ருதிவ்யாம் – பூமியில் வளர்கின்ற; ஓஷதய: – செடி கொடிகள்; புமான் – ஆண்; யோஷிதாயாம் – பெண்ணிடம்; ரேத: – விந்துவை; ஸிஞ்சதி – விடுகிறான்; புருஷாத் – இறைவனிலிருந்து; பஹ்வீ: – பலவிதமான; ப்ரஜா: – உயிரினங்கள்; ஸம்ப்ரஸூதா: – உண்டாகின்றன.

**5. அந்த இறைவனிடமிருந்து வானுலகம் உண்டாயிற்று. சூரியன் அந்த வானுலகை ஒளிரச் செய்கிறான். சந்திரனிலிருந்து மேகங்கள் உண்டாயின. பூமியில் வளர்கின்ற செடிகொடிகள் மேகங்களின் காரணமாக உண்டாயின. ஆண் பெண்ணிடம் விந்துவை விடுவதன்மூலம் உயிர்கள் தோன்றின. இவ்வாறு அந்த இறைவனிலிருந்தே பலவிதமான உயிரினங்கள் உண்டாகின்றன.**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



**3. பிராணன், மனம், புலன்கள், வெளி, காற்று, நெருப்பு, நீர், அனைத்தையும் தாங்குகின்ற பூமி எல்லாம் அந்த இறைவனிலிருந்தே தோன்றின.**

இறைவனே பிரபஞ்சமாக உள்ளார்

இறைவனிலிருந்து அனைத்தும் தோன்றின. தோன்றிய அனைத்திலும் அவர் நிறைந்துள்ளார்.

**अग्निर्मूर्धा चक्षुषी चन्द्रसूर्यौ**
**दिशः श्रोत्रे वाग्विवृताश्च वेदाः ।**
**वायुः प्राणो हृदयं विश्वमस्य**
**पद्भ्यां पृथिवी ह्येष सर्वभूतान्तरात्मा ॥ ४॥**

அக்னிர்மூர்தா சக்ஷுஷீ சந்த்ரஸூர்யௌ
தீச: ச்ரோத்ரே வாக் விவ்ருதாச்ச வேதா: ।
வாயு: ப்ராணோ ஹ்ருதயம் விச்வமஸ்ய
பத்ப்யாம் ப்ருதிவீ ஹ்யேஷ ஸர்வபூதாந்தராத்மா ॥ 4 ॥

அஸ்ய – அவரது; மூர்தா – தலை; அக்னி: – சொர்க்கம்; சக்ஷுஷீ – கண்கள்; சந்த்ர ஸூர்யௌ – சந்திர சூரியர்கள்; ச்ரோத்ரே – காதுகள்; திச: – திசைகள்; விவ்ருதா: – வெளிப்பட்ட; வாக் – வாக்கு; வேதா: – வேதங்கள்; ப்ராண: – பிராணன்; வாயு: – காற்று; ஹ்ருதயம் – மனம்; விச்வம் – பிரபஞ்சம்; பத்ப்யாம் – கால்கள்; ப்ருதிவீ – பூமி; ஏஷ: – அவர்; ஸர்வபூத அந்தராத்மா ஹி – எல்லா உயிர்களின் உள்ளும் உறைபவர்.

**4. அந்த இறைவனுக்கு சொர்க்கம் தலையாக அமைந்துள்ளது. சந்திர சூரியர்கள், கண்கள்; திசைகள், காதுகள்; வெளிப்பட்ட வாக்கு, வேதங்கள்; காற்று, பிராணன்; பிரபஞ்சம், மனம்; பூமி, கால்கள். அந்த இறைவனே எல்லா உயிர்களின் உள்ளும் உறைகிறார்.**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



## இறைவனிலிருந்து வந்தவர்கள் நாம்

நாம் தெய்வக் குழந்தைகள் என்று #2:1.1-இல் கண்டோம். நாம் தெய்வத்திடமிருந்தே வந்ததால்தான் தெய்வக் குழந்தைகள் என்று இந்த மந்திரம் காரணம் காட்டி விளக்குகிறது.

**तस्मादग्निः समिधो यस्य सूर्यः**
**सोमात्पर्जन्य ओषधयः पृथिव्याम् ।**
**पुमान् रेतः सिञ्चति योषितायां**
**बह्वीः प्रजाः पुरुषात्संप्रसूताः ॥ ५॥**

தஸ்மாதக்னீ: ஸமிதோ யஸ்ய ஸூர்ய:
ஸோமாத் பர்ஜன்ய ஓஷதய: ப்ருதிவ்யாம் ।
புமான் ரேத: ஸிஞ்சதி யோஷிதாயாம்
பஹ்வீ: ப்ரஜா: புருஷாத் ஸம்ப்ரஸூதா: ॥ 5 ॥

தஸ்மாத் – அவரிடமிருந்து; அக்னி: – வானுலகம்; யஸ்ய - யாருடைய; ஸமித: – எரிபொருள்; ஸூர்ய: – சூரியன்; ஸோமாத் – சந்திரனிலிருந்து; பர்ஜன்ய: – மேகங்கள்; ப்ருதிவ்யாம் – பூமியில் வளர்கின்ற; ஓஷதய: – செடி கொடிகள்; புமான் – ஆண்; யோஷிதாயாம் – பெண்ணிடம்; ரேத: – விந்துவை; ஸிஞ்சதி – விடுகிறான்; புருஷாத் – இறைவனிலிருந்து; பஹ்வீ: – பலவிதமான; ப்ரஜா: – உயிரினங்கள்; ஸம்ப்ரஸூதா: – உண்டாகின்றன.

**5. அந்த இறைவனிடமிருந்து வானுலகம் உண்டாயிற்று. சூரியன் அந்த வானுலகை ஒளிரச் செய்கிறான். சந்திரனிலிருந்து மேகங்கள் உண்டாயின. பூமியில் வளர்கின்ற செடிகொடிகள் மேகங்களின் காரணமாக உண்டாயின. ஆண் பெண்ணிடம் விந்துவை விடுவதன்மூலம் உயிர்கள் தோன்றின. இவ்வாறு அந்த இறைவனிலிருந்தே பலவிதமான உயிரினங்கள் உண்டாகின்றன.**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



உயிரினங்கள் எவ்வாறு உண்டாகின்றன, அதாவது கடவுள் எவ்வாறு நமக்கு ஆதி காரணமாகிறார் என்பதை இந்த மந்திரம் கூறுகிறது.

இறைவனிலிருந்து உயிரினங்கள் ஐந்து படிகளாகத் தோன்றுகின்றன—

1. இறைவனிலிருந்து வானுலகம் தோன்றியது.

2. வானுலகில் சஞ்சரிப்பவர்களுள் ஒருவனான சந்திரனிலிருந்து மேகங்கள் தோன்றுகின்றன.

3. மேகங்கள் பெய்கின்ற மழை காரணமாக பூமியில் செடிகொடிகள் முளைக்கின்றன.

4. பூமியிலிருந்து விடுபட்ட உயிர்கள் மழை வழியாக செடி கொடிகளில் புகுந்து, அதை உண்கின்ற ஆண்களிடம் தங்குகின்றன.

5. அந்த உயிர்கள் ஆணின் விந்து வழியாகப் பெண்ணிடம் சென்று மீண்டும் உயிரினங்களாகப் பிறக்கின்றன.

இந்த ஐந்து படிகளும் ஐந்து அக்கினிகளாகக் கொள்ளப்பட்டு, பஞ்சாக்கினி வித்யை என்று சாந்தோக்ய உபநிஷதத்திலும் (5:7.1) பிருஹதாரண்யக உபநிஷதத்திலும் (6:2.9) விரிவாகப் பேசப்படுகிறது.

## வாழும் வழியும் இறைவனே: 6–8

மனிதனும், பூமியில் வாழும் மற்ற உயிரினங்களும், தேவர்கள் போன்ற விண்ணுலகினரும் இறைவனிலிருந்தே தோன்றினர். அவர்கள் வளர்வதற்குத் தேவையான உணவுப் பொருட்கள், மனம் வளர்வதற்கான சிரத்தை முதலிய பண்புகள், வேதங்கள், மந்திரங்கள் அனைத்தும் அவரிடமிருந்தே தோன்றியதைத் தொடரும் 3 மந்திரங்கள் கூறுகின்றன.

तस्मादृचः साम यजूंषि दीक्षा
यज्ञाश्च सर्वे क्रतवो दक्षिणाश्च ।
संवत्सरश्च यजमानश्च लोकाः
सोमो यत्र पवते यत्र सूर्यः ॥ ६ ॥

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



தஸ்மாத் ரிச: ஸாம யஜூம்ஷி தீக்ஷா
யஜ்ஞாச்ச ஸர்வே க்ரதவோ தக்ஷிணாச்ச |
ஸம்வத்ஸரச்ச யஜமானச்ச லோகா:
ஸோமோ யத்ர பவதே யத்ர ஸூர்ய: || 6 ||

தஸ்மாத் – அவரிலிருந்து; ரிச: – வேதங்கள்; ஸாம – பாடல்கள்; யஜூம்ஷி – மந்திரங்கள்; தீக்ஷா – சடங்குகள்; யஜ்ஞா: – வேள்விகள்; ஸர்வே – எல்லா; க்ரதவ: – கர்மங்கள்; தக்ஷிணா: – தட்சிணைகள்; ஸம்வத்ஸர: – காலம்; யஜமான: – வேள்விகளைச் செய்பவர்கள்; லோகா: – உலகங்கள்; ஸோம: – சந்திரன்; யத்ர – எங்கே; பவதே – புனிதப்படுத்துகிறானோ; யத்ர – எங்கே; ஸூர்ய: – சூரியன்.

**6. வேதங்கள், பாடல்கள், மந்திரங்கள், சடங்குகள், வேள்விகள், பல்வேறு கர்மங்கள், தட்சிணைகள், காலம், வேள்விகளைச் செய்பவர்கள், சந்திரன் வளர்க்கவும் சூரியன் தகிக்கவும் செய்கின்ற உலகங்கள் ஆகிய அனைத்தும் அந்த இறைவனிலிருந்தே தோன்றின.**

**तस्माच्च देवा बहुधा संप्रसूता:**
**साध्या मनुष्या: पशवो वयांसि ।**
**प्राणापानौ व्रीहियवौ तपश्च**
**श्रद्धा सत्यं ब्रह्मचर्यं विधिश्च ॥ ७॥**

தஸ்மாச்ச தேவா பஹுதா ஸம்ப்ரஸூதா:
ஸாத்யா மனுஷ்யா: பசவோ வயாம்ஸி |
ப்ராணாபானௌ வ்ரீஹியவௌ தபச்ச
ச்ரத்தா ஸத்யம் ப்ரஹ்மசர்யம் விதிச்ச || 7 ||

தஸ்மாத் – அவரிலிருந்து; பஹுதா – பல்வேறு; தேவா: – தேவர்கள்; ஸம்ப்ரஸூதா: – தோன்றினர்; ஸாத்யா: – சாத்யர்கள்; மனுஷ்யா: – மனிதர்கள்; பசவ: – மிருகங்கள்; வயாம்ஸி – பறவைகள்; ப்ராண அபானௌ – உள்மூச்சு வெளிமூச்சு; வ்ரீஹி யவௌ – நெல், பார்லி; தப: – தவம்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



ச்ரத்தா – சிரத்தை; ஸத்யம் – உண்மை; ப்ரஹ்மசர்யம் – சுயக்கட்டுப்பாடு; விதி: – கடமைகள்.

**7. பல்வேறு தேவர்கள், சாத்யர்கள், மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், உள்மூச்சு, வெளிமூச்சு, நெல், பார்லி, தவம், சிரத்தை, உண்மை, சுயக் கட்டுப்பாடு, கடமைகள் எல்லாம் அந்த இறைவனி லிருந்தே தோன்றின.**

சாத்யர்கள் பன்னிருவர். இவர்கள் தேவர்களில் ஒரு பிரிவினர்; மற்ற தேவர்களைவிட உயர்ந்தவர்கள்.

सप्त प्राणा: प्रभवन्ति तस्मात्
सप्तार्चिष: समिध: सप्त होमा: ।
सप्त इमे लोका येषु चरन्ति प्राणा
गुहाशया निहिता: सप्त सप्त ॥ ८॥

ஸப்த ப்ராணா: ப்ரபவந்தி தஸ்மாத்
ஸப்தார்ச்சிஷ: ஸமித: ஸப்த ஹோமா: ।
ஸப்த இமே லோகா யேஷு சரந்தி ப்ராணா
குஹாசயா நிஹிதா: ஸப்த ஸப்த ॥ 8 ॥

தஸ்மாத் – அவரிடமிருந்து; ஸப்த: ப்ராணா: – ஏழு புலன்கள்; ஸப்த: அர்ச்சிஷ: – ஏழு சுடர்கள்; ஸமித: – எரிபொருட்கள்; ஸப்த: ஹோமா: – ஏழு ஆஹுதிகள்; யேஷு – எங்கே; ப்ராணா: – பிராணன்கள்; குஹாசயா – இதயக்குகையில்; சரந்தி – செயல்படுகிறதோ; இமே – இந்த; ஸப்த: லோகா: – ஏழு உலகங்கள்; ப்ரபவந்தி – தோன்று கின்றன; ஸப்த ஸப்த – ஏழு ஏழாக.

**8. அந்த இறைவனிடமிருந்தே ஏழு புலன்கள், ஏழு சுடர்கள், ஏழு எரிபொருட்கள், ஏழு ஆஹுதிகள் எல்லாம் தோன்றின. இதயக் குகையில் பிராணன் செயல்படுகின்ற உயிரினங்கள் வாழ்கின்ற ஏழு உலகங்களும் அவரிடமிருந்தே தோன்றின. அனைத்தையும் ஏழுஏழாக அவரே படைத்தார்.**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



**ஏழு புலன்கள்:** கண்கள் 2, காதுகள் 2, நாசித் துவாரங்கள் 2, நாக்கு 1.

**ஏழு சுடர்கள்:** சுடர் என்றால் ஒளி. ஒளி என்பது அறிதலைக் குறிக்கிறது. ஒவ்வொரு புலனும் அதற்குரிய பொருளை அனுபவிக்கும்போது அதனை அறிகிறது. உதாரணமாக நாக்கு ஒன்றைச் சுவைக்கும்போது அந்தச் சுவையை அறியவும் செய்கிறது. இந்த அறியும் தன்மை இங்கே சுடர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஏழு எரிபொருட்கள்:** ஏழு புலன்களுக்கும் உரிய பொருட்களே எரிபொருட்கள். கண்கள் காண்பதற்கான பொருட்கள், காதுகள் கேட்பதற்கான விஷயங்கள் போன்றவை இவை.

**ஏழு ஆஹுதிகள்:** புலனறிவு இங்கே ஓர் ஆஹுதியாகக் கூறப்பட்டுள்ளது. வாழ்க்கை என்ற மாபெரும் வேள்வியில் புலன்கள் ஒவ்வொன்றும் தங்கள் செயல்பாட்டின்மூலம், அதாவது கண்கள் காண்பதன்மூலம், காதுகள் கேட்பதன் மூலம் ஆஹுதிகளை அளித்துக் கொண்டிருக்கின்றன.

**ஏழு உலகங்கள்:** ஏழு புலன் மையங்கள். கண், காது, மூக்கு என்று புறத்தில் நாம் காண்பவை வெறும் வாசல் மட்டுமே. இந்த வாசல்களின் வழியாகச் செயல்படுகின்ற உண்மையான புலன்கள் உள்ளே உள்ளன; இதயக்குகையில் உள்ளன.

இதயக்குகை என்பது பொருள் பொதிந்த சொல்லாகும். இதயம் என்றால் புத்தி. புத்தியிலுள்ள பல்வேறு மையங்களே நமது புலனறிவைக் கட்டுப்படுத்துகின்றன.[1]

### இயற்கையின் தலைவர் இறைவன்: 9–10

अतः समुद्रा गिरयश्च सर्वेऽस्मात्
स्यन्दन्ते सिन्धवः सर्वरूपाः ।
अतश्च सर्वा ओषधयो रसश्च
येनैष भूतैस्तिष्ठते ह्यन्तरात्मा ॥ ९॥

---

1. இதயம் பற்றி #2:2.7 விளக்கவுரையில் விரிவாகக் காணலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



அத: ஸமுத்ரா கிரயச்ச ஸர்வே: ऽஸ்மாத்
ஸ்யந்தந்தே ஸிந்தவ: ஸர்வரூபா: ।
அதச்ச ஸர்வா ஓஷதயோ ரஸச்ச
யேனைஷ பூதைஸ்திஷ்ட்டதே ஹ்யந்தராத்மா ॥ 9 ॥

அத: – அவரிடமிருந்து; ஸமுத்ரா: – கடல்கள்; கிரய: – மலைகள்; ஸர்வே – எல்லாம்; அஸ்மாத் – அவரிடமிருந்து; ஸர்வரூபா: – பல்வேறு; ஸிந்தவ: – நதிகள்; ஸ்யந்தந்தே – பெருகுகின்றன; அத: ச – அவரிடமிருந்தே; ஸர்வா: – எல்லா; ஓஷதய: – செடிகொடிகள்; யேன பூதை: – எந்த இயற்கையால்; திஷ்ட்டதே – சூழப்பட்ட; அந்தராத்மா ஹி – ஆன்மா.

**9. அந்த இறைவனிடமிருந்தே கடல்கள், மலைகள் எல்லாம் தோன்றின. பல்வேறு நதிகளும் அவரிடமிருந்தே பெருகி ஓடுகின்றன. செடிகொடிகள் அனைத்தும் அவரிடமிருந்தே உண்டாயின. இவ்வாறு அனைத்து இயற்கையாலும் சூழப்பட்டதாக உள்ளது ஆன்மா.**

செடிகொடிகள், மலைகள், நதிகள் போன்றவை பஞ்சபூதங்களால் ஆனவை. இவ்வாறு பஞ்ச பூதங்களால் ஆன இயற்கைக்கு ஆன்மாவாக இறைவன் விளங்குகிறார் என்பது பொருள்.

பஞ்ச பூதங்களால் இயற்கை அமைந்துள்ளதுபோல், மனித உடம்பும் பஞ்ச பூதங்களால் ஆனது. அந்த உடம்பினுள் ஆன்மாவாக இறைவன் விளங்குகிறார் என்றும் பொருள் கொள்ளலாம்.

**पुरुष एवेदं विश्वं कर्म तपो ब्रह्म परामृतम् ।**
**एतद्यो वेद निहितं गुहायां सोऽविद्याग्रन्थिं विकिरतीह सोम्य ॥**

புருஷ ஏவேதம் விச்வம் கர்ம தபோ ப்ரஹ்ம பராம்ருதம் ।
ஏதத்யோ வேத நிஹிதம் குஹாயாம்
ஸோऽவித்யா க்ரந்திம் விகிரதீஹ ஸோம்ய ॥ 10 ॥

புருஷ: ஏவ – இறைவனே; இதம் – இந்த; விச்வம் – எல்லாம்; கர்ம – கர்மங்கள்; தப: – தவம்; பராம்ருதம் –

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



அழிவற்ற மேலான; ப்ரஹ்ம – பிரம்மம்; குஹாயாம் – இதயக்குகையில்; நிஹிதம் – உறைகின்ற; ஏதத் – அவரை; ய: – யார்; வேத – அறிகிறானோ; ஸ: – அவன்; அவித்யா க்ரந்திம் – அறியாமைத் தளையிலிருந்து; இஹ – இப்போதே; விகிரதி – விடுபடுகிறான்; ஸோம்ய – இனியவனே.

**10. இனியவனே! இறைவன்தான் இந்த அனைத்துமாக இருக்கிறார். கர்மங்கள், தவம் என்று மட்டுமல்ல, அழிவற்ற மேலான பிரம்மமாக இருப்பதும் அவரே. இதயக் குகையில் உறைகின்ற அவரை அறிபவன் அறியாமைத் தளையிலிருந்து இப்போதே விடுபடுகிறான்.**

இதயக்குகையில் இறைவன் உறைகிறார். அவரை அறிபவன் அதாவது அனுபூதியில் அவரை உணர்பவன் அறியாமைத் தளையிலிருந்து விடுபடுகிறான். 'மரணத்திற்குப் பிறகு அல்ல, வாழும்போதே அவன் முக்தனாகிறான்'[1] என்று சுட்டிக்காட்டுகிறார் ஸ்ரீசங்கரர்.

இதி முண்டகோபநிஷதி த்விதீய முண்டகே ப்ரதம: கண்ட: ॥

---

1. இஹ ஜீவன்னேவ, ந ம்ருத: ஸன் ।

## 2:1

## ஜோதியும் சுடரும்

சுருக்கம்

1. நாம் தெய்வீகமானவர்கள் (ஜோதியும் சுடரும் உதாரணம்): 1
2. இறைவன்: 2–10
   - ஒளிமயமானவர்: 2
   - அனைத்திற்கும் காரணம்: 3
   - பிரபஞ்சமாக உள்ளார்: 4
   - இறைவனிலிருந்து வந்தவர்கள் நாம்: 5
   - வாழும் வழியும் இறைவனே: 6–8
   - இயற்கையின் தலைவர்: 9–10

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



ஓங்காரமே வில், ஆன்மா அம்பு, இறைவனே இலக்கு. ... -4

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

# 2:2 உன்னை அறி!

**நா**ம் தெய்வீகமானவர்கள் என்ற ஆழ்ந்த சிந்தனையால் அடித்தளம் அமைத்த பிறகு அடுத்த சாதனைப் பகுதிக்கு வருகிறோம்.

நாம் தெய்வீகமானவர்கள் என்று மீண்டும்மீண்டும் சொல்வதாலோ, சிந்திப்பதாலோ எல்லாம் ஆகிவிடாது. இவை யெல்லாம் புலன்களுக்கு உட்பட்ட அனுபவங்கள் மட்டுமே. தீவிரமாக சாதனைகள் செய்து அதை அனுபூதியில், புலன்களைக் கடந்த உண்மைநிலையில் உணர வேண்டும்.

நாம் தெய்வீகமானவர்கள் என்பதன் பொருள் என்ன?

உடம்பு, மனம், பிராணன், ஆன்மா என்று பலவற்றின் தொகுதி நாம். இவற்றில் உடம்பும் மனமும் பிராணனும் மாறுபவை, அழியக் கூடியவை. இவை உலகிலிருந்து வந்தவை. ஆனால் ஆன்மா இறைவனிலிருந்து வந்தது, இறைவனின் அம்சம். இன்னும் குறிப்பிட்டுச் சொல்வ தானால் இறைவனே மனிதனின் இதயக்குகையில் ஆன்மா வாக ஒளிர்கிறார். உடம்பையும் மனத்தையும் நாம் என்று கருதி வாழ்கின்ற நாம், அவை இரண்டிற்கும் அப்பாற்பட்ட ஆன்மாவே நாம் என்பதை அறிய வேண்டும்; அனுபூதியில் உணர வேண்டும்.

தன்னை அறிதல் அல்லது ஆன்மாவை அறிதல் என்றால் என்ன, அதன் தன்மை என்ன, அதற்கான சாதனைகள் எவை, அதன் விளைவு என்ன, இறையனுபூதி ஆகியவற்றை இந்த அத்தியாயம் ஆராய்கிறது.


CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



*ஆன்மாவை அறி: 1–2*

**आविः सन्निहितं गुहाचरं नाम**
**महत्पदमत्रैतत् समर्पितम् ।**
**एजत् प्राणन्निमिषच्च यदेतत् जानथ सदसद्वरेण्यं**
**परं विज्ञानाद् यद्वरिष्ठं प्रजानाम् ॥ १ ॥**

ஆவி: ஸன்னிஹிதம் குஹாசரம் நாம
மஹத்பதம் அத்ரைதத் ஸமர்ப்பிதம் ।
ஏஜத் ப்ராணன் நிமிஷச்ச யதேதத் ஜானத ஸதஸத் வரேண்யம்
பரம் விஜ்ஞானாத் யத்வரிஷ்ட்டம் ப்ரஜானாம் ॥ 1 ॥

*ஆவி: – ஒளிமயமாக; ஸன்னிஹிதம் – மிக அருகில்; குஹாசரம் நாம – இதயக்குகையில் உறைவதாக; மஹத் பதம் – மேலான லட்சியம்; அத்ர – அதில்; ஏதத் – இவை; ஸமர்ப்பிதம் – நிலைபெற்றுள்ளன; ஏஜத் – செயல்படுகின்ற; பிராணத் – மூச்சுவிடுகின்ற; நிமிஷத் – இமைக்கின்ற; யத் – அனைத்தும்; ஏதத் – அதனை; ஜானத – அறிய வேண்டும்; ஸத் – தூலமான; அஸத் – நுண்ணிய; வரேண்யம் – போற்றத்தக்க; ப்ரஜானாம் – உயிரினங்களின்; விஜ்ஞானாத் – அறிவைவிட; பரம் – அப்பாற்பட்டது; வரிஷ்ட்டம் – உயர்ந்தது.*

**1. அந்த ஆன்மா ஒளிமயமானது, வேறெதை விடவும் மிக அருகில் இருப்பது, இதயக்குகையில் உறைவது. வாழ்க்கையின் மேலான லட்சியம் அந்த ஆன்மாவே. செயல்படுகின்ற, மூச்சுவிடுகின்ற, இமைக்கின்ற அனைத்து உயிரினங்களும் அதனையே சார்ந்துள்ளன. தூலமானதும் நுண்ணியதும் அதுவே. உயிரினங்களின் அறிவிற்கு அப்பாற்பட்டது அது. போற்றத்தக்க அந்த ஆன்மாவையே அறிய வேண்டும்.**

ஆன்மா அறிவிற்கு அப்பாற்பட்டது, ஆனால் ஆன்மாவையே அறிய வேண்டும்— இந்த இரண்டும் முரணாகத்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



தோன்றுகின்றன. அறிய வேண்டும், ஆனால் அறிய முடியாது. இதன் பொருள் என்ன? அறிய முடியாது என்றால் உலகிலுள்ள பொருட்களை அறிவதுபோல் அறிய முடியாது, புலன்களால் அறிய முடியாது என்பது பொருள். புலன்கள் வெறும் கருவிகள். அவற்றின் எல்லை சிறியது. உள்ளதை உள்ளபடி காட்டவல்லவை அல்ல நமது புலன்கள். இதனை பௌதீக பரிமாணம், திவ்ய பரிமாணம் என்று இரண்டு பரிமாணங்களிலும் புரிந்துகொள்வோம்.

**1. பௌதீக பரிமாணம்:** ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் நம் கண்களால் காண இயலாது, ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் நம் காதுகளால் கேட்க இயலாது. இது போலவே ஒவ்வொரு புலன்களும். அது மட்டுமல்ல, குறிப்பிட்ட அதிர்வு எல்லைகளுக்கு (frequency limits) வெளியிலுள்ள ஒளியையோ ஒலியையோ அவை நம் அருகில் இருந்தாலும் காணவோ கேட்கவோ முடியாது. எனவே புலன்களின் செயல்படு வட்டம் மிகவும் குறுகியது.

**2. திவ்ய பரிமாணம்:** பார்ப்பவற்றையும் கேட்பவற்றையும் உணர்பவற்றையும்கூட, அவை, உள்ளது உள்ளபடி புலன்களால் அறிய இயலாது. 'ஒரு சாதாரணப் பூவை எடுத்துக் கொள்ளுங்கள். இது ஓர் எல்லைக்கு உட்பட்டதுதான். ஆனால் இந்தப் பூவைப்பற்றி எல்லாம் எனக்குத் தெரியும் என்று துணிந்து யாராவது சொல்ல முடியுமா? அந்தப் பூவைப்பற்றிய எல்லாம் தெரியும் என்ற அறுதி நிலையை அடைவது சாத்தியமே இல்லை. ஆராய்ச்சியின் ஆரம்பத்தில் எல்லை உள்ளதாகத் தோன்றிய பூ இப்போது எல்லையற்றதாகிவிட்டது.... நமது எல்லை மிகவும் குறுகியது'[1] என்கிறார் சுவாமி விவேகானந்தர். அதாவது எல்லையற்றவற்றை எல்லை உள்ளவையாக நாம் கண்டு கொண்டிருக்கிறோம். எந்தப் பொருளையும் அதன் உண்மைநிலையில் நாம் காண முடிவதில்லை. எனவே உண்மையை அறிய வேண்டுமானால் இந்தப்

1. ஞான தீபம், 4.36.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



புலன்களும் மனமும் போதாது. அவற்றைவிட மேலான ஒன்று வேண்டும்.

அந்த மேலான ஒன்றை 'தெய்வீகக் கண்' என்று கீதை குறிப்பிடுகிறது:[1] தெய்வீகக் கண் என்றால் மூன்றாவது ஒரு கண் என்பதல்ல. இங்கே குறிப்பிடப்படுவது நமது உணர்வு நிலையில் ஒரு மாற்றம், புத்தியின் விழிப்பு. கண்களோ காதுகளோ இல்லாமல் காணவோ கேட்கவோ முடியுமா? முடியும். இதற்கு கனவு நிலை ஓர் உதாரணம். கனவில் நமது புலன்கள் எதுவும் செயல்படவில்லை. ஆனாலும் அங்கே நாம் காண்கிறோம், கேட்கிறோம், உணர்கிறோம். நனவு நிலையில் புலன்கள் வாயிலாக நிகழ்பவை அனைத்தும் கனவு நிலையில் புலன்கள் இன்றியே நிகழ்கின்றன.

இது ஓர் உதாரணம் மட்டுமே. இவ்வாறு புலன்களின் துணையின்றி, மனத்தின் துணையின்றி ஆன்மா அறியப்படுகிறது. அத்தகைய நிலையை அடைய வேண்டும்.

**यदर्चिमद् यदणुभ्योऽणु च**
**यस्मिँल्लोका निहिता लोकिनश्च ।**
**तदेतदक्षरं ब्रह्म स प्राणस्तदु वाङ्मनः**
**तदेतत्सत्यं तदमृतं तद्वेद्धव्यं सोम्य विद्धि ॥ २॥**

யதர்ச்சிமத் யதணுப்யோ: Sணு ச
யஸ்மின் லோகா நிஹிதா லோகினச்ச |
ததேததக்ஷரம் ப்ரஹ்ம ஸ ப்ராணஸ்தது வாங்மன:
ததேதத் ஸத்யம் ததம்ருதம் தத்வேத்தவ்யம்
ஸோம்ய வித்தி ॥ 2 ॥

யத் – எது; அர்ச்சிமத் – ஒளிமயமானதோ; யத் – எது; அணுப்ய: – அணுக்களுக்கெல்லாம்; அணு ச – அணுவோ; யஸ்மின் – எதில்; லோகா: – உலகங்கள்; லோகின: ச – உயிரினங்கள்; நிஹிதா: – வசிக்கின்றனவோ; தத் ஏதத் – அந்த இது; அக்ஷரம் – அழிவற்றது; ப்ரஹ்ம – இறைவன்; ஸ: – அது;

1. கீதை, 11.8.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



ப்ராண: – பிராணன்; தத் உ – அதுவே; வாக் மன: – வாக்கும் மனமும்; ஸத்யம் – உண்மை; அம்ருதம் – மரணமற்றது; தத் – அதனை; வேத்தவ்யம் – அறிய வேண்டும்; வித்தி – அறி; ஸோம்ய – இனியவனே.

**2. இனியவனே! அந்த ஆன்மா ஒளிமயமானது, அணுக்களுக்கெல்லாம் அணுவானது. உலகங்களும் உயிரினங்களும் அதிலேயே நிலைபெற்றுள்ளன. அந்த ஆன்மா அழிவற்றது. அதுவே இறைவன். பிராணன், வாக்கு, மனம் அனைத்தும் அதுவே. அது உண்மையானது, மரணமற்றது. அதனையே அறிய வேண்டும். அதனை அறிவாய்.**

## இறைவனை அறி: 3–4

ஆன்மாவை அனுபூதியில் உணர்ந்த பிறகு இறைவனை அறிவதற்கு முயற்சிக்க வேண்டும். அம்பு எய்கின்ற உதாரணத்தின்மூலம் அதனை இந்த மந்திரங்கள் விளக்குகின்றன.

**धनुर्गृहीत्वौपनिषदं महास्त्रं**
**शरं हि उपासानिशितं सन्धयीत ।**
**आयम्य तद्भावगतेन चेतसा**
**लक्ष्यं तदेवाक्षरं सोम्य विद्धि ॥ ३॥**

தனுர்க்ருஹீத்வௌபநிஷதம் மஹாஸ்த்ரம்
சரம் ஹி உபாஸானிசிதம் ஸந்தயீத ।
ஆயம்ய தத்பாவகதேன சேதஸா
லக்ஷ்யம் ததேவாக்ஷரம் ஸோம்ய வித்தி ॥ 3 ॥

ஔபநிஷதம் – உபநிஷதங்கள் கூறுகின்ற; தனு: – வில்; மஹா அஸ்த்ரம் – பெரிய ஆயுதமாகிய; க்ருஹீத்வா – எடுத்து; உபாஸானிசிதம் – தியானத்தால் கூர்மையாக்கப்பட்ட; சரம் ஹி – அம்பை; ஸந்தயீத – தொடுக்க வேண்டும்; தத்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



பாவகதேன – அந்த எண்ணங்களால் நிறைந்த; சேதஸா – மனத்தால்; ஆயம்ய – இழுத்து; லக்ஷ்யம் – இலக்கை; தத் ஏவ – அதுவே; அக்ஷரம் – இறைவன்; வித்தி – அறி; ஸோம்ய – இனியவனே.

**3. இனியவனே! உபநிஷதங்கள் கூறுகின்ற பெரிய ஆயுதமாகிய வில்லை எடுத்து, தியானத்தால் கூர்மையாக்கப்பட்ட அம்பை அதில் வைத்து, இறை எண்ணங்களால் நிறைந்த மனமாகிய நாணை இழுத்து இலக்கை அடிக்க வேண்டும். அந்த இலக்கே இறைவன். அவரை அறி.**

**प्रणवो धनुः शरो ह्यात्मा ब्रह्म तल्लक्ष्यमुच्यते ।**
**अप्रमत्तेन वेद्धव्यं शरवत्तन्मयो भवेत् ॥ ४॥**

ப்ரணவோ தனுः சரோ ஹ்யாத்மா ப்ரஹ்ம
தல்லக்ஷ்யமுச்யதே ।
அப்ரமத்தேன வேத்தவ்யம் சரவத் தன்மயோ பவேத் ॥ 4 ॥

ப்ரணவः – ஓங்கார மந்திரம்; தனுः – வில்; ஆத்மா ஹி – ஆன்மாவே; சரः – அம்பு; ப்ரஹ்ம – இறைவனே; தத் – அந்த; லக்ஷ்யம் – இலக்கு; உச்யதே – சொல்லப்படுகிறது; அப்ரமத்தேன – அலைபாயாத மனத்தினனால்; வேத்தவ்யம் – தொடுக்கப்பட வேண்டும்; சரவத் – அம்பைப்போல்; தத் மயः – அந்த இலக்குமயமாக; பவேத் – ஆகவேண்டும்.

**4. ஓங்கார மந்திரமே வில், ஆன்மா அம்பு, இறைவனே இலக்கு என்று சொல்லப்படுகிறது. அம்பை எய்பவன் அலைபாயாத மனத்தினனாக இருக்க வேண்டும்; அம்பைப்போல் அந்த இலக்கு மயமாக ஆக வேண்டும்.**

இறைவனை அடைவது என்பதை வில்லில் நாண் ஏற்றி இலக்கை வீழ்த்துவதற்கு ஒப்பிட்டு 3–4 மந்திரங்களில் கூறப்பட்டுள்ளது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



| | | |
|---|---|---|
| வில் | : | ஓங்கார மந்திரம் |
| நாண் | : | மனம் |
| அம்பு | : | ஆன்மா |
| இலக்கு | : | இறைவன் |

அம்பு எய்வதுபற்றி பார்ப்போம். முதலில் நாணை வில்லில் இழுத்துக் கட்ட வேண்டும். பிறகு அம்பை நாணில் வைத்துக் குறிபார்க்க வேண்டும். இலக்கும் அம்பும் ஒரே நேர் கோட்டில் வந்தபிறகு அம்பைப் பின்னால் இழுத்து எய்ய வேண்டும். இதில் ஒவ்வொரு படியும் முக்கியமானவை. நாண் வில்லில் சரியாக இழுத்துக் கட்டப்பட்டிருக்க வேண்டும். அம்பு கூரியதாக இருக்க வேண்டும். அம்பு இலக்குடன் நேர்கோட்டில் அமையுமாறு பொருத்தப் பட வேண்டும். இத்தனை நிபந்தனைகளும் சரியாக இருக்கும்போது அம்பை எய்தால் இலக்கு தாக்கப்படுவது நிச்சயம்.

1. நாண் வில்லில் சரியாக இழுத்துக் கட்டப்பட்டிருக்க வேண்டும். இங்கே நாண் என்பது மனம். வில் என்பது ஓங்காரம். மனம் ஓங்காரத்துடன் பிணைக்கப்பட்டிருக்க வேண்டும். அதாவது மனம் ஓங்கார ஜபத்தில் மூழ்கியதாக பயிற்சி பெற்றதாக இருக்க வேண்டும்.

மனத்திற்குப் பயிற்சி அளிப்பது பற்றி இரண்டு கருத்துக்கள் கூறப்படுகின்றன— 1. இறை எண்ணங்களால் நிறைந்த மனம் (#3); 2. அலைபாயாத மனம்(#4). மனம் அலைபாயாததாக இருக்க வேண்டும். மனம் எப்போது அலைபாயும்? ஆசைகள் எழும்போது. ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே மனம் புறத்தில் செல் கிறது. எனவே ஆசைகளை விட்ட மனம் இங்கே குறிப்பிடப் படுகிறது. ஆசைகளை எப்படி விடுவது? அதற்கு மனத்தை எப்போதும் இறை எண்ணங்களால் நிறைக்க வேண்டும்.

2. அம்பு கூரியதாக இருக்க வேண்டும். இங்கே அம்பு என்பது ஆன்மா. நாம் ஆன்ம உணர்வு பெற்றவர் களாக இருக்க வேண்டும். அதாவது, சாதனைகளின்மூலம்


CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



ஆன்ம உணர்வில் எப்போதும் நிலைபெற்றிருக்க வேண்டும். இந்த நிலையே இங்கு 'கூரியது' என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

3. அம்பு இலக்குடன் நேர்கோட்டில் அமையுமாறு பொருத்தப்பட வேண்டும். 'தெய்வமாகி தெய்வத்தைப் பூஜை செய்'[1] என்பார்கள். உடம்புடனும் மனத்துடனும் நம்மை ஒன்றுபடுத்துகின்ற சாதாரண மனித நிலையில் நாம் கடவுளை ஒரு மனிதனாக மட்டுமே நினைக்க முடியும். அவரை உள்ளது உள்ளபடி அறிய வேண்டுமானால் நாமும் தெய்வ நிலைக்கு உயர வேண்டும். அதாவது ஆன்ம உணர்வு பெற்றிருக்க வேண்டும். சாஸ்திரங்களைப் படித்து அறிவுபூர்வமாக உணர்வது அல்ல; அனுபூதியில் உணர்வதே இங்கு குறிப்பிடப்படுகிறது. இதனை 4-ஆம் மந்திரம் 'இலக்குமயமாக ஆவது' என்று கூறுகிறது. நாம் தெய்வ நிலையைப் பெற வேண்டும். எங்கும் நிறைந்த இறைவனே நம்மில் ஆன்மாவாக உள்ளார். எனவே நாம் ஆன்மா என்ற நிலையை அனுபூதியில் அடைய வேண்டும். இதுவே 'அம்பு இலக்குடன் நேர்கோட்டில் அமையுமாறு பொருத்தப் படுதல்'.

இவ்வாறு தியானத்தால் மனத்தை ஒருமைப்படுத்தி, இறை எண்ணங்களால் ஆன்ம நிலையை உணர்ந்து இறைவனை நாடினால் அவரைப் பெறலாம். அம்பு எய்யும் உதாரணத்தால் இந்த இரண்டு மந்திரங்கள் இதனைச் சுட்டிக் காட்டுகின்றன.

### ◆ ஆன்ம அனுபூதி (5–7) ◆

ஆன்ம அனுபூதி, அதாவது ஆன்மாவை அறிதல்; இறையனுபூதி, அதாவது இறைவனை அறிதல் ஆகியவற்றின் முன்னுரையை 1–4 மந்திரங்களில் கண்டோம். 5–7 மந்திரங்கள் ஆன்ம அனுபூதி மற்றும் அதற்கான வழிபற்றி கூறுகிறது.

---

1. தேவோ பூத்வா தேவம் யஜேத் |

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



முதற்படி: பேச்சுக் கட்டுப்பாடு

**यस्मिन्द्यौः पृथिवी चान्तरिक्षमोतं**
**मनः सह प्राणैश्च सर्वैः ।**
**तमेवैकं जानथ आत्मानम् अन्या**
**वाचो विमुञ्चथ अमृतस्यैष सेतुः ॥ ५॥**

யஸ்மின் த்யௌ: ப்ருதிவீ சாந்தரிக்ஷமோதம்
மன: ஸஹ ப்ராணைச்ச ஸர்வை: ।
தமேவைகம் ஜானத ஆத்மானம் அன்யா
வாசோ விமுஞ்சத அம்ருதஸ்யைஷ ஸேது: ॥ 5 ॥

யஸ்மின் – யாரில்; த்யௌ: – வானுலகம்; ப்ருதிவீ – பூமி; அந்தரிக்ஷம் ச – இடைவெளி; மன: ஸஹ – மனமும்; ப்ராண: ச – பிராணன்களும்; ஸர்வை: – எல்லாம்; ஓதம் – நிலைபெற்றுள்ளனவோ; தம் – அந்த; ஏகம் – ஒரே; ஆத்மானம் – ஆன்மாவை; ஜானத – அறியுங்கள்; அன்யா: – மற்ற; வாச: – பேச்சுக்களை; விமுஞ்சத – விடுங்கள்; ஏஷ: – இது; அம்ருதஸ்ய – மரணமிலா பெருநிலைக்கான; ஸேது: – பாலம்.

**5. வானுலகம், பூமி, இடைவெளி மற்றும் மனம், பிராணன்கள், புலன்கள் என்று அனைத்தும் யாரில் நிலைபெற்றுள்ளனவோ அந்த ஒரே ஆன்மாவை அறியுங்கள். மற்ற பேச்சுக்களை விடுங்கள். மரணமிலா பெருநிலைக்கான பாலம் இதுவே.**

அழகிய காட்சிகள் எத்தனையோ இருக்கலாம். நமது கண்களும் நல்ல நிலையில் இருக்கலாம். ஆனால் ஒளி இல்லாமல் எதையும் காண முடியாது. எனவே புறத்திலுள்ள அழகிய காட்சிகளுக்கும் நம்மில் உள்ள கண்களுக்கும் ஆதாரமாக இருப்பது ஒளி. அதுபோல் வானுலகம் போன்ற புற விஷயங்கள், பிராணன் போன்ற அக விஷயங்கள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



அனைத்திற்கும் ஆதாரமாக இருப்பது ஆன்மா. எனவே அதை அறிய வேண்டும்.

ஆன்மாவை அறிவதற்கான முதற்படியை இந்த மந்திரம் கூறுகிறது— மற்ற பேச்சுக்களை விடுங்கள். தேவையற்ற பேச்சு உயர் வாழ்க்கைக்கு என்றல்ல, சாதாரண வாழ்க்கைக்கும் பெரிய தடையாகும். நமது ஆற்றலில் கணிசமான பகுதி பேச்சில் செலவழிகிறது. அதனைச் செலவிடாமல் சேமித்தால் அக வாழ்க்கை போன்ற உயர் தேவைகளுக்காக அவற்றைப் பயன்படுத்த முடியும். 'பேச்சுக் கட்டுப்பாடே ஆன்மீக வாழ்வுக்கு முதற்படி'[1] என்கிறார் ஸ்ரீசங்கரர்.

மரணமிலாப் பெருநிலையாக இருப்பவர் இறைவன். அவரிடம் நம்மைக் கொண்டுபோய்ச் சேர்க்கின்ற பாலமாக அமைவது ஆன்மா. எனவே ஆன்மாவை அனுபூதியில் உணர வேண்டும். அதற்கு முதற்படியாக அமைவது பேச்சுக் கட்டுப்பாடு.

இரண்டாம் படி: பிரணவ தியானம்

**अरा इव रथनाभौ संहता यत्र नाड्यः**
**स एषोऽन्तश्चरते बहुधा जायमानः ।**
**ओमित्येवं ध्यायथ आत्मानं**
**स्वस्ति वः पाराय तमसः परस्तात् ॥ ६ ॥**

அராஃ இவ ரதநாபௌ ஸம்ஹதா யத்ர நாட்யஃ
ஸ ஏஷோऽந்தச்சரதே பஹுதா ஜாயமானஃ ।
ஓமித்யேவம் த்யாயத ஆத்மானம்
ஸ்வஸ்தி வஃ பாராய தமஸஃ பரஸ்தாத் ॥ 6 ॥

ரதநாபௌ – ரதத்தின் அச்சில்; அராஃ இவ – ஆரக்கால்கள்போல்; யத்ர – எங்கே; நாட்யஃ – நாடிகள்;

1. யோகஸ்ய ப்ரதம த்வாரம் வாக் நிரோதஃ ।
—விவேக சூடாமணி, 367.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



ஸம்ஹதா: – கூடியுள்ளனவோ; ஏஷ: – இந்த; ஸ: – ஆன்மா; பஹ்வீதா – பலவிதமான; ஜாயமான: – வெளிப்படுத்தியபடி; அந்த: – உள்ளே; சரதே – செயல்படுகிறது; ஓம் இதி ஏவம் – ஓம் என்று; ஆத்மானம் – ஆன்மாவை; த்யாயத – தியானம் செய்யுங்கள்; தமஸ: – இருளுக்கு; பரஸ்தாத் – அப்பால்; பாராய – மறுகரையில்; வ: – உங்களுக்கு; ஸ்வஸ்தி – ஆசிகள்.

**6. ரதத்தின் அச்சில் ஆரக்கால்கள் கூடுவதுபோல் எங்கே நாடிகள் கூடுகின்றனவோ அங்கே ஆன்மா உள்ளது. அந்த இதயத்தில் ஆன்மா பலவிதமாகச் செயல்படுகிறது. ஓம் என்ற மந்திரத்தின்மூலம் ஆன்மாவைத் தியானம் செய்யுங்கள். இருளைக் கடந்து மறுகரைக்குச் செல்ல விரும்புகின்ற உங்களுக்கு ஆசிகள் நிறைவதாக.**

ஓம் என்ற பிரணவ மந்திரத்தை ஜபித்து ஆன்மாவை தியானம் செய்யுமாறு இந்த மந்திரம் கூறுகிறது.

*ஓங்காரத்தை ஜபிப்பது எப்படி?*

'மணியோசை போலவும், எண்ணெய் ஒழுக்குபோல் இடைவிடாமலும் ஓங்காரத்தை உச்சரிக்க வேண்டும்'.[1] மணியோசை அமைதியிலிருந்து எழுந்து உயர்கிறது. பிறகு அமைதியில் கரைகிறது. அதுபோல் ஓங்காரத்தை உச்சரிக்கும் போதும் மென்மையாக ஆரம்பித்து படிப்படியாக ஒலியை அதிகரித்து மீண்டும் மென்மையாக்கி நிறுத்த வேண்டும். சிறிய இடைவெளிக்குப் பிறகு மீண்டும் உச்சரிக்க வேண்டும். ஒருமுறை உச்சரிக்கும்போது இடைவெளி வரக்கூடாது என்பதைக் குறிப்பிடவே எண்ணெய் ஒழுக்கு உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு ஜபிப்பதன்மூலம் ஆன்ம தியானம் கைகூடுகிறது.

---

1. தைல தாராம் இவாச்சின்னம் தீர்க கண்டா நினாதவத் ॥
—சாண்டில்ய உபநிஷதம், 1.6.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



ஆன்மா எங்கே இருக்கிறது என்பதற்கும் இந்த உபநிஷதம் ஒரு விடை கூறுகிறது. நாடிகள் கூடுமிடத்தில் ஆன்மா இருக்கிறது. நாடிகள் கூடும் இடம் என்பது இதயம் ஆகும். நூற்றொரு நாடிகள் இதயத்தில் கூடுவதாகக் கட உபநிஷதம் கூறுகிறது.[1]

இதயம் என்பது பிராணனின் இருப்பிடம். உணர்ச்சிகள், செயல்பாடுகள் என்று வாழ்க்கையின் அனைத்தும் இங்கிருந்தே கட்டுப்படுத்தப்படுகின்றன. விஞ்ஞானத்தைப் பொறுத்தவரை மூளை அனைத்துச் செயல்களின் மையமாக இருந்தாலும் நமது சாஸ்திரங்கள் இதயத்தையே மைய மாகக் கொள்கின்றன. 'நான்' என்று சொல்லும்போதும் சரி, ஆழ்ந்த மனக்கவலை, அளவற்ற சந்தோஷம் போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்தும்போதும் சரி, இதயத்தில் கைவைத்தே நாம் பேசுவது இங்கு நினைவுகூரத் தக்கது. இந்த இதயம் நாம் அறிந்த பௌதீக இதயம் அல்ல. இது உணர்ச்சி இதயம். இந்த இதயத்திலிருந்து நூற்றொரு நாடிகள் புறப்படு கின்றன. இவற்றின்மூலமே கட்டளைகள் இடப்படுகின்றன, அனுபவங்கள் பெறப்படுகின்றன.

இதயம், நாடிகள் போன்றவை சாதாரணக் கண்களாலோ கருவிகளாலோ அறியப்படுபவை அல்ல. பிரார்த்தனை, தெய்வீக வாழ்க்கை, ஆழ்நிலைச் சிந்தனைகள் போன்றவை மூலம் தூய்மையும் ஆற்றலும் பெற்ற மனத்தினால் மட்டுமே அறியத் தக்கவை.

## ஆன்மக் காட்சி

ஆரம்ப சாதனைகளாலும் (#1:2.12–13), ஆழ்ந்த சிந்தனையாலும் (#2:1), பிரணவ தியானத்தாலும் (#2:2.6) ஆன்மக் காட்சி அல்லது ஆன்ம அனுபூதி வாய்க்கிறது. இந்த ஆன்மா யார்? எங்கும் நிறைந்த இறைவனே. அவர் நமது இதயத்தில் ஆன்மாவாக விளங்குகிறார்.

---

1. சதம் சைகா ச ஹ்ருதயஸ்ய நாட்ய: ||

—கட உபநிஷதம், 2:3.16.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



यः सर्वज्ञः सर्वविद्यस्यैष महिमा भुवि ।
दिव्ये ब्रह्मपुरे ह्येष व्योम्न्यात्मा प्रतिष्ठितः ॥
मनोमयः प्राणशरीर नेता .
प्रतिष्ठितोऽन्ने हृदयं सन्निधाय ।
तद्विज्ञानेन परिपश्यन्ति धीरा
आनन्दरूपम् अमृतं यद्विभाति ॥ ७॥

யः ஸர்வஜ்ஞः ஸர்வவித் யஸ்யைஷ மஹிமா புவி ।
திவ்யே ப்ரஹ்மபுரே ஹ்யேஷ வ்யோம்ன்யாத்மா
ப்ரதிஷ்ட்டிதः ॥
மனோமயः ப்ராணசரீர நேதா
ப்ரதிஷ்ட்டிதோऽன்னே ஹ்ருதயம் ஸன்னிதாய ।
தத்விஜ்ஞானேன பரிபச்யந்தி தீரா
ஆனந்தரூபம் அம்ருதம் யத்விபாதி ॥ 7 ॥

*யः – யார்; ஸர்வஜ்ஞः – எல்லாம் அறிந்தவர்; ஸர்வவித் – அனைத்து அறிவு வடிவானவர்; ஏஷः – இந்த; புவி – உலகம்; யஸ்ய – யாருடைய; மஹிமா – மகிமையோ; ஏஷः ஆத்மா – இந்த ஆன்மா; திவ்யே – ஒளிமயமான; ப்ரஹ்மபுரே – இதயத்தினுள்; வ்யோம்னி – வெளியில்; ப்ரதிஷ்ட்டிதः – நிலைபெற்றுள்ளது; மனோமயः – மனமாக; ப்ராணः – பிராணன்; சரீரः – உடம்பு; நேதா – வழிநடத்துபவர்; ஹ்ருதயம் – இதயத்தில்; ஸன்னிதாய – நிலைபெற்றவராக; அன்னே – உடம்பில்; ப்ரதிஷ்ட்டிதः – உறைகிறார்; தத் – அவரை; தீராः – விழிப்புணர்வு பெற்றவர்கள்; விஜ்ஞானேன – புத்தியால்; பரிபச்யந்தி – அறிகிறார்கள்; யத் – யார்; ஆனந்தரூபம் – ஆனந்த வடிவினர்; அம்ருதம் – அழிவற்றவர்; விபாதி – ஒளிர்கிறார்.*

**7. இறைவன் எல்லாம் அறிந்தவர், அனைத்து அறிவு வடிவானவர், ஆனந்த வடிவினர், அழிவற்றவர். இந்த உலகம் யாருடைய மகிமையோ அந்த இறைவன் ஒளிமயமான இதயத்தினுள் உள்ள**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



**வெளியில் ஆன்மாவாக ஒளிர்கிறார். மனமாக அமைந்து பிராணனையும் உடம்பையும் வழிநடத்து கிறார். இதயத்தில் நிலைபெற்றவராக உடம்பு முழு வதும் வியாபித்திருக்கிறார். விழிப்புணர்வு பெற்ற வர்கள் தங்கள் புத்தியால் அவரை அறிகிறார்கள்.**

இதயம் பற்றி முந்தின மந்திரம் குறிப்பிட்டது. இது தூய்மையும் ஆற்றலும் பெற்ற மனத்தால் மட்டுமே அறியத் தக்கது என்று அங்கே கண்டோம். இந்த இதயத்தினுள் வெளி ஒன்று உள்ளது. அதில் ஆன்மா உள்ளது.

இது எந்த இதயம்? 'லப்டப்' என்று துடித்துக் கொண் டிருக்கின்ற பௌதீக இதயம் அல்ல இது. இது ஆன்மீக இதயம். இதற்கு மூன்று அடையாளங்களைச் சொல்கிறது நாராயண ஸூக்தம். ஒன்று, தொப்புளுக்கு மேலே ஒரு சாண் தூரத்தில் உள்ளது. பௌதீக இதயமும் அதே தூரத்தில்தான் உள்ளது, ஆனால் அது சற்று இடது புறம் உள்ளது. ஆனால் ஆன்மீக இதயம் நடுவில் உள்ளது. இரண்டு, சுடர் வரிசை யால் சூழப்பட்டுள்ளது. மூன்று, அந்த இதயம் பிரகாசிக் கிறது.[1] இந்த மூன்று அடையாளங்களும் பௌதீக இதயத்திற்குப் பொருந்தாது. இந்த ஆன்மீக இதயம்தான் இதயக்குகை. ஆனால் இதனை நாம் உணர்வதில்லையே! உணர்வதில்லை, ஆனாலும் அது அங்கே உள்ளது. இதுவே புத்தி, தீ:, இதயத் தாமரை, மூன்றாம் கண், ஞானக் கண் என்றெல்லாம் சாஸ்திரங்களில் கூறப்படுகிறது.

மிகப் பெரும்பாலோரிடம் இந்த ஆன்மீக இதயம் மலராமல் அரும்பாகவே உள்ளது. இதனால்தான் இது குகை, இருண்ட பகுதி, மறைவான இடம் என்றெல்லாம் கூறப் பட்டது. முதலில் அதை மலரச் செய்ய வேண்டும், உணர வேண்டும்.

---

1. அதோ நிஷ்ட்ட்யா விதஸ்த்யாந்தே நாப்யாமுபரி திஷ்ட்டதி । ஜ்வாலமாலாகுலம் பாதி விச்வஸ்யாயதனம் மஹத் ॥
—நாராயண ஸூக்தம், தைத்திரீய ஆரண்யகம், 4.10.13.7.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



இந்த இதயத்தின் உள்ளே உள்ளது ஒரு வெளி: 'தாமரை மொட்டுப் போன்ற இதயம் நாற்புறங்களிலும் நாடிகளால் சூழப்பட்டு தொங்குகிறது. அதன் உள்ளே நுண்ணிய ஆகாசம் உள்ளது. அனைத்தும் அதில் நிலை பெற்றுள்ளன.[1]

சாந்தோக்ய உபநிஷதம் இதனை மிக அழகாகக் கூறுகிறது: 'இந்த உடம்பினுள் தாமரை போன்ற சிறு மாளிகை உள்ளது. அதனுள் அக வெளி உள்ளது. அதில் இருப்பதைத் தேட வேண்டும். ... (புறத்தில் காணப்படுகின்ற) வெளி எவ்வளவு பெரியதோ இதயத்தின் உள்ளே உள்ள வெளியும் அவ்வளவு பெரியது.[2] இந்த வெளியில் ஆன்மா உள்ளது.

அவரை எப்படி அறிவது?

இரண்டு நிபந்தனைகள் இங்கே கூறப்பட்டுள்ளன— 1. புத்தியால் அவரை அறிய வேண்டும். 2. விழிப்புணர்வு பெற்றவர்களாக இருக்க வேண்டும். புத்தி என்பது பற்றி ஏற்கனவே கண்டோம். புத்தி அல்லது ஆன்மீக இதயம் மலர்ந்தவர்களால் மட்டுமே ஆன்மாவை அறிவதோ இறைவனை நாடுவதோ உண்மையில் இயலும்.

## ஆன்மக் காட்சியின் பயன்

**भिद्यते हृदयग्रन्थिः छिद्यन्ते सर्वसंशयाः ।**
**क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन् दृष्टे परावरे ॥ ८॥**

பித்யதே ஹ்ருதய க்ரந்தி: சித்யந்தே ஸர்வஸம்சயா: ।
க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மின் த்ருஷ்ட்டே
பராவரே ॥ 8 ॥

---

1. ஸந்ததம் சிலாபிஸ்து லம்பத்யாகோச ஸன்னிபம் । தஸ்யாந்தே ஸுஷிரம் ஸூக்ஷ்மம் தஸ்மின் ஸர்வம் ப்ரதிஷ்ட்டிதம் ॥
—நாராயண ஸூக்தம், தைத்திரீய ஆரண்யகம், 4.10.13

2. யதிதம் அஸ்மின் ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம் வேச்ம தஹரோऽஸ்மின் அந்தராகாச: தஸ்மின் யதந்தஸ்தத் அன்வேஷ்ட்டவ்யம் ।... யாவான் வா அயம் ஆகாச: தாவான் ஏஷ அந்தர்ஹ்ருதய ஆகாச: ॥
—சாந்தோக்ய உபநிஷதம், 8.1.1,3

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



*பர அவரே – உயர்ந்ததும் தாழ்ந்ததும்; தஸ்மின் – ஆன்மாவை; த்ருஷ்ட்டே – தரிசித்தால்; ஹ்ருதய க்ரந்தி: – மனக் குழப்பம்; பித்யதே – அகல்கிறது; ஸர்வ ஸம்சயா: – எல்லா சந்தேகங்களும்; சித்யந்தே – விலகுகின்றன; அஸ்ய – அவனது; கர்மாணி ச – வினைப்பயன்களும்; க்ஷீயந்தே – அழிகின்றன.*

**8. உயர்ந்தது, தாழ்ந்தது என்று அனைத்துமாக விளங்குகின்ற ஆன்மாவைத் தரிசித்தால் மனக் குழப்பங்கள் அகல்கின்றன; எல்லா சந்தேகங்களும் விலகுகின்றன. வினைப்பயன்களும் அழிகின்றன.**

ஆன்ம தரிசனத்தால் என்ன பயன்? ஒரே வரியில் சொல்வதானால் ஒருவன் இறைக் காட்சிக்கு அல்லது இறையனுபூதிக்குத் தகுந்தவன் ஆகிறான். இதனை மூன்று படிகளாக இந்த மந்திரம் கூறுகிறது.

**1. மனக் குழப்பங்கள் அகல்கின்றன.** மனம் தெளிவு பெறுகிறது. ஆன்ம ஒளியின் பிரகாசத்தால் மனத்தில் இருண்ட பகுதிகள் எதுவும் இல்லாமல் போய்விடுகின்றன. ஆழ்மனத்தில் (subconscious mind) உள்ள தீய சம்ஸ்காரங்கள் வெளியேற்றப்படுகின்றன; நல்ல சம்ஸ்காரங்கள் இறையனுபூதிக்குச் சாதகமாகச் செயல்படுமாறு தூண்டப்படுகின்றன.

**2. சந்தேகங்கள் விலகுகின்றன.** ஆன்ம ஞானத்தின் பேரொளி வீசாமல் சந்தேகங்கள் விலகுவதில்லை. 'சந்தேக வாதி அழிகிறான்'[1] என்கிறது கீதை. ஆன்மீக வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும் சந்தேகங்கள் வருவது இயல்பு. சாஸ்திரங்களின் துணையுடனும், தூயவர்களின் உதவியுடனும் அவற்றை நிவர்த்தி செய்துகொள்ளலாம். அப்படியும் எல்லா சந்தேகங்களும் விலகுவதில்லை. அவையும் விலக வேண்டுமானால் ஆன்ம தரிசனம் பெற வேண்டும் என்பதை இந்த மந்திரம் சுட்டிக்காட்டுகிறது.

---

1. *ஸம்சயாத்மா விநச்யதி ।* —கீதை, 4.40

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



**3. வினைப்பயன்கள் அழிகின்றன.** தீவிரமான ஜபம், தியானம், தவம் போன்றவற்றால் வினைப்பயனின் வேகம் கட்டுப்படலாம். ஆனால் அந்த அனுபவத்திலிருந்து யாரும் தப்ப முடியாது. இதனை அன்னை ஸ்ரீசாரதா தேவி, 'வினைப் பயனை ஒருவன் அனுபவித்தே தீர வேண்டும். யாரும் அதி லிருந்து தப்ப முடியாது. ஆனால் ஜபம் அதன் வேகத்தைக் கட்டுப்படுத்துகிறது. உதாரணமாக, ஒருவனுக்கு முன்வினை யின் படி காலை இழக்க வேண்டும் என்று இருந்தால் அவன் காலில் ஒரு முள்ளாவது குத்தவே செய்யும்' என்று கூறுவார். ஆன்ம தரிசனத்தால் வினைப்பயன்களும் அழிந்து விடுகின்றன.

இறைவனை நோக்கிச் செல்வதில் இருந்த தடைகள் அனைத்தும் இவ்வாறு நீங்கப் பெற்றவன் இறைவனை நாடுகிறான்; இறையனுபூதி பெறுகிறான்.

## இறையனுபூதிக்கு ஆன்ம அனுபூதி வேண்டும்

**हिरण्मये परे कोशे विरजं ब्रह्म निष्कलम् ।**
**तच्छुभ्रं ज्योतिषां ज्योतिस्तद्यद् आत्मविदो विदुः ॥ ९ ॥**

ஹிரண்மயே பரே கோசே விரஜம் ப்ரஹ்ம நிஷ்கலம் ।
தச்சுப்ரம் ஜ்யோதிஷாம் ஜ்யோதிஸ் தத்யத் ஆத்மவிதோ
விது: ॥ 9 ॥

ஹிரண்மயே – பொன்னிறமான; பரே – மேலான; கோசே – உறையில்; விரஜம் – குறைகளற்ற; நிஷ்கலம் – பகுதிகளற்ற; ப்ரஹ்ம – இறைவன்; தத் – அவர்; சுப்ரம் – தூயவர்; ஜ்யோதிஷாம் – ஒளிகளுக்கெல்லாம்; ஜ்யோதி: – ஒளியானவர்; யத் தத் – யாரோ அவரை; ஆத்ம வித: – ஆன்மாவை அறிந்தவர்கள்; விது: – அறிகிறார்கள்.

**9. பொன்னிறமாக ஒளிர்கின்ற மேலான உறையில் இறைவன் உள்ளார். அவர் குறைகளற்றவர்,**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



**பகுதிகள் அற்றவர், தூயவர், ஒளிகளுக்கெல்லாம் ஒளியானவர். ஆன்மாவை அறிந்தவர்கள் அவரை அறிகிறார்கள்.**

இறையனுபூதிக்கான நிபந்தனை என்ன? ஆன்ம அனுபூதி. புத்தி அல்லது இதயம் இங்கே பொன்னிறமான உறையாகக் கூறப்படுகிறது. அதில் ஆன்மாவைக் கண்டு அறிந்தவர்கள் இறைவனைத் தரிசிக்கிறார்கள்.

ஆன்ம அனுபூதி: தன்மை

**न तत्र सूर्यो भाति न चन्द्रतारकं**
**नेमा विद्युतो भान्ति कुतोऽयमग्निः ।**
**तमेव भान्तमनुभाति सर्वं**
**तस्य भासा सर्वमिदं विभाति ॥ १० ॥**

ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ர தாரகம்
நேமா வித்யுதோ பாந்தி குதோऽயமக்னி: ।
தமேவ பாந்தமனுபாதி ஸர்வம்
தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி ॥ 10 ॥

தத்ர – அங்கே; ஸூர்ய: – சூரியன்; ந பாதி – ஒளிர்வதில்லை; சந்த்ர தாரகம் – சந்திரனும் நட்சத்திரங்களும்; ந – ஒளிர்வதில்லை; இமா: – இந்த; வித்யுத: – மின்னல்; ந பாந்தி – ஒளிர்வதில்லை; அயம் – இந்த; அக்னி: – அக்கினி; குத: – எங்கே; பாந்தம் – ஒளிர்கின்ற; தம் – அதனை; அனு ஏவ – அனுசரித்தே; ஸர்வம் – எல்லாம்; பாதி – ஒளிர்கின்றன; இதம் ஸர்வம் – இந்த அனைத்தும்; தஸ்ய – அதன்; பாஸா – ஒளியால்; விபாதி – ஒளிர்கின்றன.

**10. அங்கே சூரியன் ஒளிர்வதில்லை; சந்திரனும் நட்சத்திரங்களும் ஒளிர்வதில்லை; மின்னல் ஒளிர்வ தில்லை. இந்த அக்கினி எப்படி ஒளிர முடியும்?**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



**ஒளிர்கின்ற ஆன்மாவை அனுசரித்தே மற்ற அனைத்தும் ஒளிர்கின்றன. அனைத்தும் அதன் ஒளியால் ஒளிர்கின்றன.**

ஆன்ம அனுபூதி என்பது ஒரு புறக்காட்சி அல்ல என்று இங்கே கூறப்படுகிறது. அனைத்தையும் காண ஒரு விளக்கு தேவை. சூரியனைக் காண விளக்கு தேவையா? தேவை யில்லை. ஏனெனில் சூரியனின் ஒளியால்தான் அனைத்தும் ஒளிர்கின்றன. அதுபோல் ஆன்ம ஒளியால்தான் நாம் அனைத்தையும் காண்கிறோம். உலகப் பொருட்களைக் காண்பதற்கு உதவுகின்ற சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் அனைத்தும் பிரகாசிப்பது ஆன்ம ஒளியால்தான். எனவே ஆன்ம ஒளியைக் காட்ட இந்த ஒளிகளால் இயலாது.

பொதுவாக ஒளி, காட்சி என்றெல்லாம் படிக்கும்போது அது சாதாரணமாக நாம் காண்கின்ற ஒளியைப் போன்றது, அதைவிடப் பேரொளியானது என்றெல்லாம் எண்ணிக் கொள்கிறோம். ஆனால் உண்மை அதுவல்ல. 'பெட்ரோ மாக்ஸ் விளக்கிலிருந்து வருகின்ற ஒளி போன்றதல்ல ஆன்ம ஒளி. அனைத்தையும் நாம் அறிந்துகொள்வது ஆன்ம ஒளி யால்தான். அதன் காரணமாகவே அது ஒளி என்று கூறப்பட் டுள்ளது' என்று இதனை விளக்குகிறார் ஸ்ரீரமண மகரிஷி. இந்த ஒளி ஒரு நிலையைக் குறிக்கிறது என்று கூறுகிறார் ஸ்ரீராமகிருஷ்ணர்; 'இந்த நிலையை இருளுக்கும் ஒளிக்கும் இடைப்பட்ட நிலை எனலாம். இந்த ஒளி நாம் காண்கின்ற ஒளி அல்ல, பௌதீக ஒளி அல்ல'[1] என்கிறார் அவர்.

ஆன்ம அனுபூதி, இறையனுபூதி என்பது ஓர் அனுபவம்; உணர வேண்டியது. ஒரு புறக் காட்சிபோல் அதனைக் காண முடியாது. அன்பு, இரக்கம், இன்பம் போன்றவற்றை யாரும் காண முடியாது; அனுபவிக்கவே முடியும். அதுபோல் ஆன்ம அனுபூதியையும் அனுபவிக்க முடியுமே தவிர காண முடியாது.

---

1. அமுத மொழிகள், 1.483.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



எனினும் மிக உயர்ந்த நிலைகளில் புறக் கண் களாலேயே இந்தக் காட்சிகளைக் கண்டதாக பல மகான் களின் வரலாறு தெரிவிக்கிறது. குறிப்பாக பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீசாரதா தேவி ஆகியோரின் வாழ்க்கையில் இதனை நாம் காண்கிறோம். அன்னையிடம் இதுபற்றி சீடர் ஒருவர் கேட்டபோது அன்னை, 'பொதுவாக இவை அகக் காட்சிகள்தான். ஆனால் ஒருமுறை நான் நேரடியாகவே கண்டேன்' என்று பதில் கூறினார்.

## இறையனுபூதி

ஆன்ம அனுபூதி பெற்றவன் இறையனுபூதிக்குத் தகுதி பெறுகிறான். அந்த இறையனுபூதியின் தன்மை என்ன?

**ब्रह्मैवेदममृतं पुरस्ताद्ब्रह्म पश्चाद्ब्रह्म दक्षिणतश्चोत्तरेण ।**
**अधश्चोर्ध्वं च प्रसृतं ब्रह्मैवेदं विश्वमिदं वरिष्ठम् ॥ ११ ॥**

ப்ரஹ்மைவேதம் அம்ருதம் புரஸ்தாத் ப்ரஹ்ம
பச்சாத்ப்ரஹ்ம தக்ஷிணதச்சோத்தரேண ।
அதச்சோர்த்வம் ச ப்ரஸ்ருதம்
ப்ரஹ்மைவேதம் விச்வமிதம் வரிஷ்ட்டம் ॥ 11 ॥

இதம் – இந்த; புரஸ்தாத் – முன்னால்; பச்சாத் – பின்னால்; தக்ஷிணத: – வலது பக்கம்; உத்தரேண – இடது பக்கம்; அத: – கீழே; ஊர்த்வம் – மேலே; ப்ரஸ்ருதம் – எங்கும்; விச்வம் – பிரபஞ்சம்; வரிஷ்ட்டம் – மேலான; அம்ருதம் – அழிவற்ற; ப்ரஹ்ம ஏவ – இறைவனே.

**11. முன்னால், பின்னால், வலது பக்கம், இடது பக்கம், கீழே, மேலே என்று பிரபஞ்சம் முழுவதும் மேலான, அழிவற்ற இறைவனே நிறைந்துள்ளார்.**

இறைக்காட்சியின் தன்மை என்ன? எங்கும் இறைவனைக் காண்பது. இதனை விஞ்ஞானம் என்று விளக்குகிறார் ஸ்ரீராமகிருஷ்ணர். 'விஞ்ஞானம் என்பது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



என்ன? இறைவனைச் சிறப்பாக அறிவது. விறகில் நெருப்பு உள்ளது என்ற அறிவுதான், என்ற நம்பிக்கைதான் ஞானம்; அந்த நெருப்பில் சோறு சமைப்பது, உண்பது, அதனால் வலிமை பெறுவது விஞ்ஞானம். இறைவன் இருக்கிறார் என்று உணர்வில் உணர்வது ஞானம், அவருடன் பேசுவது, அவருடன் கலந்து ஆனந்தம் பெறுவது விஞ்ஞானம். இறைவனே உயிர்களாகவும் உலகமாகவும் ஆகியிருப்பதைத் தரிசிப்பது விஞ்ஞானம்[1] என்கிறார் அவர். அந்த விஞ்ஞான நிலையை இந்த மந்திரம் விளக்குகிறது.

இதி முண்டகோபநிஷதி த்விதீய முண்டகே த்விதீய: கண்ட: ॥

---

1. அமுத மொழிகள், 1.443.

## 2:2

## உன்னை அறி!

### சுருக்கம்

1. ஆன்மாவை அறி: 1–2
2. இறைவனை அறி (அம்பு எய்தல் உதாரணம்): 3–4
3. ஆன்ம அனுபூதி: 5–7
   - முதற்படி: பேச்சுக் கட்டுப்பாடு: 5
   - 2-ஆம் படி: பிரணவ தியானம்: 6
   - ஆன்மக் காட்சி?: 7
   - ஆன்மக் காட்சியின் பலன்: 8
   - இறையனுபூதிக்கு ஆன்ம அனுபூதி வேண்டும்: 9
   - தன்மை: 10
4. இறையனுபூதி: 11

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இணைபிரியாத, ஒரேபோன்ற இரண்டு பறவைகள்
ஒரே மரத்தில் அமர்ந்திருக்கின்றன. ... -1

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

# 3:1 நிழலும் நிஜமும்

ஆன்ம அனுபூதி பற்றி 2.2-இல் தொடங்கிய விளக்கம் இந்த அத்தியாயத்திலும் தொடர்கிறது.

ஆன்மா என்ற ஒன்று, மாறாத ஒன்று, இறைவனின் அம்சமான ஒன்று நம்மில் இருக்குமானால், அந்த ஆன்மாவே நாம் என்பது உண்மையானால் நமக்கு இன்பதுன்பங்கள் ஏன் வர வேண்டும்?

நாம் நிழலை நிஜம் என்று நம்புவதால் என்று இந்த அத்தியாயம் பதிலளிக்கிறது.

நிழல் எது? நிஜம் எது?

நிழல் = 'இதுதான் நான்' என்று நாம் கருதிக் கொண் டிருக்கின்ற 'நான்' = ஜீவன்

நிஜம் = உண்மை 'நான்' = ஆன்மா

இதனை இரு பறவை-உவமையின்மூலம் விளக்க முற்படுகிறது இந்த அத்தியாயம்.

நம்முள் இருவர்: *1-2*

**द्वा सुपर्णा सयुजा सखाया समानं वृक्षं परिषस्वजाते ।**
**तयोरन्यः पिप्पलं स्वाद्वत्ति अनश्नन् अन्यो अभिचाकशीति ॥**

த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா
ஸமானம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே ।
தயோரன்யः பிப்பலம் ஸ்வாத்வத்தி
அனச்னன் அன்யோ அபிசாகசீதி ॥ 1 ॥





CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



ஸயுஜா – இணைபிரியாத; ஸகாயா – ஒரேபோன்ற; த்வா – இரண்டு; ஸுபர்ணா: – பறவைகள்; ஸமானம் – ஒரே; வ்ருக்ஷம் – மரத்தில்; பரிஷஸ்வஜாதே – இருக்கின்றன; தயோ: – அவற்றுள்; அன்ய: – ஒன்று; பிப்பலம் – பழத்தை; ஸ்வாது – ருசித்து; அத்தி – தின்கிறது; அன்ய: – மற்றொன்று; அனச்னன் – தின்னாமல்; அபிசாகசீதி – பார்த்துக் கொண்டிருக்கிறது.

**1. இணைபிரியாத, ஒரேபோன்ற இரண்டு பறவைகள் ஒரே மரத்தில் அமர்ந்திருக்கின்றன. அவற்றுள் ஒன்று பழத்தை ருசித்துத் தின்கிறது. மற்றொன்று தின்னாமல் பார்த்துக்கொண்டிருக்கிறது.**

**समाने वृक्षे पुरुषो निमग्नोऽनीशया शोचति मुह्यमानः।**
**जुष्टं यदा पश्यत्यन्यम् ईशमस्य महिमानमिति वीतशोकः ॥**

ஸமானே வ்ருக்ஷே புருஷோ நிமக்னோ-
ऽநீசயா சோசதி முஹ்யமான:।
ஜுஷ்டம் யதா பச்யத்யன்யம் ஈசமஸ்ய
மஹிமானமிதி வீதசோக: ॥ 2 ॥

ஸமானே – ஒரே; வ்ருக்ஷே – மரத்தில்; புருஷ: – மனிதன்; நிமக்ன: – மூழ்கி; அநீசயா – அறியாமையால்; முஹ்யமான: – மோக வசப்பட்டு; சோசதி – வருந்துகிறான்; ஜுஷ்டம் – வழிபாட்டிற்குரிய; அன்யம் – மற்ற; ஈசம் – ஆன்மாவை; அஸ்ய – அதன்; மஹிமானம் – மகிமையை; யதா – எப்போது; பச்யதி – பார்க்கிறானோ; வீதசோக: இதி – கவலைகளிலிருந்து விடுபடுகிறான்.

**2. ஜீவனும் ஆன்மாவும் ஒரே உடம்பினுள் உள்ளனர். ஜீவன் அதாவது மனிதன் அறியாமையில் மூழ்கி, மோக வசப்பட்டு வருந்துகிறான். வழிபாட்டிற்குரிய தன் ஆன்மாவையும் அதன் மகிமையையும் அவன் எப்போது பார்க்கிறானோ அப்போது கவலைகளிலிருந்து விடுபடுகிறான்.**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



உடம்பு, மனம், பிராணன், ஆன்மா என்ற பலவற்றின் தொகுதி மனிதன். இருபறவை–உவமையைப் பொருத்திப் பார்ப்போம்.

மரம் = உடம்பு

பழத்தைத் தின்னும் பறவை = ஜீவன் (மனம்+பிராணன்) = நிழல்

பழத்தைத் தின்னாத பறவை = ஆன்மா = நிஜம்.

பொதுவாக நாம் நம்மை ஜீவனுடன் அதாவது மனத்துடனும் உடம்புடனுமே ஒன்றுபடுத்திக் காணப் பழகியுள்ளோம். அவை இரண்டும் நிழல், உண்மையற்றவை, மாறக் கூடியவை. இவை கொண்டுவரும் அனுபவங்களுடன் நம்மை ஒன்றுபடுத்திக் கொள்ளும்போது இன்ப துன்பங்களுக்கு உள்ளாகிறோம்; பிறவிச் சுழலில் உழல்கிறோம்.

ஆனால் நம்முள் உள்ள ஆன்மா நிஜம், இறைவனிலிருந்து தோன்றிய பொறி. எனவே இறையம்சம் கொண்டது. அதனுடன் நம்மை ஒன்றுபடுத்திக் கொள்ளும்போது நாம் கவலைகளிலிருந்து விடுபடுகிறோம், நமது மகிமையில் திளைக்கிறோம்.

சுவாமி விவேகானந்தர் மீண்டும்மீண்டும் மேற்கோள் காட்டுகின்ற உவமை இது. இந்த இரு பறவை–உவமையைக் கூறும்போது அவர் பரவசத்திற்கே சென்றுவிடுகிறார் என்றுதான் சொல்ல வேண்டும். அவரது விளக்கத்தைக் காண்போம்:

'உலகின் தத்துவங்களில் மிகச் சிறந்ததும் முழுமை பெற்றதுமான வெளிப்பாட்டையும், இந்துக்களின் சிந்தனை சாரத்தையும், முக்தி பற்றிய மனித குலத்தின் முழுக் கனவையும் வேறு எங்கு இவ்வளவு அழகிய மொழியில் இத்தனை அற்புத உவமையுடன் சொல்லி இருப்பதைக் காண முடியும்?

'ஒரு மரத்தில், அழகிய இறகுகள் கொண்ட இரண்டு பறவைகள் அமர்ந்திருக்கின்றன. இரண்டும் ஒன்றுக்கொன்று

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



மிகுந்த நேசம் பாராட்டுகின்றன. ஒன்று பழங்களைத் தின்கிறது. மற்றொன்று உண்ணாமல் கம்பீரமாக அமைதியாக உட்கார்ந்திருக்கிறது. கீழ்க்கிளையில் அமர்ந்திருக்கும் பறவை மாறிமாறி இனிப்பும் கசப்புமான பழங்களைத் தின்பதால் அதற்கேற்ப மகிழ்ச்சியும் வேதனையும் அடைகிறது. ஆனால் மேலே அமர்ந்திருக்கின்ற மற்ற பறவையோ அமைதியாக கம்பீரமாக அமர்ந்திருக்கிறது. அது இனிப்பையும் உண்ணவில்லை, கசப்பையும் தின்ன வில்லை. எனவே சுகம் துக்கம் எதைப்பற்றியும் கவலைப் படாமல் தன் மகிமையிலேயே ஆழ்ந்திருக்கிறது.

'மனிதனின் நிலை இதுதான். வாழ்க்கை தரும் இனிப்பும் கசப்புமான பழங்களை உண்கிறான்; பணத்தை நாடி, புலனின்பங்களைத் தேடி, வாழ்க்கையின் நிலையற்ற இன்பங்களைத் தேடி, பைத்தியக்காரத்தனமாக, வெறித்தன மாக, இடையீடின்றி ஓடிக் கொண்டிருக்கிறான். சில இடங் களில், ஆன்மாவைத் தேர்ப்பாகனுக்கும், புலன்களைக் கட்டுக்கடங்காத வெறிபிடித்த குதிரைகளுக்கும் உபநிடதங்கள் ஒப்பிடுகின்றன.[1]

'குழந்தைகள் ஒளிமயமான இன்பக்கனவுகளில் மிதப்பதும், பின்பு அவையனைத்தும் வீண் எனக் காண்பதும், வயதானவர்கள் தங்கள் கடந்தகாலச் செயல்களை அசை போடுவதும், எனினும் இந்த மாய வலையிலிருந்து வெளி யேறிச் செல்ல முடியாமல் திண்டாடுவதும்— நிலையற்ற இன்பங்களை நாடி ஓடுகின்ற மனிதனின் வாழ்க்கை இப்படித்தான் இருக்கிறது. இதுதான் உலகம்.

'எனினும் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் பொன் னான கணங்கள் வரவே செய்கின்றன. ஆழ்ந்த கவலைகளின் நடுவில், இல்லை இல்லை, பெருத்த மகிழ்ச்சியின் நடுவில்

---

1. ஆத்மானம் ரதினம் வித்தி சரீரம் ரதமேவ து ।
புத்திம் து ஸாரதிம் வித்தி மன: ப்ரக்ரஹமேவ ச ॥
இந்த்ரியாணி ஹயானாஹுர் விஷயாம் ஸ்தேஷு கோசரான் ।
—கட உபநிஷதம், 1:3.3,4.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



சில நேரங்கள் வருகின்றன; சூரிய ஒளியை மறைத்துக் கொண்டிருக்கும் மேகத்திரள் விலக்குவதுபோல் அப்போது தோன்றுகிறது; அப்பால் உள்ள ஏதோ ஒன்றின் காட்சி நம்மையும் அறியாமல் கண நேரத்திற்கு நமக்குக் கிடைத்து விடுகிறது— அப்பால், புலனின்ப வாழ்க்கைக்கு அப்பால், அப்பால், இயற்கைக்கு அப்பால், அப்பால், இவ்வுலக மறுவுலக இன்பங்களாகிய கற்பனைகளுக்கு அப்பால், அப்பால், புகழ், பணம், பெயர், சந்ததி முதலிய அனைத்து ஆசைகளுக்கும் அப்பால் உள்ள ஒளியைக் கண நேரம் பெறுகிறோம். இந்தக் காட்சியில் கண நேரம் திகைத்து நிற்கிறான் மனிதன்; இனிப்பும் கசப்புமான பழங்களை உண்ணாமல் தன்னுள்ளேயே நிறைவு கண்டு, ஆனந்தமாக, அமைதியாக, கம்பீரமாக வீற்றிருக்கும் அந்த மற்றொரு பறவையைப் பார்க்கிறான். கீதை கூறுவதுபோல்,

*யஸ்த்வாத்மரதிரேவ ஸ்யாதாத்மத்ருப்தச்ச மானவ:।*
*ஆத்மன்யேவ ச ஸந்துஷ்டஸ்தஸ்ய கார்யம் ந வித்யதே ॥*[1]

—''யார் ஆன்மாவின் மீது அன்பு செலுத்துபவனாய், ஆன்மாவைத் தவிர வேறொன்றும் வேண்டாதவனாய், ஆன்மாவிலேயே திருப்தி கொண்டவனாய் இருக்கிறானோ அவன் செய்வதற்கு என்ன வேலை இருக்கிறது?''

'ஏன் அடிமைபோல் வேலை செய்ய வேண்டும்? மனிதன் கண நேரம் அந்தக் காட்சி பெறுகிறான். ஆனால் அதை மறந்துவிடுகிறான், வாழ்வின் இன்பதுன்பமாகிய பழங்களை உண்கிறான். சில காலத்திற்குப் பிறகு ஒருவேளை மீண்டும் அந்தக் காட்சி அவனுக்குக் கிடைக்கிறது. அடிமேல் அடிகளைப் பெற்ற பின்னர் கீழ்ப்பறவை மேற்பறவையை நோக்கிச் செல்கிறது. பலமான அடி பெறுவதற்குப் பேறு பெற்றிருந்தால் தனது உயிருக்குயிராகவும் நண்பனாகவும் இருக்கும் மேற்பறவையின் அருகில், மிக அருகில் செல்கிறது. அருகில் செல்லச்செல்ல, மேற்பறவை

---

1. கீதை, 3.17.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



யிலிருந்து கிளம்புகின்ற ஒளி தனது இறகுகளையும் முழுக்காட்டிச் செல்வதை அது காண்கிறது. அதனை இன்னும் நெருங்க நெருங்க, ஆகா, மாற்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் நெருங்கும்போது, தானே கரைந்து போவதுபோல் அது உணர்கிறது. மெள்ளமெள்ள அது முற்றிலுமாக மறைந்துவிடுகிறது. உண்மையில் கீழ்ப் பறவை வேறல்ல; மேலே அசைந்து கொண்டிருக்கும் இலை களுக்கு இடையில் அமைதியாக, கம்பீரமாக வீற்றிருந்த அந்த மேற்பறவையின் பிரதிபிம்பமே அது. எல்லாம் மேற்பறவை யின் மகிமையே. அதன் மகிமையில் கலந்து இதுவும் பய மின்றி இருக்கிறது; பூரண திருப்தியும் அமைதியும் கம்பீரமும் பெறுகிறது.[1]

### ◈ ஆன்ம தரிசனம் (3–9) ◈

ஆன்மாவுடன் ஒன்றுபடுத்திக் கண்டால் மட்டுமே மனிதன் துயரங்களிலிருந்து விடுபட முடியும். ஒன்றுபடுத்திக் காண வேண்டுமானால் ஆன்ம தரிசனம் அவசியம். தொடரும் 7 மந்திரங்கள் ஆன்ம தரிசனம் பற்றி கூறுகின்றன.

#### ஆன்ம தரிசனத்தின் விளைவு: 3–4

**यदा पश्यः पश्यते रुक्मवर्णं कर्तारमीशं पुरुषं ब्रह्मयोनिम् ।**
**तदा विद्वान्पुण्यपापे विधूय निरञ्जनः परमं साम्यमुपैति ॥**

யதா பச்ய: பச்யதே ருக்மவர்ணம்
கர்த்தாரமீசம் புருஷம் ப்ரஹ்மயோனிம் ।
ததா வித்வான் புண்யபாபே விதூய
நிரஞ்ஜன: பரமம் ஸாம்யமுபைதி ॥ 3 ॥

பச்ய: – பார்ப்பவன்; யதா – எப்போது; ருக்மவர்ணம் – பொன்னொளியும்; கர்த்தாரம் – தலைவர்; ஈசம் – ஆள்பவர்; ப்ரஹ்மயோனிம் – இறைவனுக்கான வழி;

---

1. ஞான தீபம், 5.200–202.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



பச்யதே – பார்க்கிறானோ; ததா – அப்போது; வித்வான் – மகான்; புண்ய பாபே – புண்ணிய பாவங்களை; விதூய – உதறி; நிரஞ்ஜன: – துன்பமற்ற; பரமம் – மேலான; ஸாம்யம் – சம நிலையை; உபைதி – அடைகிறான்.

3. பொன்னொளியுடன் ஒளிர்பவனும், தலை வனும், ஆள்பவனும், இறைவனுக்கான வழியாக வும் திகழ்கின்ற ஆன்மாவை எப்போது ஒருவன் பார்க்கிறானோ அப்போது அந்த மகான் புண்ணிய பாவங்களை உதறிவிட்டு துன்பமற்ற மேலான சமநிலையை அடைகிறான்.

**प्राणो ह्येष यः सर्वभूतैर्विभाति विजानन्विद्वान् भवते नातिवादी ।**
**आत्मक्रीड आत्मरतिः क्रियावानेष ब्रह्मविदां वरिष्ठः ॥ ४॥**

ப்ராணோ ஹ்யேஷ ய: ஸர்வபூதைர்விபாதி
விஜானன் வித்வான் பவதே நாதிவாதீ ।
ஆத்மக்ரீட ஆத்மரதி: க்ரியாவான்
ஏஷ ப்ரஹ்மவிதாம் வரிஷ்ட்ட: ॥ 4 ॥

ஏஷ: – இந்த; ப்ராண: ஹி – பிராணனே; ஸர்வபூதை: – எல்லா உயிர்களிலும்; விபாதி – செயல்படுகிறது; ய: – எந்த; வித்வான் – மகான்; விஜானன் – உணர்ந்து; நாதிவாதீ – அதிகம் பேசாதவனாக; பவதே – ஆகிறான்; ஆத்மக்ரீட: – ஆன்மாவில் களிப்பவனாக; ஆத்மரதி: – ஆன்மாவில் இன்பம் காண்பவனாக; க்ரியாவான் – வேலை செய்கிறான்; ஏஷ: – இவன்; ப்ரஹ்மவிதாம் – ஆன்ம ஞானியரில்; வரிஷ்ட்ட: – சிறந்தவன்.

4. எல்லா உயிர்களிலும் செயல்படுவது பிராணனே என்பதை உணர்பவன் தேவையற்றவற்றைப் பேசுவதில்லை. ஆன்மாவில் களிப்பவனாக, ஆன்மா வில் இன்பம் காண்பவனாக அவன் வேலை செய் கிறான். ஆன்ம ஞானியரில் சிறந்தவன் அவனே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



திரை உள்ளது; திரைப்படம் அதில் அசைகிறது. தண்டவாளம் உள்ளது; ரயில் அதன்மீது ஓடுகிறது. ஒன்று அசையாமல் சாட்சியாக நிற்கிறது, மற்றொன்று அதன்மீது செயல்படுகிறது. உலகின் இயக்கம் இவ்வாறே நிகழ்கிறது. இறைவன் சாட்சிப்பொருளாக இருக்கிறார்; இயற்கை, அதாவது பிராண சக்தி அவரது சன்னிதியில் செயல்படுகிறது. ஆன்மா சாட்சிப்பொருளாக நம்முள் இருக்கிறது; ஜீவன் செயல்படுகிறான். இன்ப துன்பங்கள் அனைத்திற்கும் அவனே காரணம்.

இதே ஜீவன் தன்னை ஆன்மா என்று உணரும்போது இயற்கையின் நிகழ்ச்சிகள் எதிலும் ஒட்டாமல் தனியாக நிற்க, சாட்சியாக இருக்க அவனால் முடிகிறது. அவன் ஆன்மாவில் இன்பம் காண்கிறான்.

## ஆன்ம தரிசனத்திற்கான சாதனை: 5-6

ஆன்மாவைக் காண்பது எப்படி? தொடரும் 2 மந்திரங்கள் அதற்கான சாதனை முறைகளைக் கூறுகின்றன.

**सत्येन लभ्यस्तपसा ह्येष आत्मा**
**सम्यग् ज्ञानेन ब्रह्मचर्येण नित्यम् ।**
**अन्तःशरीरे ज्योतिर्मयो हि शुभ्रो**
**यं पश्यन्ति यतयः क्षीणदोषाः ॥ ५॥**

ஸத்யேன லப்யஸ்தபஸா ஹ்யேஷ ஆத்மா
ஸம்யக் ஜ்ஞானேன ப்ரஹ்மசர்யேண நித்யம் ।
அந்த:சரீரே ஜ்யோதிர்மயோ ஹி சுப்ரோ
யம் பச்யந்தி யதய: க்ஷீணதோஷா: ॥ 5 ॥

ஏஷ: – இந்த; ஆத்மா – ஆன்மா; நித்யம் ஹி – தொடர்ந்த; ஸத்யேன – உண்மையால்; தபஸா – தவத்தால்; ஸம்யக் ஜ்ஞானேன – உறுதியான ஞானத்தால்; ப்ரஹ்மசர்யேண – பிரம்மச்சரியத்தால்; லப்ய: – அடையப்படுகிறது; அந்த:சரீரே – உடம்பின் உள்ளே; ஜ்யோதிர்மய: – ஒளிப்பொருளாக;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



*சுப்ர: – புனிதமானதாக; யம் – எந்த; க்ஷீணதோஷா: – புனிதமானவர்கள்; யதய: – புலக்கட்டுப்பாடு உடையவர்கள்; பச்யந்தி – காண்கிறார்கள்.*

**5. உண்மை, தவம், உறுதியான ஞானம், பிரம்மச்சரியம் ஆகியவற்றைத் தொடர்ந்து பயிற்சி செய்வதால் இந்த ஆன்மா அடையப்படுகிறது. இந்த ஆன்மா உடம்பின் உள்ளே புனிதமான ஒளிப் பொருளாக உள்ளது. புனிதமும் புலக்கட்டுப்பாடும் உடையவர்கள் அதனைக் காண்கிறார்கள்.**

இங்கே 4 சாதனைகள் கூறப்படுகின்றன.

**உண்மை:** விளைவுகளைக் கருத்தில் கொள்ளாமல் பிடிவாதமாக உண்மை பேசுவது என்ற பொருளில் இதனைக் காணக் கூடாது. பிறர் மனத்தை நோகச் செய்யாத உண்மையையே பேச வேண்டும்; அத்தகைய பேச்சை வாக்கினால் செய்கின்ற தவம் என்று வகைப்படுத்துகிறது கீதை.[1] 'உண்மை பேச வேண்டும், இனிமையாகப் பேச வேண்டும்; இனியதல்லாத உண்மையைப் பேசக் கூடாது. உண்மை அல்லாத இனியதையும் பேசக் கூடாது. இதுவே சான்றோர்கள் காலம்காலமாகக் கடைப்பிடிக்கின்ற தர்ம மாகும்'[2] என்றே மனுவும் கூறுகிறார்.

உண்மை என்பதை, உண்மையான வாழ்வு என்ற பரந்த பொருளில் காண்கிறார் ஸ்ரீசங்கரர். 'உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். உண்மையற்றவற்றை விட வேண்டும்'[3] என்கிறார் அவர். ஆன்மாவை அடைவதற்கு

---

1. அனுத்வேககரம் வாக்யம் ஸத்யம் ப்ரியஹிதம் ச யத் । ... வாங்மயம் தப உச்யதே ॥
—கீதை, 17.15

2. ஸத்யம் ப்ரூயாத் ப்ரியம் ப்ரூயாத் ந ப்ரூயாத் ஸத்யம் அப்ரியம் ।
ப்ரியம் ச நான்ருதம் ப்ரூயாத் ஏஷ தர்ம: ஸனாதன: ॥
—மனு, 4.138.

3. ஸத்யேன அன்ருத த்யாகேன ம்ருஷா வதன த்யாகேன ।

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



'அனுகூலமானவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்; அனுகூல மாக இல்லாதவற்றை விட வேண்டும்.'[1]

**தவம்:** மனத்திற்கும் புலன்களுக்கும் பயிற்சி அளித்தல். 'புற உலகை விட்டு அக உலகை நாடுமாறு மனத்தையும் புலன்களையும் ஒருமைப்படுத்துவது மிக உயர்ந்த தவம்'[2] என்கிறது மகா பாரதம்.

**உறுதியான ஞானம்:** ஞானம் உறுதியானதாக இருக்க வேண்டும். 'ஆன்மா உண்மை, மற்ற எதுவும் உண்மையல்ல. நான் ஆன்மாவை நாடிச் செல்கிறேன். வேறு எதிலும் எனக்கு நாட்டமில்லை' என்ற அறிவு எப்போதும் உறுதியாக இருக்க வேண்டும். இதில் எந்தச் சஞ்சலமும் கூடாது. இந்த உறுதியை அடிப்படையாகக் கொண்டே ஆன்மீக வாழ்வு அமைக்கப்படுகிறது.

**பிரம்மச்சரியம்:** ஒன்றன்கீழ் ஒன்றாக துளைகள் உள்ள ஒரு ஜாடியைக் கற்பனை செய்வோம். மேலே உள்ள துளைவழியாக வேகத்துடன் நீர் பாய வேண்டுமானால் கீழே உள்ள துளைகள் அடைபட்டிருக்க வேண்டும். தியானத் தில் மனம் மேலே உயர்த்தப்படுகிறது; அது முழுமையாக உயர் லட்சியங்களை நோக்கிச் செல்ல வேண்டுமானால் காமம்போன்ற கீழான உணர்ச்சிவேகங்களின் வழியாகச் செல்வதிலிருந்து விடுபட்டிருக்க வேண்டும். எனவே பிரம்மச்சரியம் மிகவும் அவசியம்.

உண்மை, தவம், பிரம்மச்சரியம் போன்றவற்றின் விளைவாக நாம் பெறுவது புனிதம். 'மண்ணிலும் சரி, விண்ணிலும் சரி, மிக உயர்ந்த மிகவும் தெய்வீகமான ஆற்றல் புனிதமே'[3] என்கிறார் சுவாமி விவேகானந்தர். இவ்வாறு

---

1. ஆனுகூல்யஸ்ய ஸங்கல்பः ப்ராதிகூல்யஸ்ய வர்ஜனம।
—அஹிர்புத்ன்ய சம்ஹிதை, 37.28.
2. மனஸச்ச இந்த்ரியாணாம் ச ஹி ஐகாக்ர்யம் பரமம் தப: ।
—சாந்தி பர்வம், 250.4.
3. ஞான தீபம், 10.371.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



புனிதமும் புலக்கட்டுப்பாடும் பெற்றவர்கள் ஆன்மாவைக் காண்கிறார்கள்.

எங்கே?

உடம்பினுள். உடம்பினுள் உள்ள இதயக்குகைபற்றி ஏற்கனவே (#2:2.7) கண்டோம். அங்கே ஆன்மாவை ஒளிப் பொருளாகக் காண்கிறார்கள்.

**सत्यमेव जयते नानृतं सत्येन पन्था विततो देवयानः ।**
**येनाक्रमन्ति ऋषयो हि आप्तकामा यत्र तत्सत्यस्य परमं निधानम् ॥**

ஸத்யமேவ ஜயதே நான்ரிதம்
ஸத்யேன பந்தா விததோ தேவயான: ।
யேனாக்ரமந்தி ரிஷயோ ஹி ஆப்தகாமா
யத்ர தத்ஸத்யஸ்ய பரமம் நிதானம் ॥ 6 ॥

ஸத்யம் ஏவ – உண்மையே; ஜயதே – வெல்லும்; ந அன்ரிதம் – உண்மையற்றது அல்ல; ஸத்யேன – உண்மை யால்; தேவ யான: – ஆன்மீக வழி; பந்தா – பாதை; விதத: – அமைந்துள்ளது; யேன – எதன் வழியாக; ஆப்த காமா: – ஆசைகள் நிறைவேறப்பெற்ற; ரிஷய: – முனிவர்கள்; ஆக்ர மந்தி – போகிறார்கள்; யத்ர – எங்கே; தத் – அது; ஸத்யஸ்ய – உண்மையின்; பரமம் – மேலான; நிதானம் – இருப்பிடம்.

**6. உண்மையே வெல்லும்; உண்மையற்றது அல்ல. ஆன்மீகப் பாதை உண்மையாலேயே அமைந் துள்ளது. ஆசைகள் நிறைவேறப் பெற்ற முனிவர்கள் அதன் வழியாகவே செல்கிறார்கள். உண்மையின் மேலான இருப்பிடம் அங்கேயே உள்ளது.**

### ஆன்ம தரிசனம் எங்கே வாய்க்கிறது?: 7

**बृहच्च तद् दिव्यम् अचिन्त्यरूपं सूक्ष्माच्च तत् सूक्ष्मतरं विभाति ।**
**दूरात् सुदूरे तदिहान्तिके च पश्यत्सु इहैव निहितं गुहायाम् ॥ ७॥**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



**ப்ருஹச்ச தத் திவ்யம் அசிந்த்யரூபம்**
**ஸூக்ஷ்மாச்ச தத் ஸூக்ஷ்மதரம் விபாதி |**
**தூராத் ஸுதூரே ததிஹாந்திகே ச**
**பச்யத்ஸு இஹைவ நிஹிதம் குஹாயாம் ॥ 7 ॥**

தத் – அது; ப்ருஹத் – பெரியது; திவ்யம் – ஒளிமய மானது; அசிந்த்யரூபம் – சிந்தனைக்கு எட்டாத வடிவம் உடையது; ஸூக்ஷ்மாத் – நுண்ணியவற்றுள்; ஸூக்ஷ்மதரம் – மிக நுண்ணியது; தத் – அது; விபாதி – ஒளிர்கிறது; தூராத் – தூரமானவற்றுள்; ஸுதூரே – அதிக தூரமானது; இஹ – இங்கே; அந்திகே ச – மிக அருகிலும்; பச்யத்ஸு – காண்பவர்களிடம்; இஹ ஏவ – இந்தப் பிறவியிலேயே; குஹாயாம் – இதயக்குகையில்; நிஹிதம் – உள்ளது.

**7. இந்த ஆன்மா பெரியது, ஒளிமயமானது, சிந்தனைக்கு எட்டாத வடிவம் உடையது, நுண்ணிய வற்றுள் எல்லாம் நுண்ணியது. அது தூரமான வற்றுள் அதிக தூரமானது, அதேவேளையில் இங்கே மிக அருகிலும் இருக்கிறது. இதயக்குகையில் ஒளிர் வதாக மகான்கள் அதனை இந்தப் பிறவியிலேயே காண்கிறார்கள்.**

இறைவன் என்ற மாபெரும் ஜோதியின் சுடரே ஆன்மா வாக நம்முள் உள்ளது என்று #2:1.1-இல் கண்டோம். இறைவன் என்ற நிலையில் எல்லாவற்றையும் கடந்து இருப்பதால் நம்மிலிருந்து மிகத் தொலைவில் இருப்பவ ராகக் கூறப்படுகிறார். அதேவேளையில், ஆன்மா என்ற நிலையில் நமது இதயக்குகையில் இருப்பதால் மிக அருகிலும் உள்ளார்.

அந்த இதயக் குகையிலேயே ஆன்ம தரிசனம் வாய்க் கிறது. ஒளிப் பொருளாக அதனை மகான்கள் காண்கிறார்கள்.

ஆன்ம தரிசனம் என்பது ஏதோ மரணத்திற்குப் பின்னால் கிடைக்கப் பெறுகின்ற அனுபவம் அல்ல. வாழும் போதே பெறப்படும் அனுபவம் அது. அதை உணர்த்தவே 'இந்தப் பிறவியிலேயே' என்ற வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ளது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



ஆன்ம தரிசனம்: மூன்று நிபந்தனைகள்

**न चक्षुषा गृह्यते नापि वाचा नान्यैर्देवैस्तपसा कर्मणा वा ।**
**ज्ञानप्रसादेन विशुद्धसत्त्वस्ततस्तु तं पश्यते निष्कलं**
**ध्यायमानः ॥ ८ ॥**

ந சக்ஷுஷா க்ருஹ்யதே நாபி வாசா
நான்யைர்தேவைஸ் தபஸா கர்மணா வா ।
ஜ்ஞானப்ரஸாதேன விசுத்தஸத்வஸ்-
ததஸ்து தம் பச்யதே நிஷ்கலம் த்யாயமான: ॥ 8 ॥

சக்ஷுஷா – கண்களால்; ந க்ருஹ்யதே – கிரகிக்கப்படுவதில்லை; வாசா அபி – வாக்கினாலும்; அன்யை: – மற்ற; தேவை: – புலன்களால்; தபஸா – தவத்தால்; கர்மணா வா – கர்மங்களால்; ஜ்ஞான ப்ரஸாதேன – புத்தியின் தெளிவால்; விசுத்த ஸத்வ: – தூய்மையும் நுண்மையும் பெற்ற; தம் – அந்த ஆன்மாவை; த்யாயமான: – தியானித்து; தத: து – பிறகு; நிஷ்கலம் – பகுதிகள் அற்ற; பச்யதே – காண்கிறான்.

**8. அந்த ஆன்மா கண்களாலோ, வாக்கினாலோ, மற்ற புலன்களாலோ அறியப்படுவதில்லை; தவத்தாலோ கர்மங்களாலோ அடையப்படுவதில்லை. புத்தியின் தெளிவால் தூய்மையும் நுண்மையும் பெற்ற மனத்தால் அதனைத் தியானிப்பவன் பகுதிகள் அற்றதான அந்த ஆன்மாவைக் காண்கிறான்.**

இங்கே ஆன்ம தரிசனத்திற்கான மூன்று நிபந்தனைகள் கூறப்படுகின்றன. இந்த நிபந்தனைகளின்மூலம், தவம் போன்ற சாதனைகளை எச்சரிக்கையுடன் அணுகுமாறு இந்த மந்திரம் அறிவுறுத்துகிறது.

1. புலன்களால் ஆன்மா அடையப்படுவதில்லை. ஏற்கனவே (#2:2.1). இதனை நாம் விரிவாகக் கண்டோம். புலன்கள் புறவுலகை அறிவதற்கான கருவிகள். எனவே அகவுலக சம்பந்தமான எதையும் அவற்றால் அறிய இயலாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



2. தவத்தாலோ கர்மங்களாலோ அடையப்படுவதில்லை.

தவத்தால் ஆன்மா அடையப்படுவதாக #3:1.5–ஆம் மந்திரம் கூறியது. தவத்தால் ஆன்மா அடையப்படுவதில்லை என்று இங்கே கூறப்படுகிறது. முரண்பாடுபோல் தோன்றுகின்ற இதனைப் புரிந்துகொள்வது அவசியம்.

பகவத்கீதை தவத்தை சாத்வீக தவம், ராஜச தவம், தாமச தவம் என்று மூன்றுவிதமாகப் பிரிக்கிறது.[1] பாராட்டு, மதிப்பு, புகழ் இவற்றிற்காக ஆடம்பரத்துடன் செய்யப்படுகின்ற தவம் ராஜசமானது. அது உறுதியற்றது, தற்காலிகமானது. முட்டாள்தனமாக தன்னைத் துன்புறுத்தியோ பிறரை அழிப்பதற்காகவோ செய்யப்படுகின்ற தவம் தாமசமானது. இந்த இரண்டு வகைத் தவங்களும் மனிதனைக் கீழ் நிலைக்குத் தள்ளுகின்றன.

சாத்வீகத் தவம் மனிதனை இறைநெறியில் செலுத்துகிறது. இதற்கு நான்கு அடிப்படை நிபந்தனைகளை கீதை கூறுகிறது— 1. உடம்பை வருத்தாமல் செய்வது. 2. பலனை விரும்பாதிருத்தல். 3. யோகத்தில் நிலைபெற்றிருத்தல். 4. ஆழ்ந்த சிரத்தை. இந்த நான்கு நிபந்தனைகளுடன் செய்யப்படுகின்ற தவம் ஆன்ம தரிசனப் பாதையில் ஒருவனை அழைத்துச் செல்கிறது. இவையின்றிச் செய்யப்படுகின்ற தவங்களால் ஆன்மாவை அடைய இயலாது.

இதுபோலவே செயல்களையும் மூன்றுவிதமாகக் கொண்டு சாத்வீகச் செயல் ஒருவனை இறைநெறியில் அழைத்துச் செல்கிறது என்கிறது கீதை.[2] பலனில் ஆசை வைக்காமல், பற்றின்றி, விருப்பு வெறுப்பு இன்றி, தனக்கென்று விதிக்கப்பட்டுள்ள கடமைகளைச் செய்வது சாத்வீகச் செயல் என்று அது விளக்குகிறது. அத்தகைய செயல் ஒருவனை இறைநெறியில் அழைத்துச் செல்கிறது. ஆசை வசப்பட்டு, தன்முனைப்புடன் மிகவும் பாடுபட்டு செய்வது ராஜசச் செயல். செயலின் விளைவையும் நஷ்டத்தையும் துன்பத்தையும்

1. கீதை, 17.5–6; 14–19.
2. கீதை, 17.23–25.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



சொந்த ஆற்றலையும் எண்ணிப் பாராமல் மனமயக்கத்தால் செய்யப்படுவது தாமசச் செயல். இத்தகைய செயல் ஆன்மீகப் பாதையில் ஒருவனை அழைத்துச் செல்லாது.

*3. எதனால் ஆன்ம தரிசனம் வாய்க்கிறது?*

மூன்று படிகளாலான ஒரு பாதையை இந்த மந்திரம் காட்டுகிறது— i. புத்தியின் தெளிவு. ii. தெளிந்த புத்தியால் தூய்மை பெற்ற மனம். iii. தூய மனத்துடன் செய்யப் படுகின்ற தியானம்.

**i. புத்தியின் தெளிவு:** அறிவு மூன்று நிலைகளில் செயல்படுகிறது— இயல்புணர்ச்சி (instinct), அறிவு (intellect), உள்ளுணர்வு (intuition). இதில் உள்ளுணர்வே புத்தி எனப்படுகிறது. கற்றறிவு, கேட்டறிவு போன்ற எந்தப் புற உபகரணங்களின் துணையும் இன்றி உணர்வின் ஆழங் களிலிருந்து எழுகின்ற அறிவு இது. இது ஒருபோதும் பொய்ப்பதில்லை. இதுவே உள்ளுணர்வு. இதுவே சாஸ்திரங் களில் புத்தி, தீ:, இதயத் தாமரை, ஞானக் கண், நெற்றிக் கண் என்றெல்லாம் பேசப்படுகிறது. இந்த உள்ளுணர்வு விழிப் பதையே புத்தியோகம் என்று கீதை (#2.49–58) கூறுகிறது.

இதயத் தூய்மையாலும் பிரார்த்தனையாலும், காயத்ரி போன்ற மந்திர ஜபங்களாலும் புத்தி விழிப்படைகிறது. புத்தி விழிப்புற்றவன் தன் இதயத்தில் பேரொளியைக் காண்கிறான்; அதனால் அவனது அறியாமை அகல்கிறது என்று கீதை (#10.11) கூறுகிறது.

'விழிப்படைந்த புத்தியைத் தேரோட்டியாகக் கொண்ட வனின் பயணமே தனது லட்சியத்தை அடைகிறது; அவன் இறைவனை அடைகிறான். விழிப்படையாத புத்தியைத் தேரோட்டியாகக் கொண்டவனின் பயணம் லட்சியத்தை அடைவதில்லை; அவன் உலகியலில் உழல்கிறான்' என்று இதனை விளக்குகிறது கட உபநிஷதம் (#1:3.7–9).

புத்தி விழிப்புறுவதே இங்கு புத்தியின் தெளிவு என்று கூறப்பட்டது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



**ii. தெளிந்த புத்தியால் தூய்மை பெற்ற மனம்:** மனம் தூய்மை பெறுவது எப்படி? இதற்கு, ஆசைகளை விட வேண்டும், பற்று கூடாது, நல்லவற்றை நினைக்க வேண்டும் என்றெல்லாம் பல வழிகளைக் கூறுவதுண்டு. இவையெல் லாம் வழிகள்தான். ஆனால் எத்தனை ஆசைகளை விடுவது? எப்படி விடுவது? ஆசைகளை ஒவ்வொன்றாக விட்டுக் கொண்டிருந்தால் அதற்கே ஒரு பிறவி போதாது. எனவே இவையெல்லாம் வழிகள்தான் என்றாலும் சிறந்த வழிகள் அல்ல. சிறந்த வழியை இந்த மந்திரம் கூறுகிறது. புத்தியை விழிப்புறச் செய்ய வேண்டும். புத்தி விழிப்புற்றால் மனம் தானாக வசப்படுகிறது; தூய்மை பெறுகிறது. ஏனெனில் 'மனத்தைவிட ஆற்றல் வாய்ந்தது புத்தி'[1] என்கிறது கீதை. எனவே புத்தி விழித்தெழும்போது மனம் தானாக வசப்படு கிறது; தூய்மை பெறுகிறது.

**iii. தியானம்:** இவ்வாறு புத்தி விழிப்புற்று, அதனால் தூய்மை பெற்ற மனத்தை தியானத்தில் ஈடுபடுத்தும்போது ஆன்மக் காட்சி வாய்க்கிறது.

*ஆன்ம தரிசனத்திற்கான கருவி மனம்: 9–10*

**एषोऽणुरात्मा चेतसा वेदितव्यो**
**यस्मिन् प्राणः पञ्चधा संविवेश ।**
**प्राणैश्चित्तं सर्वमोतं प्रजानां**
**यस्मिन् विशुद्धे विभवत्येष आत्मा ॥ ९॥**

ஏஷோऽணுராத்மா சேதஸா வேதிதவ்யோ
யஸ்மின் ப்ராண: பஞ்சதா ஸம்விவேச ।
ப்ராணைச்சித்தம் ஸர்வமோதம் ப்ரஜானாம்
யஸ்மின் விசுத்தே விபவத்யேஷ ஆத்மா ॥ 9 ॥

ஏஷ: – இந்த; அணு: – நுண்ணிய; ஆத்மா – ஆன்மா; சேதஸா – மனத்தால்; வேதிதவ்ய: – அறிய வேண்டும்;

1. மனஸஸ்து பரா புத்தி: । —கீதை, 3.42.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



*யஸ்மின் – எங்கே; ப்ராண: – பிராணன்; பஞ்சதா – ஐந்தாக; ஸம்விவேச – புகுந்துள்ளதோ; ப்ரஜானாம் – உயிரினங்களின்; ப்ராணை: – புலன்கள்; சித்தம் – மனம்; ஸர்வம் – முழுவதும்; ஓதம் – வியாபிக்கப்பட்டுள்ளது; யஸ்மின் – எங்கே; விசுத்தே – தூய்மையான; ஏஷ: ஆத்மா – இந்த ஆன்மா; விபவதி – ஒளிர்கிறது.*

**9. நுண்ணியதான இந்த ஆன்மாவை மனத்தால் தான் அறிய வேண்டும். உடம்பில் பிராணன் ஐந்து விதமாகச் செயல்படுகிறது. உயிரினங்களின் மனம் முழுவதும் புலன்களால் வியாபிக்கப்பட்டுள்ளது. இந்த மனம் தூய்மை பெறும்போது ஆன்மா அங்கே ஒளிர்கிறது.**

அகவுலகம் சம்பந்தமான எதையும் சாதிப்பதற்கு நம்மிடம் உள்ள கருவி மனம் மட்டுமே. ஆன்மக் காட்சி பெறுவதற்கும் இங்கே அந்த மனமே கருவியாக வைக்கப்பட்டுள்ளது. எந்த மனம் ஆன்மாவைக் காட்ட வல்லது?

கட்டாயமாக சாதாரண மனம் அல்ல. முந்தின மந்திரங்களில் கூறியதுபோல் உண்மை, தவம், உறுதியான அறிவு, பிரம்மச்சரியம் போன்றவற்றால் புனிதம் பெற்ற மனம்(#3:1.5). தெளிவு பெற்ற புத்தியால் தூய்மை பெற்ற மனம் (#3:1.8). இத்தகைய மனம் 'தீபம் போன்றது, ஆன்மாவின் மூலைமுடுக்குகளை எல்லாம் காட்டக் கூடியது'[1] என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

ஆன்மக் காட்சிக்கான கருவி மனமாக இருந்தாலும் சாதாரண நிலையில் அது அந்தத் தகுதி வாய்ந்ததாக இல்லை. ஏனெனில் அது 'புலன்களால் வியாபிக்கப்பட்டுள்ளது'. புலன்கள் புறவுலகிலிருந்து கொண்டு வருகின்ற அறிவால் நிறைந்துள்ளது. புத்தி விழிப்புறும்போது, அதன் ஒளியால் மனம் இந்த அறிவிலிருந்து விடுபடுகிறது. இதையே கீதை (#10.11) 'புத்தி விழிப்புற்றவன் தன் இதயத்தில் பேரொளியைக் காண்கிறான்; அதனால் அவனது அறியாமை அகல்கிறது' என்று கூறுகிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



உடம்பும் மனமும் இரண்டு கருவிகள். மனத்தைத் தூய்மைப்படுத்துவதுபற்றி கண்டோம். உடம்பும் தகுதியான தாக இருக்க வேண்டும் என்பதை இந்த மந்திரம் கோடி காட்டு கிறது. உடம்பை எவ்வாறு தகுதியானதாக வைத்துக் கொள்வது? பிராணனைக் கட்டுப்படுத்துவதன்மூலம். பிராணன் (மேல் நோக்கிய இயக்கம்), அபானன் (கீழ் நோக்கிய இயக்கம்), வியானன் (எல்லா பக்க இயக்கம்), உதானன் (மரண வேளை யில் உயிர் வெளியேற உதவுதல்), ஸமானன் (உணவு ஜீரணம், உணவை ரத்தம் போன்றவையாக மாற்றுதல்) என்று பிராணன் ஐந்துவிதமாக நமது உடம்பில் செயல்படுகிறது. பிராணனைக் கட்டுப்படுத்துவதன்மூலம் உடம்பையும் நாம் கட்டுக்குள் கொண்டுவர முடியும். 'எல்லையற்ற ஆற்றலின் கதவை இது நமக்குத் திறந்து விடுகிறது. உதாரணமாக ஒருவன் ஒருவேளை பிராணனை முற்றிலுமாக அறிந்து அதைக் கட்டுப்படுத்தி விட்டால் உலகில் எந்த சக்திதான் அவனுடையது ஆகாது?[2] என்று கேட்கிறார் சுவாமி விவேகானந்தர்.

இவ்வாறு தெளிவு பெற்ற மனத்தின் ஆற்றல்பற்றி அடுத்த மந்திரம் கூறுகிறது.

**यं यं लोकं मनसा संविभाति**
**विशुद्धसत्त्वः कामयते यांश्च कामान् ।**
**तं तं लोकं जयते तांश्च कामां -**
**स्तस्माद् आत्मज्ञं ह्यर्चयेद् भूतिकामः ॥ १० ॥**

யம் யம் லோகம் மனஸா ஸம்விபாதி
விசுத்தஸத்வ: காமயதே யாம்ச்ச காமான் ।
தம் தம் லோகம் ஜயதே தாம்ச்ச காமான்ஸ்-
தஸ்மாத் ஆத்மஜ்ஞம் ஹ்யர்ச்சயேத் பூதிகாம: ॥ 10 ॥

விசுத்த ஸத்வ: – தூய்மையும் நுண்மையும் பெற்ற; மனஸா – மனத்தால்; யம் யம் – எந்தெந்த; லோகம் – உலகங்

1. ஞான தீபம், 2.434.
2. ஞான தீபம், 2.32.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



களை; ஸம்விபாதி – நினைக்கிறானோ; யாம் – எந்த; காமான் ச – பொருட்களை; காமயதே – விரும்புகிறானோ; தம் தம் – அந்தந்த; லோகம் – உலகங்களை; தாம் – அந்த; காமான் ச – பொருட்களை; ஜயதே – வெல்கிறான்; தஸ்மாத் –அதனால்; பூதிகாம: – செல்வத்தை விரும்புபவன்; ஆத்மஜ்ஞம் – ஆன்மஞானியை; அர்ச்சயேத் ஹி – போற்ற வேண்டும்.

**10. தூய்மையும் நுண்மையும் பெற்ற மனத்தால் ஒருவன் எந்தெந்த உலகங்களை நினைக்கிறானோ அந்தந்த உலகங்களை அடைகிறான்; என்ன பொருட்களை விரும்புகிறானோ அந்தப் பொருட்களைப் பெறுகிறான். அதனால் செல்வத்தை விரும்புபவன் ஆன்மஞானியைப் போற்ற வேண்டும்.**

மனத்தால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை— சாதாரண மனத்தால் அல்ல, தூய்மையும் நுண்மையும் பெற்ற மனத்தால். அத்தகைய மனத்தைப் பெறுவதற்கு ஓர் எளிய வழி இங்கே கூறப்படுகிறது— ஆன்மாவை உணர்ந்த மகான்களைப் போற்றுதல். மகான்களின் அருளால் சாதிக்க இயலாதது எதுவும் இல்லை.

இதி முண்டகோபநிஷதி த்ருதீய முண்டகே ப்ரதம: கண்ட: ॥

## 3:1
## நிழலும் நிஜமும்

**சுருக்கம்**

1. நம்முள் இருவர் (இரு பறவைகள்–உவமை): 1–2
2. ஆன்ம தரிசனம்: 3–9
   - விளைவு: 3–4
   - சாதனை: 5–6
   - எங்கே வாய்க்கிறது?: 7
   - மூன்று நிபந்தனைகள்: 8
   - கருவி மனம்: 9–10

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



நதிகள் தங்கள் பெயரையும் வடிவத்தையும்
இழந்து கடலில் கலக்கின்றன. உண்மையை உணர்ந்தவன்
அதுபோல் பரம்பொருளை அடைகிறான். -8

CC-0. In Public Domain. Cuddalore Collection, TN.

Digitization by eGangotri-South Center

# 3:2 இறையனுபூதி

சாதாரண அறிவு உலக இன்பதுன்பங்களில் ஆழ்த்தி மீண்டும்மீண்டும் பிறவிக்கே வழிவகுக்கும். உயர் அறிவு இறை நெறியைக் காட்டும்; இறைவனைத் தரும்(#1:1). எனவே சாதாரண அறிவை விட்டு உயர் அறிவை நாட வேண்டும். உலகை விட்டு இறைவனை நாட வேண்டும். இதுவே துறவு. இதற்கு தவம், நல்லொழுக்கம், ஆராய்ச்சி, பற்றின்மை, தெளிவான நோக்கம், குருவை நாடுதல் ஆகியவை முதற்படிகள். (#1:2)

நாம் தெய்வீகமானவர்கள் என்று ஆழ்ந்து சிந்திப்பது பற்றி #2:1-லும், இறையனுபூதிக்கு ஆன்ம அனுபூதி அவசியம் என்பதுபற்றி #2:2-லும் கண்டோம்.

இந்த இறுதி அத்தியாயத்தில் இறையனுபூதி என்னும் இறுதி நிலைபற்றி காண்கிறோம்.

## முதற்படி: ஆன்ம ஞானம்

எங்கும் நிறைந்த இறைவனே நம்மில் ஆன்மாவாக விளங்குகிறார் என்று ஏற்கனவே (#2:2.7) கண்டோம். அந்த ஆன்ம தரிசனம் முதற்படி. இதன்மூலம் ஒருவன் தன்னை உடம்பிற்கு அப்பாற்பட்டவனாக, மனத்திற்கு அப்பாற் பட்டவனாக, ஓர் ஒளிப்பொருளாக உணர்கிறான். இவனே இறைவனைத் தேடத் தக்கவன், அனுபூதியில் அறியத் தக்கவன், அவரை அடையத் தக்கவன்.


CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



**स वेदैतत्परमं ब्रह्म धाम यत्र विश्वं निहितं भाति शुभ्रम् ।**
**उपासते पुरुषं ये ह्यकामास्ते शुक्रमेतदतिवर्तन्ति धीराः ॥ १ ॥**

ஸ வேதைதத் பரமம் ப்ரஹ்ம தாம
யத்ர விச்வம் நிஹிதம் பாதி சுப்ரம் ।
உபாஸதே புருஷம் யே ஹ்யகாமா-
ஸ்தே சுக்ரமேதத் அதிவர்த்தந்தி தீராः ॥ 1 ॥

*யத்ர – எங்கே; விச்வம் – பிரபஞ்சம்; நிஹிதம் – நிலை பெற்றுள்ளதோ; சுப்ரம் – புனித ஒளியுடன்; பாதி – பிரகாசிக் கின்ற; ஏதத் – இந்த; பரமம் – மேலான; தாம – இருப்பிட மான; ப்ரஹ்ம – இறைவனை; ஸः – அவன்; வேத – அறி கிறான்; யே – யார்; தீராः – விழிப்புணர்வு பெற்ற; அகாமாः – ஆசையற்றவர்கள்; புருஷம் – இறைவனை; உபாஸதே – வழிபடுகிறார்கள்; தே – அவர்கள்; ஏதத் – இந்த; சுக்ரம் – பிறவிக்கான விதையை; அதிவர்த்தந்தி – கடக்கிறார்கள்.*

**1. யாரிடம் பிரபஞ்சம் நிலைபெற்றுள்ளதோ, மேலான இருப்பிடமும், புனித ஒளியுடன் பிரகாசிப் பவருமான அந்த இறைவனை ஆன்ம ஞானிகள் அறி கின்றனர். ஆசையற்ற, விழிப்புணர்வு பெற்ற அவர்கள் அவரை வழிபட்டு, பிறவிகளற்ற நிலையை அடைகிறார்கள்.**

## ஆன்ம ஞானம் ஏன் அவசியம்?

இறைவனை நாடுபவனுக்கு வேறு ஆசைகள் கூடாது. ஆனால் ஆசைகளை விடுவது அவ்வளவு சுலபம் அல்ல. ஒவ்வோர் ஆசைகளாக விடுவது சாத்தியமும் அல்ல. இங்கே ஆன்ம தரிசனம் ஆசைகளை ஒழிப்பதாக கூறப்படுகிறது. ஆன்ம உணர்வு பெற்றவன், தன்னை ஆன்மாவாக உணர்ந்தவனின் மற்ற ஆசைகள் அனைத்தும் விலகிவிடு கின்றன. அவன் இறைவனை நாடுவதற்குத் தகுதி பெறுகிறான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



**कामान्यः कामयते मन्यमानः स कामभिर्जायते तत्र तत्र ।**
**पर्याप्तकामस्य कृतात्मनस्तु इहैव सर्वे प्रविलीयन्ति कामाः ॥**

காமான்ய: காமயதே மன்யமான:
ஸ காமபிர்ஜாயதே தத்ர தத்ர ।
பர்யாப்த காமஸ்ய க்ருதாத்மனஸ்து
இஹைவ ஸர்வே ப்ரவிலீயந்தி காமா: ॥ 2 ॥

*ய: – யார்; காமான் – ஆசைகளை; காமயதே – நாடுகிறானோ; மன்யமான: – சிந்திப்பவன்; ஸ: – அவன்; காமபி: – ஆசைகள் காரணமாக; தத்ர தத்ர – இங்கும் அங்கும்; ஜாயதே – பிறக்கிறான்; பர்யாப்த காமஸ்ய – ஆசைகள் நிறைவேறப்பெற்ற; க்ருதாத்மன: து – ஆன்ம ஞானிக்கோ; ஸர்வே – எல்லா; காமா: – ஆசைகளும்; இஹ ஏவ – இங்கேயே; ப்ரவிலீயந்தி – ஒடுங்குகின்றன.*

**2. யார் ஆசைவசப்பட்டு, ஆசைக்குரிய பொருட்களைப்பற்றி சிந்திக்கிறானோ அவன் அந்த ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இங்கும் அங்கும் பிறக்கிறான். ஆசைகள் நிறைவேறப் பெற்ற ஆன்ம ஞானிக்கோ எல்லா ஆசைகளும் இங்கேயே ஒடுங்கிவிடுகின்றன.**

### ◈ ஆன்ம ஞானத்திற்கான நிபந்தனைகள் (3-4) ◈

இறையனுபூதிக்கு முதற்படி ஆன்ம ஞானம். அதைப் பெறுவதற்கான சில நிபந்தனைகளை 3–4 மந்திரங்கள் கூறுகின்றன.

#### மன ஏக்கம்

**नायमात्मा प्रवचनेन लभ्यो न मेधया न बहुना श्रुतेन ।**
**यमेवैष वृणुते तेन लभ्यस्तस्यैष आत्मा विवृणुते तनुं स्वाम् ॥**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



நாயமாத்மா ப்ரவசனேன லப்யோ
ந மேதயா ந பஹுனா ச்ருதேன ।
யமேவைஷ வ்ருணுதே தேன லப்ய-
ஸ்தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தனும் ஸ்வாம் ॥ 3 ॥

அயம் – இந்த; ஆத்மா – ஆன்மா; ப்ரவசனேன – சொற்பொழிவுகளால்; ந லப்யः – அடையப்படுவதில்லை; ந மேதயா – புலமையால் அல்ல; பஹுனா ச்ருதேன – எவ்வளவோ கேட்பதாலும் அல்ல; யம் ஏவ ஏஷ – யார் அதற்காகவே; வ்ருணுதே – மன ஏக்கம் கொள்கிறானோ; தேன – அவனால்; லப்யः – அடையப்படுகிறது; தஸ்ய – அவனுக்கு; ஸ்வாம் – தனது; தனூம் – சொந்த இயல்பை; விவ்ருணுதே – வெளிப்படுத்துகிறது.

**3. சொற்பொழிவுகளாலோ, புலமையாலோ, பலவற்றைக் கேட்பதாலோ இந்த ஆன்மாவை அடைய இயலாது. யார் அதை அடைவதற்காக மன ஏக்கம் கொள்கிறானோ அவன் மட்டுமே அதனை அடைகிறான். அந்த ஆன்மா அவனுக்குத் தனது சொந்த இயல்பை வெளிப்படுத்துகிறது.**

மன ஏக்கம் என்பதை ஸ்ரீராமகிருஷ்ணர் ஓர் ஆன்மீக சாதனையாகக் கூறுவதுடன், இறைக் காட்சிக்கு முந்தின நிலையாகவும் வைக்கிறார்: 'ஆழ்ந்த மன ஏக்கத்துடன் அழுதால் அவரைக் காண முடியும்.... மன ஏக்கம் வந்து விட்டாலே அருணோதயம் ஆகிவிட்டது. அதன்பிறகு கதிரவன் தன்னைக் காட்டியருள்வான். அதுபோல் மன ஏக்கத்திற்குப் பிறகு இறைக்காட்சி வருகிறது.[1]

தீவிரமான தேவை ஏற்படும்போதுதான் மன ஏக்கம் வருகிறது. உள்ளார்ந்த ஏக்கமின்றி, சொற்பொழிவுகளைச் செய்வதாலோ கேட்பதாலோ நூல்களைப் படிப்பதாலோ ஆன்மீகத்தில் எதையும் அடைய இயலாது. உயர்

---

1. அமுத மொழிகள், 1.13.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



உண்மையை அடைய வேண்டும், இறைவனைக் காண வேண்டும் என்பதெல்லாம் உணவு, உடை போன்ற நமது அன்றாடத் தேவைகளுள் ஒன்றாக வேண்டும். அப்போது மட்டுமே அதற்காக நாம் ஏக்கம் கொள்வோம். ஏக்கம் கொள்ளும்போதுதான் வழி பிறக்கும், உண்மை தெரியும்.

வலிமை

**नायमात्मा बलहीनेन लभ्यो न च प्रमादात्तपसो वाऽप्यलिङ्गात् ।**
**एतैरुपायैर्यतते यस्तु विद्वांस्तस्यैष आत्मा विशते ब्रह्मधाम ॥ ४॥**

நாயமாத்மா பலஹீனேன லப்யோ
ந ச ப்ரமாதாத் தபஸோ வாऽப்யலிங்காத் ।
ஏதைருபாயைர்யததே யஸ்து வித்வாம்-
ஸ்தஸ்யைஷ ஆத்மா விசதே ப்ரஹ்மதாம ॥ 4 ॥

அயம் – இந்த; ஆத்மா – ஆன்மா; பலஹீனேன – வலிமையற்றவனால்; ந லப்யः – அடையப்படுவதில்லை; ப்ரமாதாத் – கவனமின்மையால்; அலிங்காத் – சின்னங்கள் இல்லாத; தபसः – தவங்களால்; வா அபி ந – அடையப் படுவதில்லை; யः து – எந்த; வித்வான் – மகான்; ஏதைः – இந்த; உபாயைः – வழிகளால்; யததே – முயற்சிக்கிறானோ; தஸ்ய – அவனுக்கு; ஏஷः – இந்த; ஆத்மா – ஆன்மா; ப்ரஹ்ம தாம – இறைவனின் இருப்பிடம்; விசதே – அடைகிறான்.

**4. இந்த ஆன்மா வலிமையற்றவனால் அடையப் படுவதில்லை; கவனமின்மையாலோ, சின்னங்கள் இல்லாத தவங்களாலோ அடையப்படுவதில்லை. எந்த மகான் [மன ஏக்கத்துடனும், உடல் மற்றும் மன வலிமைகளால் பிறந்த உறுதியுடனும்] முயற்சிக் கிறானோ அவன் இறைவனின் இருப்பிடமான இந்த ஆன்மாவை அடைகிறான்.**

இங்கே மூன்று கருத்துக்கள் கூறப்படுகின்றன.


CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



1. ஆன்மா வலிமையற்றவனால் அடையப்படுவ தில்லை. உடல் வலிமை, மன வலிமை இரண்டும் இங்கே கருத்தில் கொள்ளப்படுகின்றன. சுவாமி விவேகானந்தர் விளக்குகிறார்:

'வலிமையான, தீரம் மிக்கவர்களே இதற்கேற்ற மாணவர்கள். பலமற்ற நோஞ்சான்களால் என்ன சாதிக்க முடியும்? யோகங்களில் ஏதேனும் ஒன்றைப் பயிலும்போது, உடலிலும் உள்ளத்திலும் மறைந்து கிடக்கும் ஆற்றல் சிறிது விழித்தெழுந்தால் போதும், அதைத் தாங்க முடியாமல் இவர்கள் சிதறிப் போவார்கள். ''இளமையும் ஆரோக்கியமும் வலிமையும்''[1] உடையவர்களே வெற்றி பெற முடியும். எனவே உடல் வலிமை மிகவும் இன்றியமையாதது. பொறி களை அடக்கி ஆளும்போது ஏற்படக்கூடிய அதிர்ச்சிகளை ஆற்றல் படைத்த உடம்புகளினால் மட்டுமே தாங்க முடியும்.

'மன வலிமை அற்றவர்களாலும் ஆன்மாவை அடைய முடியாது.... உற்சாகமாக இருக்க வேண்டும். உற்சாகமானவர் களே முயற்சி உடையவர்கள். உறுதியான உள்ளம் படைத்த வர்களே ஆயிரக்கணக்கான துன்பங்கள் முளைத்தாலும் அவற்றை வெட்டிச் சாய்த்து முன்னேறுபவர்கள். மிகமிகக் கடினமான இந்தக் காரியம், மாயையின் வலையிலிருந்து வெளியேறும் இந்தச் செயல், அபாரமான மன உறுதி கொண்டவர்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்ட பணியாகும்.[2]

'உடம்பிலும் மனத்திலும் வலிமை இல்லாமல் போனால் ஆன்மாவை அடைய முடியாது. நல்ல சத்தான உணவைச் சாப்பிட்டு முதலில் உடம்பை வலிமைப்படுத்த வேண்டும். அதன் பிறகே மனம் வலிமை பெறும். மனம் என்பது உடம்பின் நுட்பமான பகுதிதான். மனத்திலும் வாக்கிலும் மகத்தான வலிமையை ஏற்றிக்கொள்.[3]

---

1. ஆசிஷ்ட்டோ த்ருடிஷ்ட்டோ பலிஷ்ட்ட: |
—தைத்திரீய உபநிஷதம், 2:8.1.
2. ஞான தீபம், 1.452.
3. ஞான தீபம், 6.111–112.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



'உங்கள் உடம்பை நினைத்து அது நலமாக, உறுதியாக இருப்பதாக எண்ணுங்கள். உடல்தான் நம்மிடம் உள்ள சிறந்த கருவி. அது வஜ்ரம்போல் உறுதியாக இருப்பதாகவும், அதன் துணையுடன் நீங்கள் வாழ்க்கைக் கடலையே தாண்டி விடலாம் என்றும் எண்ணுங்கள். முக்தி என்பது பலவீனர் களுக்குக் கிடையாது. எல்லா பலவீனத்தையும் தூக்கி எறி யுங்கள். உங்கள் உடம்பு உறுதியாக இருப்பதாக அதனிடம் சொல்லுங்கள். உங்கள் மனம் உறுதியாக இருப்பதாக அதனிடம் சொல்லுங்கள். உங்களிடமே எல்லையில்லா நம்பிக்கை, முழு நம்பிக்கை வையுங்கள்.[1]

**2. கவனமின்மை:** கவனமின்மையால் ஆன்மீக வாழ்க்கையை என்றல்ல, வாழ்க்கையையே இழந்தோர் பலர். எனவே ஒவ்வொரு படியிலும் கவனமும் எச்சரிக்கை யும் தேவை. படிகளின் உச்சியில் நிற்கின்ற ஒருவன் ஒரு கணம் கவனத்தைச் சிதறவிட்டதால் கையிலிருந்து தவறி வீழ்ந்த பந்தினைக் காட்டி இதனை விளக்குகிறார் ஸ்ரீசங்கரர்.[2] கையிலிருந்து வீழ்ந்த பந்து அங்கேயே கிடப்பதில்லை. வீழ்ந்த வேகத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு, படிகள்தோறும் உருண்டு, படிப்படியாக வீழ்ந்து எங்கேயோ கண்ணுக்கெட்டா தொலைவில் போய்விடுகிறது. வாழ்க்கை யில் தவறான அடி எடுத்து வைக்கும்போது, அது பெரிதாகத் தெரிவதில்லை. ஒருவேளை மனம் ஒரு சமிக்ஞை தரும், ஆனால் அதைப் பொருட்படுத்தாமல் விட்டுவிடுவோம். கடைசியில், மீள முடியாத அளவிற்குத் தவறுகளில் புதை யுண்ட பிறகே புரிந்து கொள்வோம். எனவே கவன மின்மைக்கு ஒருபோதும் இடம் தரலாகாது.

**3. சின்னங்கள் இல்லாத தவம்:** 'சின்னங்கள் இல்லாத தவங்களால் ஆன்மா அடையப்படுவதில்லை' என்று உறுதியான மொழியில் உபநிஷதம் கூறுவதைக் கவனத்தில்

---

1. ஞான தீபம், 2.30.
2. ப்ரச்யுத கேலிகந்துக: ஸோபான பங்க்தௌ பதிதோ யதா ததா।
—விவேக சூடாமணி, 325.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



கொள்ள வேண்டும். திருநீறு, திருமண், குங்குமம், சந்தனம், ருத்ராட்சமாலை போன்றவை மட்டுமல்ல; விரதங்கள், சடங்குகள் போன்ற அனைத்தும் இன்றியமையாதவை. சின்னங்கள் எப்போதும் நமக்கு நமது லட்சியத்தை நினை வூட்ட வல்லவை. 'ருத்ராட்சமும் திருநீறும் அணிந்துள்ள நான் இப்படியொரு தீய சிந்தனைக்கு மனத்தில் இடம் தரலாமா?' என்ற கேள்வி எழும்போது, அது நாம் தவறான அடி எடுத்து வைப்பதிலிருந்து நம்மைப் பேரளவிற்குக் காக்கிறது. கணந்தோறும் கவனமாக இருப்பதில் சின்னங்கள் இவ்வாறு துணை செய்கின்றன.

### ஆன்ம ஞானி இறைவனை அடைகிறான்: 5–6

ஆன்மீக வாழ்வின் முக்கிய இறுதிப் படிகளில் ஒன்று இங்கே கூறப்படுகிறது. முதலில் புத்தியின் விழிப்பு, தொடர்ந்து ஆன்ம தரிசனம். மூன்றாவதாக இறைக் காட்சி. தொடரும் இரண்டு மந்திரங்கள் அதுபற்றி கூறுகின்றன.

**संप्राप्यैनमृषयो ज्ञानतृप्ताः कृतात्मानो वीतरागाः प्रशान्ताः ।**
**ते सर्वगं सर्वतः प्राप्य धीरा युक्तात्मानः सर्वमेवाविशन्ति ॥**

ஸம்ப்ராப்யைனம் ரிஷயோ ஜ்ஞானத்ருப்தா:
க்ருதாத்மானோ வீதராகா: ப்ரசாந்தா: ।
தே ஸர்வகம் ஸர்வத: ப்ராப்ய தீரா
யுக்தாத்மான: ஸர்வமேவாவிசந்தி ॥ 5 ॥

*ரிஷய:* – முனிவர்கள்; *ஏனம்* – இந்த ஆன்ம ஞானத்தை; *ஸம்ப்ராப்ய* – அடைந்து; *ஜ்ஞான த்ருப்தா:* – ஆன்ம ஞானத்தில் திருப்தி பெற்றவர்களாக; *க்ருதாத்மான:* – ஆன்மாவில் நிலைபெற்றவர்களாக; *வீதராகா:* – விருப்பு வெறுப்பு அற்றவர்களாக; *ப்ரசாந்தா:* – அமைதியில் நிலைபெற்றவர் களாக; *தே* – அவர்கள்; *தீரா:* – விழிப்புணர்வு பெற்ற வர்கள்; *யுக்தாத்மான:* – தியானத்தில் நிலைபெற்றவர்கள்; *ஸர்வகம்* – எங்கும் நிறைந்த; *ஸர்வத:* – எல்லாமான;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



*ப்ராப்ய – அடைந்து; ஸர்வம் ஏவ – எல்லாம் ஆனதிலேயே; ஆவிசந்தி – புகுகிறார்கள்.*

**5. இந்த ஆன்ம ஞானத்தைப் பெற்ற முனிவர்கள் ஆன்ம ஞானத்தில் திருப்தி பெற்றவர்களாக, ஆன்மாவில் நிலைபெற்றவர்களாக, விருப்பு வெறுப்பு அற்றவர்களாக, அமைதியில் நிலைபெற்றவர்களாக ஆகிறார்கள். விழிப்புணர்வு பெற்ற, தியானத்தில் நிலைபெற்ற அவர்கள் எங்கும் நிறைந்த, எல்லாமான இறைவனை அடைந்து அவரிலேயே நிலைபெறுகிறார்கள்.**

**वेदान्तविज्ञान सुनिश्चितार्थाः संन्यासयोगाद्यतयः शुद्धसत्त्वाः ।**
**ते ब्रह्मलोकेषु परान्तकाले परामृताः परिमुच्यन्ति सर्वे ॥ ६ ॥**

வேதாந்த விஜ்ஞான ஸுநிச்சிதார்த்தா:
ஸன்யாஸ யோகாத் யதய: சுத்தஸத்வா: ।
தே ப்ரஹ்மலோகேஷு பராந்தகாலே
பராம்ருதா: பரிமுச்யந்தி ஸர்வே ॥ 6 ॥

*வேதாந்த விஜ்ஞான – வேதாந்தத்தின் உண்மைப் பொருளை; ஸுநிச்சிதார்த்தா: – நன்றாக அறிந்தவர்கள்; ஸன்யாஸ யோகாத் – துறவு வாழ்க்கையால்; சுத்த ஸத்வா: – மனத் தூய்மை பெற்றவர்கள்; யதய: – புலக் கட்டுப்பாடு உடையவர்கள்; தே – அவர்கள்; ஸர்வே – எல்லோரும்; பராம்ருதா: – மரணமற்ற நிலையை அடைந்து; பராந்தகாலே – உடல் வீழ்ந்தபிறகு; பரிமுச்யந்தி – முற்றிலுமாக விடுபட்டு; ப்ரஹ்ம லோகேஷு – இறைநிலையில்.*

**6. வேதாந்தத்தின் உண்மைப் பொருளை நன்றாக அறிந்த, துறவு வாழ்க்கையால் மனம் தூய்மை பெற்ற, புலன்களை வசப்படுத்திய அனைவரும் மரணமற்ற நிலையை அடைகிறார்கள். உடல் வீழ்ந்த பிறகு முற்றிலுமாக விடுபட்டு இறைநிலையை அடைகிறார்கள்.**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



மரணமற்ற பெருநிலையை அடைவதற்கு இங்கே மூன்று நிபந்தனைகள் கூறப்படுகின்றன—

**1. வேதாந்தத்தின் உண்மைப் பொருளை நன்றாக அறிந்திருத்தல்:** 'தத் த்வம் அஸி' என்பது வேதாந்தத்தின் மகாவாக்கியங்களுள்[1] ஒன்று. 'அது நீ ஆகிறாய்' என்பது இதன்பொருள். உடம்பையும் மனத்தையும் கடந்த ஆன்மாவே மனிதன். உடம்பும் மனமும் மாறுபவை, அழியக் கூடியவை. ஆன்மா அழியாதது. அதுவே உண்மை மனிதன். அனுபூதியில் இந்த உண்மை அறிந்திருக்கப்பட வேண்டும்.

**2. துறவு வாழ்க்கையால் மனம் தூய்மை பெற்றிருத்தல்:** தூய மனம் வேண்டும். தூய மனம் என்றால் ஆசைகள் அற்ற மனம். அது துறவினால், அதாவது தியாகத்தால் அடையப்படுகிறது.

**3. புலன் கட்டுப்பட்டிருத்தல்:** புலன்கள் புறப் பொருட்களை நோக்கி அலைபாயாமல் ஆன்மாவில் நிலைபெற்றனவாக இருக்க வேண்டும்.

இந்த மூன்று நிபந்தனைகளும் நிறைவேறும்போது ஒருவன் மரணமற்ற நிலையை அடைகிறான். அதாவது, தான் மரணமற்ற ஒருவன் என்பதை உணர்கிறான். ஆனாலும்

---

1. நான்கு வேதங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு சொற்றொடர்கள் 'மகா வாக்கியங்கள்' என்று குறிப்பிடப்படுகின்றன. மிகவும் புனிதமானவையாகக் கருதப்படுகின்ற இவை நமக்கும் இறைவனுக்கும் உள்ள அறுதிநிலைத் தொடர்பை விளக்குபவையாக உள்ளன

i. ப்ரஜ்ஞானம் ப்ரஹ்ம। (பிரம்மம் பேருணர்வுப்பொருள்)
—ரிக்வேதம்

ii. அஹம் ப்ரஹ்மாஸ்மி (நான் பிரம்மமாக இருக்கிறேன்)
—யஜுர்வேதம்

iii. தத் த்வம் அஸி (அது நீ ஆகிறாய்) —சாம வேதம்

iv. அயமாத்மா ப்ரஹ்ம (இந்த ஆன்மா பிரம்மம்)
—அதர்வண வேதம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



அவன் தொடர்ந்து வாழ வேண்டும். ஏனெனில் பிராரப்த கர்மம், அதாவது எந்த வினைப்பயனை அனுபவிப்பதற்காக அவன் பிறந்தானோ அந்தக் கர்மம் தீரும்வரை அவன் வாழ்ந்தேயாக வேண்டும். அந்த வாழ்க்கை பிறருக்குப் பயன் தருவதாக அமைகிறது. அவன் அடைய வேண்டியது எதுவும் இல்லை. ஆனால் அவனது வாழ்வு மற்றவர்களும் அந்த நிலையை அடைவதற்கு ஒரு தூண்டுகோலாக அமைகிறது. சுவாமி விவேகானந்தர் தமது 'துறவியின் பாடலில்' இவ்வாறு கூறுகிறார்—

*இன்பம் துன்பம் என்கின்ற இருநிலை கடந்த இடம் அடைந்து*
*எங்கும் போய் அன்னோர் கதிபெற மாயை இருள் தீர்ப்பாய்.*
*கருமம் அதனின் பிடிப்பெல்லாம் கழியும் மட்டும் நிதம் முயன்று*
*நிரந்தரமாகத் தளை நீக்கி நிலவச் செய்வாய் ஆன்மாவை.*
*என்றும் இனிமேல் பிறப்பில்லை.*[1]

துறவினாலும் ஆன்மீக சாதனைகளாலும் ஒருவன் தான் ஆன்மா என்பதை உணர்ந்து, மரணமற்ற நிலையை அடைகிறான். பிறகு, கர்மம் தீரும்வரை இந்த உலகில் வாழ்ந்து உடல் வீழும்போது இறைநிலையை அடைகிறான்.

## ஆன்ம ஞானியின் உடல் வீழும்போது என்ன நடக்கிறது?:7–8

உடம்பு என்பது உருவாகியது. எனவே அது அழிந்தே தீரும். அதையே நாம் மரணம் என்கிறோம். சாதாரண மனிதனும் மரணத்திற்கு உள்ளாகிறான், ஆன்ம ஞானியும் மரணத்திற்கு உள்ளாகிறான். இருவரின் மரணத்தில் ஏதாவது வேறுபாடு உண்டா? உண்டு.

சாதாரண மனிதன் இறக்கும்போது தூல உடம்பு மட்டுமே அழிகிறது. மனம், பிராணன் போன்றவை அடங்கிய நுண்ணுடம்பு பயணத்தைத் தொடர்கிறது. ஆனால்

1. ஞான தீபம், 9.25–26.

CC-0. In Public Domain. Cuddalore Collection, TN.

Digitization by eGangotri-South Center



ஆன்ம ஞானி மரணமடையும்போது தூல உடம்பு மட்டுமின்றி நுண்ணுடம்பும், தான் எவற்றால் ஆக்கப் பட்டதோ அந்தப் பகுதிகளாகப் பிரிந்து கரைந்துவிடு கிறது. அதுபற்றி இந்த 2 மந்திரங்கள் கூறுகின்றன.

**गताः कलाः पञ्चदश प्रतिष्ठा देवाश्च सर्वे प्रतिदेवतासु ।**
**कर्माणि विज्ञानमयश्च आत्मा परेऽव्यये सर्व एकीभवन्ति ॥ ७ ॥**

கதாः கலாः பஞ்சதச ப்ரதிஷ்ட்டா
தேவாச்ச ஸர்வே ப்ரதிதேவதாஸு ।
கர்மாணி விஜ்ஞானமயச்ச ஆத்மா
பரேऽவ்யயே ஸர்வ ஏகீ பவந்தி ॥ 7 ॥

பஞ்சதச – பதினைந்து; கலாः – கலைகள்; ப்ரதிஷ்ட்டாः – இருப்பிடத்தை; கதாः – அடைகின்றன; ஸர்வே – எல்லா; தேவாः ச – அதிஷ்டான தேவதைகளும்; ப்ரதிதேவதாஸு – தங்கள் தேவர்களை; கர்மாணி – வினைப்பயன்கள்; விஜ்ஞானமயः – உணர்வு வடிவான; ஆத்மா – ஆன்மா; அவ்யயே பரே – அழிவற்ற மேலான பொருளில்; ஸர்வே – எல்லாம்; ஏகீ பவந்தி – ஒன்றாக ஆகின்றன.

**7. பதினைந்து கலைகளும் அவற்றின் இருப் பிடத்தை அடைகின்றன. அதிஷ்டான தேவதைகள் தங்கள் தேவர்களை அடைகிறார்கள். வினைப்பயன் களும், உணர்வு வடிவான ஆன்மாவும் அழிவற்ற மேலான பொருளை அடைந்து எல்லாம் ஒன்றா கின்றன.**

**கலைகள்:** எவற்றால் உடம்பும் மனமும் ஆக்கப்பட்டுள் ளதோ அவையே கலைகள். அவை பதினாறு— பிராணன், சிரத்தை, வெளி, காற்று, நெருப்பு, நீர், பூமி, புலன்கள், மனம், உணவு, வலிமை, புலனடக்கம், மந்திரங்கள், சடங்குகள், உலகங்கள், உலகிலுள்ள பெயர்கள்.[1]

---

1. பிரச்ன உபநிஷதம், 6:4.1.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



இவற்றில் தனிநபர் சம்பந்தப்பட்டவையும் உள்ளன, பிரபஞ்ச நிலையில் உள்ளவையும் அடங்குகின்றன. பிரபஞ்ச நிலையிலுள்ள உலகங்கள், பெயர்கள் போன்ற வற்றின் அம்சம் நம்மில் உள்ளது. மரண வேளையில் இந்தக் கலைகள் அவற்றின் பிரபஞ்ச நிலையை அடை கின்றன. தனிநபர் பிராணன் பிரபஞ்சப் பிராணனை அடைகிறது, தனிநபரின் மனம் பிரபஞ்ச மனத்தில் கரைகிறது. இவ்வாறே ஒவ்வொன்றும். அனைத்தும் தனிநபர் தன்மையை இழந்து பிரபஞ்சப் பரிமாணத்தில் ஒடுங்கு கின்றன.

**தேவதைகளும் தேவர்களும்:** காண்கின்ற புறவுலகை இயக்குகின்ற தூல சக்திகள் ஆயினும் சரி, காணாத அகவுலகை இயக்குகின்ற சூட்சும சக்திகள் ஆயினும் சரி ஒவ்வொன்றையும் ஒரு தெய்வமாகக் கண்டனர் உபநிஷத ரிஷிகள். இந்த தெய்வங்கள் தனிநபர் நிலையில் நமது உடம்பு, மனம் ஆகியவற்றை இயக்கும்போது அபிமானி தேவதை அல்லது அதிஷ்டான தேவதை என்று வழங்கப்படுகின்றனர். பிரபஞ்ச நிலையில் பொதுவாக தேவர்கள் எனப்பட்டனர். உதாரணமாக சூரியனுக்கும் கண்ணுக்கும் அதிஷ்டான தேவதை அர்யமான், பகலுக்கும் பிராணனுக்கும் அதிஷ்டான தேவதை மித்ரன். ஒருவன் பிரம்ம ஞானம் பெறும்போது அதிஷ்டான தேவதைகள் பிரபஞ்ச நிலையிலுள்ள தங்கள் தேவர்களுடன் கலந்துவிடு கின்றனர்.

**வினைப்பயன்கள்:** நாம் செய்கின்ற செயல்கள் அனைத்தும் ஒரு பலனை உண்டாக்குகின்றன. இந்தப் பலன் ஒரு பதிவாக ஆழ்மனத்தில் சேமிக்கப்படுகிறது. இதுவே சம்ஸ்காரம். இவற்றின் தொகுதிக்கேற்ப, அதாவது வினைப்பயன்களுக்கு ஏற்ப வாழ்க்கை அமைகிறது. இந்த வினைப்பயன் ஒரு வாழ்க்கையில் ஏற்பட்டது மட்டுமல்ல; எத்தனையோ பிறவிகளில் நாம் செய்த வினைகளின் பலன்கள் மனத்தில் உள்ளன. இறைவனை அடைந்த வனின் அனைத்து கர்மங்களும், அதாவது அனைத்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



வினைப்பயன்களும் அழிகின்றன; இனி பிறவியே இல்லாமல் போகிறது.

**ஆன்மா-இறைவன்:** இறைவனே நம்மில் ஆன்மாவாக விளங்குகிறார் என்பதை ஏற்கனவே (#2:2.7) கண்டோம். இறையனுபூதியில் இந்தப் பிரிவு விலகிவிடுகிறது. ஆன்மா-இறைவன் என்ற வேறுபாடு விலகி அனைத்தும் ஒன்றாகிறது.

இதனை ஓர் உதாரணத்தின்மூலம் அடுத்த மந்திரம் விளக்குகிறது.

**यथा नद्यः स्यन्दमानाः समुद्रे ऽस्तं गच्छन्ति नामरूपे विहाय ।**
**तथा विद्वान्नामरूपाद्विमुक्तः परात्परं पुरुषमुपैति दिव्यम् ॥ ८॥**

यதா நத்யः ஸ்யந்தமானாः ஸமுத்ரே-
ऽஸ்தம் கச்சந்தி நாமரூபே விஹாய ।
ததா வித்வான் நாமரூபாத் விமுக்தः
பராத்பரம் புருஷமுபைதி திவ்யம் ॥ 8 ॥

*ஸ்யந்தமானாः* – பெருகி ஓடுகின்ற; *நத்யः* – நதிகள்; *யதா* – எவ்வாறு; *நாமரூபே* – பெயர் உருவத்தை; *விஹாய* – விட்டு; *ஸமுத்ரே* – கடலில்; *அஸ்தம் கச்சந்தி* – கலக்கின்றனவோ; *ததா* – அவ்வாறு; *வித்வான்* – உண்மையை உணர்ந்தவன்; *நாமரூபாத்* – பெயர் மற்றும் உருவத்திலிருந்து; *விமுக்தः* – விடுபட்டு; *பராத்பரம்* – உயர்ந்தவற்றுள் உயர்ந்த; *திவ்யம்* – ஒளிவடிவான; *புருஷம்* – பரம்பொருளை; *உபைதி* – அடைகிறான்.

**8. பெருகி ஓடுகின்ற நதிகள் தங்கள் பெயரையும் வடிவத்தையும் இழந்து கடலில் கலக்கின்றன. உண்மையை உணர்ந்தவன், அதுபோல், தனது பெயர் மற்றும் உருவத்திலிருந்து விடுபட்டு, உயர்ந்தவற்றுள் உயர்ந்தவரும் ஒளிவடிவானவரும் ஆன பரம்பொருளை அடைகிறான்.**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



இறையனுபூதியின் விளைவு

**स यो ह वै तत्परमं ब्रह्म वेद**
**ब्रह्मैव भवति नास्य अब्रह्मवित्कुले भवति ।**
**तरति शोकं तरति पाप्मानं**
**गुहाग्रन्थिभ्यो विमुक्तोऽमृतो भवति ॥ ९॥**

ஸ யோ ஹ வை தத்பரமம் ப்ரஹ்ம வேத
ப்ரஹ்மைவ பவதி நாஸ்ய அப்ரஹ்மவித் குலே பவதி ।
தரதி சோகம் தரதி பாப்மானம்
குஹாக்ரந்திப்யோ விமுக்தோ(ம்)ருதோ பவதி ॥ 9 ॥

*ய: ஹ வை – யார்; தத் – அந்த; பரமம் – மேலான; ப்ரஹ்ம – பரம்பொருளை; வேத – உணர்ந்திருக்கிறானோ; ஸ: – அவன்; ப்ரஹ்ம ஏவ – பரம்பொருளாகவே; பவதி – ஆகிறான்; அஸ்ய – அவனது; குலே – வம்சத்தில்; அப்ரஹ்ம வித் – பிரம்ம ஞானி அல்லாதவன்; ந பவதி – பிறக்க மாட்டான்; சோகம் – கவலை; பாப்மானம் – பாவம்; தரதி – கடக்கிறான்; குஹாக்ரந்திப்ய: – மனக்கோணல்கள்; விமுக்த: – விடுபடுகிறான்; அம்ருத: – அழிவற்றவனாக; பவதி – ஆகிறான்.*

**9. மேலான பரம்பொருளை உணர்ந்தவன் பரம் பொருளாகவே ஆகிறான். பிரம்ம ஞானி அல்லாத யாரும் அவனது குலத்தில் பிறக்க மாட்டான். அவன் கவலையும் பாவமும் அற்றவன் ஆகிறான். மனக்கோணல்களிலிருந்து விடுபடுகிறான்.**

இறைவனை உணர்கின்ற ஒருவன் எப்படி பரம் பொருளாகவே ஆகிறான், அதாவது தன் தனித்துவத்தை இழந்து ஒருமையுணர்வில் நிலைக்கிறான் என்பதை #7–8 மந்திரங்களில் கண்டோம்.

இறையனுபூதி பெற்ற ஒருவனின் குலத்தில் பிரம்ம ஞானிகளே அதாவது இறையனுபூதி பெற்றவர்களே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



பிறப்பார்கள். இங்கே குலம் என்பதை பரம்பரை என்று கொள்ள வேண்டும் என்று விளக்குகிறார் சுவாமி பூதேஷானந்தர். இறையனுபூதி பெற்ற ஒருவரின் வழிகாட்டு தலின்படி சாதனைகள் செய்பவன் கவலையும் பாவமும் அற்றவன் ஆகிறான்; மனக்கோணல்களிலிருந்து விடுபடு கிறான். இறுதியாக இறையனுபூதியும் பெறுகிறான்.

## உயர் உண்மைகளை யாருக்குச் சொல்வது?

உபநிஷதங்களையும் அதுபோன்ற உயர் உண்மைகளை யும் தகுதி வாய்ந்தவர்களிடம் மட்டுமே சொல்ல வேண்டும். யாரிடம் சொன்னால், அவர்கள் சாதனைகள் செய்து இறையனுபூதிக்காக முயல்வார்களோ அவர்களுக்கு மட்டுமே சொல்ல வேண்டும்.

**तदेतदृचाऽभ्युक्तम्—**
**क्रियावन्तः श्रोत्रिया ब्रह्मनिष्ठाः**
**स्वयं जुह्वत एकर्षिं श्रद्धयन्तः ।**
**तेषामेवैतां ब्रह्मविद्यां वदेत**
**शिरोव्रतं विधिवद्यैस्तु चीर्णम् ॥ १० ॥**

ததேதத் ரிசாऽப்யுக்தம்—
க்ரியாவந்தः ச்ரோத்ரியா ப்ரஹ்மநிஷ்டா:
ஸ்வயம் ஜுஹ்வத ஏகர்ஷிம் ச்ரத்தயந்தः ।
தேஷாமேவைதாம் ப்ரஹ்மவித்யாம் வதேத
சிரோவ்ரதம் விதிவத்யைஸ்து சீர்ணம் ॥ 10 ॥

தத் ஏதத் – இது; ரிசா – மந்திரத்தால்; அப்யுக்தம் – கூறப்படுகிறது; க்ரியாவந்தः – சாதனைகள் செய்பவன்; ச்ரோத்ரியாः – கற்றுணர்ந்தவன்; ப்ரஹ்மநிஷ்டாः – இறைவனில் நிலைபெற்றவன்; ச்ரத்தயந்தः – சிரத்தை உள்ளவன்; ஏகர்ஷிம் – அக்கினியில்; ஸ்வயம் – தன்னை; ஜுஹ்வத – சமர்ப்பிப்பவன்; சிரோவ்ரதம் – சிரோவிரதத்தை;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



விதிவத் – சாஸ்திர விதிகளின்படி; சீர்ணம் – கடைப் பிடிப்பவன்; யை: து – யாரால்; தேஷாம் ஏவ – அவர்களுக்கு மட்டுமே; ஏதாம் – இந்த; ப்ரஹ்மவித்யாம் – ஆன்மீக ஞானத்தை; வதேத – சொல்ல வேண்டும்.

**10. வேத மந்திரங்களில் இவ்வாறு கூறப் பட்டுள்ளது: 'சாதனைகள் செய்பவன், கற்றுணர்ந் தவன், இறைவனில் நிலைபெற்றவன், சிரத்தை உள்ளவன், தன்னையே ஆஹுதியாக அளித்து வாழ்பவன், சாஸ்திர விதிகளின்படி சிரோவிரதத்தைக் கடைப்பிடிப்பவன்—இத்தகையோருக்கு மட்டுமே ஆன்மீக ஞானத்தை அளிக்க வேண்டும்.'**

சிரோ விரதம் என்றால் தலையில் அக்கினியை வைத்துக்கொண்டு செய்யப்படுகின்ற ஒரு சாதனை. இதுபற்றி அதர்வண வேதம் கூறுகிறது. அதாவது சாதனைகளைத் தவறாமல் செய்பவனிடம் மட்டுமே உயர் உண்மைகளைக் கூற வேண்டும் என்பதை உபநிஷதத்திற்கு ஒரு பின்னுரை யாகக் கூறுகிறது இந்த மந்திரம்.

மாமுனிவர்களுக்கு வணக்கம்

**तदेतत्सत्यमृषिरङ्गिराः पुरोवाच नैतदचीर्णव्रतोऽधीते ।**
**नमः परमऋषिभ्यो नमः परमऋषिभ्यः ॥ ११ ॥**

ததேதத் ஸத்யம் ரிஷிரங்கிரா: புரோவாச
நைததசீர்ணவ்ரதோऽதீதே ।
நம: பரமரிஷிப்யோ நம: பரமரிஷிப்ய: ॥ 11 ॥

தத் ஏதத் – இந்த; ஸத்யம் – உண்மையை; அங்கிரா: – அங்கிரஸ்; ரிஷி: – முனிவர்; புரா – முன்பு; உவாச – கூறினார்; அசீர்ணவ்ரத: – சாதனைகள் செய்யாதவன்; ஏதத் – இதனை; ந அதீதே – படிக்கக் கூடாது; பரமரிஷிப்ய: – மாமுனிவர் களுக்கு; நம: – வணக்கம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



**11. முன்பு இந்த உண்மையை அங்கிரஸ் என்ற முனிவர் உபதேசித்தார். சாதனைகள் செய்யாதவன் இந்த உபநிஷதத்தைப் படிக்கக் கூடாது.**
**இந்த உபநிஷத உண்மைகளை அளித்த மாமுனிவர் களுக்கு வணக்கம், மாமுனிவர்களுக்கு வணக்கம்.**

*சாதனை வாழ்க்கை என்ற ஒன்றை மட்டுமே நோக்க மாகக் கொண்டவன்தான் உபநிஷதங்களைப் படிக்க வேண்டும் என்பதை இந்த மந்திரம் ஓர் எச்சரிக்கைபோல் கூறு கிறது. சாதனை வாழ்க்கையில் முன்னேறுவதற்காக மாமுனி வர்களைப் பணிவதுடன் உபநிஷதம் நிறைவுறுகிறது.*

இதி முண்டகோபநிஷதி த்ருதீய முண்டகே த்விதீய: கண்ட: ॥

ஓம் பத்ரம் கர்ணேபி: ச்ருணுயாம தேவா: । பத்ரம் பச்யேமாக்ஷபிர் யஜத்ரா: । ஸ்திரைரங்கைஸ் துஷ்டுவாகும்ஸஸ்தனூபி: । வ்யசேம தேவஹிதம் யதாயு: ॥

ஸ்வஸ்தி ந இந்த்ரோ வ்ருத்த ச்ரவா: । ஸ்வஸ்தி ந: பூஷா விச்ववேதா: । ஸ்வஸ்தி நஸ்தார்க்ஷ்யோ அரிஷ்டநேமி: । ஸ்வஸ்தி நோ ப்ருஹஸ்பதிர் ததாது ॥ ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ॥ [1]

---

1. பதவுரை மற்றும் விளக்கங்களுக்கு பக்.2–3 பார்க்க.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



# 3:2
# இறையனுபூதி

## சுருக்கம்

1. முதற்படி: ஆன்ம ஞானம்: 1
2. ஆன்ம ஞானம் ஏன் அவசியம்?: 2
3. ஆன்ம ஞானத்திற்கான நிபந்தனைகள்: 3–4
   மன ஏக்கம்: 3
   வலிமை: 4
4. ஆன்ம ஞானி இறைவனை அடைகிறான்: 5–6
5. ஆன்ம ஞானியின் உடல் வீழும்போது என்ன நடக்கிறது?: 7–8
6. இறையனுபூதியின் விளைவு: 9
7. உயர் உண்மைகளை யாருக்குச் சொல்வது?: 10
8. மாமுனிவர்களுக்கு வணக்கம்: 11

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

# அகராதி


அக்னிர்மூர்தா சக்ஷுஷீ 2:1.4
அத: ஸமுத்ரா 2:1.9
அதர்வணே யாம் 1:1.2
அரா இவ ரதநாபௌ 2:2.6
அவித்யாயாமந்தரே 1:2.8
அவித்யாயாம் பஹுதா 1:2.9
ஆவி: ஸன்னிஹிதம் 2:2.1
இஷ்ட்டாபூர்த்தம் 1:2.10
ஏதஸ்மாஜ்ஜாயதே 2:1.3
ஏதேஷு யச்சரதே 1:2.5
ஏஷோऽணுராத்மா 3:1.9
ஏஹ்யேஹீதி தம் 1:2.6
காமான் ய: காமயதே 3:2.2
காளீ கராளீ ச 1:2.4
சுதா: கலா: பஞ்சதச 3:2.7
தத்ராபரா ரிக்வேதோ 1:1.5
ததேதத் ஸத்யம் ரிஷி 3:2.11
ததேதத்ஸத்யம்மந்த்ரேஷு 1:2.1
ததேதத் ரிசாऽப்யுக்தம் 3:2.10
தப:ச்ரத்தே யே 1:2.11
தபஸா சீயதே ப்ரஹ்ம 1:1.8
தஸ்மாச்ச தேவா பஹுதா 2:1.7
தஸ்மாதக்னி: ஸமிதோ 2:1.5
தஸ்மாத் ரிச: ஸாம 2:1.6
தஸ்மை ஸ வித்வான் 1:2.13
தஸ்மை ஸ ஹோவாச 1:1.4
திவ்யோ ஹ்யமூர்த்த: 2:1.2
த்வா ஸுபர்ணா ஸயுஜா 3:1.1
தனூர்க்ருஹீத்வா 2:2.3
ந சக்ஷுஷா க்ருஹ்யதே 3:1.8
ந தத்ர ஸூர்யோ பாதி 2:2.10
நாயமாத்மா ப்ரவசனேன 3:2.3
நாயமாத்மா பலஹீனேன 3:2.4
பரீக்ஷ்ய லோகான் 1:2.12
புருஷ ஏவேதம் விச்வம் 2:1.10
ப்ரணவோ தனு: சரோ 2:2.4
ப்ராணோ ஹ்யேஷ ய: 3:1.4
ப்லவா ஹ்யேதே 1:2.7
ப்ருஹச்ச தத் திவ்யம் 3:1.7
ப்ரஹ்மா தேவானாம் 1:1.1
ப்ரஹ்மைவேதமம்ருதம் 2:2.11
பித்யதே ஹ்ருதய க்ரந்தி: 2:2.8
யத்ததத்ரேச்யம் 1:1.6
யதா நத்ய: ஸ்யந்தமானா: 3:2.8
யதா ஸுதீப்தாத் 2:1.1
யதோர்ணநாபி: ஸ்ருஜதே 1:1.7
யதர்ச்சிமத் யத் 2:2.2
யதா பச்ய: பச்யதே 3:1.3
யதா லேலாயதே 1:2.2
யம் யம் லோகம் 3:1.10
யஸ்மின் த்யௌ: 2:2.5
யஸ்யாக்னிஹோத்ரம் 1:2.3
ய: ஸர்வஜ்ஞ: 1:1.9
ய: ஸர்வஜ்ஞ: 2:2.7
வேதாந்த விஜ்ஞான 3:2.6
சௌனகோ 1:1.3
ஸத்யமேவ ஜயதே 3:1.6
ஸத்யேன லப்ய: 3:1.5
ஸப்த ப்ராணா: 2:1.8
ஸமானே வ்ருக்ஷே 3:1.2
ஸம்ப்ராப்யைனம் 3:2.5
ஸ யோ ஹ வை தத் 3:2.9
ஸ வேதைதத் பரமம் 3:2.1
ஹிரண்மயே பரே கோசே 2:2.9




CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



ஒரே போன்ற இரண்டு பறவைகள்
ஒரே மரத்தில் அமர்ந்திருக்கின்றன.
அது போல், ஜீவனும் ஆன்மாவும்
ஒரே உடம்பினுள் உள்ளனர்...

-பக். 32

ISBN 81-7823-015-1



புத்தகங்கள் வெப்தளம்மூலம் ஆர்டர் செய்ய www.sriramakrishnamath.org
ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை 4, email : srkmath@vsnl.com

Mundaka Upanishadam (Nizhalum Nijamum) (Tamil) Rs. 25.00

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.